Registered as a News Paper


பக்கம் – 24

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் – 14 வெள்ளி – 26 22 – 28 ஆகஸ்ட் 2003




## நிலைப்பாட்டை தெளிவாக விளக்கியுள்ளோம்...




## மூடிமறைப்புகள்...

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 22.08.2003
மின் அஞ்சல் : Ehatham@sltnet.lk


## அணிவகுக்கும் கேள்விகளும்... அடுத்துவரும் வாரங்களும்...

**இடைக்கால நிர்வாகம்** தொடர்பாக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக தென்பகுதியில் சிங்களப் பேரினவாத சக்திகள் கடுமையான எதிர்ப்பையும் விமர்சனங்களையும் முன்வைத்துவருகின்ற வேளையில் அது தொடர்பாக ஆராய்ந்து மாற்று யோசனைகளை முன்வைக்கும் நோக்குடன் சர்வதேச நிபுணர்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்வதற்காக விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரின் தலைமையிலான குழுவொன்று பாரிஸ் சென்றுள்ளது.

சமாதான நகர்வில் இது ஒரு முக்கியமான கட்டமாகும். அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகயோசனைவரைபுகள், சனாதிபதியால் பரிசீலிக்கப்படாத நிலையில், தனக்கு வழங்கப்பட்ட பிரதிக்கும் விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்ட பிரதிக்குமிடையே முரண்பாடுகள் உள்ளதென அவர் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில் விடுதலைப்புலிகள் இந்த யோசனைகள் குறித்து ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரான்சின் அனுசரணையுடன் பாரிஸில் விடுதலைப்புலிகள் அரசின் யோசனைகளை ஆராயும் வேளையில், சிறிலங்காவில் ஜே.வி.பியினர் இதே இடைக்கால நிர்வாக யோசனைகளுக்கு எதிராக தமது ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்திக்கொண்டும் உள்ளனர்.

'சிகல உறுமய' கட்சி இதற்கு எதிரான செயற்பாடுகளுக்காக கொழும்பில் 'உண்டியல்' குலுக்கி நிதிசேகரிக்கத் தொடங்கியுள்ளது.

இடைக்கால நிர்வாகத்தையே தனிநாட்டுக்கான அத்திவாரமாக பூதாகரமாகக் காட்ட முனையும் சிங்கள தீவிரவாதிகள் ஊடகங்களினூடாக தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவதில் முனைந்து வருகின்றனர். அரசும் புலிகளும் எடுக்கும் முடிவுகளையெல்லாம் தான் ஆதரிப்பேன் என்று எவரும் பகற்கனவு காண வேண்டாம் என சனாதிபதி சூளுரைத்து வருகிறார்.

இவற்றிற்கு மத்தியில் தான் புலிகள் இதனைப் பரிசீலிக்க சர்வதேச நிபுணர்களின் ஆலோசனையுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளப் போகின்றனர். இது ஒரு அழுத்தமான - ஆரோக்கியமான நிலைப்பாடாகும். எந்த சர்வதேச சமூகம் சமாதானத்தை வலியுறுத்துகின்றதோ அதே சர்வதேச சமூகத்தின் நிபுணர்களையே அந்த யோசனைகளை ஆராயச் செய்து, அதன் நியாயத் தன்மையை பரிசீலித்து முடிவெடுக்க வைப்பது ஒரு சரியான தீர்மானமாகவே உள்ளது.

தமிழர்கள் எதனை விரும்புகிறார்கள்?

அரசாங்கம் எதனை தரவிரும்புகிறது?

இரண்டு கேள்விகள் இங்கே முன்வைக்கப்படுகின்றன. அரசு தமிழ்மக்கள் விடயத்தில் நியாயபூர்வமாக நடக்குமா? அப்படி நடக்கவேண்டுமென்று சர்வதேச சமூகம் விரும்புமா? அந்தவகையில் இந்த யோசனைகளை ஆய்வு செய்து சர்வதேச நிபுணர்கள் தமது முடிவைத் தெரிவிப்பார்களா? அப்படி முன்வைக்கப்படும் மாற்று யோசன்யை அரசு ஏற்றுக் கொள்ளுமா? அரசு ஏற்க முன்வந்தாலும் சனாதிபதியின் பின்னால் அணிதிரளும் சிங்கள பௌத்த தீவிரவாத சக்திகள் அதனை அமுல் செய்ய விடுவார்களா...?

எத்தனையோ கேள்விகள் எழவே செய்கின்றன. இக்கேள்விகள் சமாதானத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளநிலையில்....

அடுத்துவரும் வாரங்கள் சமாதானம் நகருமா? நிற்குமா? சரியுமா? என்பதை தீர்மானிப்பதாக அமையும் என்றே எண்ணத் தோன்றுகிறது. ●

## தூரனின் பார்வை

# தொலைந்து கொண்டு வரும் 'தொலைநோக்கு' நம்பிக்கைகள்

'இலங்கைஅரசும்- விடுதலைப் புலிகளும் தூர நோக்குடன் செயற்பட்டால் சமாதானம் சாத்தியமாகும்' என்ற ஒரு கருத்தை யாழ் குடா சென்ற நோர்வே நாட்டின் மனிதஉரிமை ஆர்வலரான- கரித்தாஸ் நிறுவன மனித உரிமைகள் அமைப்பின் அதிகாரி ஜில் பேன்ட் என்பவர் தெரிவித்துள்ளார்.

-சமாதானம் என்பது ஒரு வழிப்பாதையல்ல.

பரஸ்பரம் நம்பிக்கை, தீர்க்கமான புரிந்துணர்வு, உறுதியான விசுவாசம், அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடு எல்லாவற்றிலும் மேலாக சுயநல அரசியல் அபிலாசைகளுக்கு அப்பாலான மனித உரிமைகள் மீதான அக்கறையுடன் கூடிய விட்டுக் கொடுப்புஆகியவற்றின் அடிப்படையிலான பன்முகப்பாதைகளில் செல்வதன் மூலமே சமாதானமென்ற இலக்கை எட்டமுடியும்.

சாத்தியமற்ற கோட்பாடுகளையும், சமாதானத்தின் நுழைவை சகலவழிகளிலும் அடைத்துள்ள ஒரு அரசியல் யாப்பையும், சமாதானத்தை போரின் மூலமே எட்டமுடியும் என்ற 'மோட்டுத்தனமான' பேரினவாதக் கொள்கையில் விடாப்பிடியாக இருக்கும் நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தையும் தன்வசம் கொண்டுள்ள, ஒரு சனாதிபதியையும் கொண்டுள்ள ஒரு நாட்டில் 'அமைதி'யை நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது என்பது எந்தவகையிலும் சாத்தியமான தொன்றாக இருக்கமுடியாது.

அதிகார வர்க்கத்தில் இருப்போர் பாதிக்கப்பட்ட உரிமைகளுக்காக இரத்தம் சிந்திப்போராடும், ஒடுக்கப்பட்ட மக்கள் மீது சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் ஒரு தீர்வைத் திணிக்க சமாதானம் பற்றி பேசலாம். ஆனால் அது பிரச்சினையை மேலும் புரையோடிப் போகவே வைக்கும்.

தூரநோக்குடன் செயற்படுதல் என்பது முக்கியமான ஒன்றுதான். இதில் அரசாங்கத்தின் பங்கே மிக முக்கியமானதாகும். தொலை நோக்குடன் பிரச்சினையை அணுகி அதன் ஆழ மூலங்களை ஆராய்ந்து, சமாதானத்திற்கான வழிவகைகளை தேர்வுசெய்து, பாதிக்கப்பட்ட, போராடும் மக்களின் அபிலாசைகளை நிறைவுசெய்யும் வகையிலான தீர்வொன்றை முன்வைப்பதும் அதன் மூலம் சமாதானத்தை உறுதிப்படுத்துவதும் அரசின் பொறுப்பேயாகும்.

சிறிலங்காவின் இனப் பிரச்சினையைப் பொறுத்தவரையில். தமிழ் மக்கள் மிகுந்த தொலைநோக்குடனும் தீர்க்கமான இலக்குடனும் தான் மாற்றுவழி ஏதும் அற்ற நிலையில் தமது ஆயுதப் போராட்ட வழிமுறையைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அவர்கள் எந்த இனத்திற்கும் எதிராக ஆயுதம் ஏந்தவில்லை. தம்மை அடக்கி அழிக்க இராணுவ பலத்தைப் பிரயோகித்த அரசொன்றிற்கெதிராகவே ஆயுதமேந்திப்போராடினார்கள்.

ஆகவே அவர்களின் இலக்கு தமிழ் மக்களின் உரிமையின் அடிப்படையிலான நியாயபூர்வமான ஒன்றாகவே இருந்தது.

-அவர்களை போராடத்தள்ளியது அரசே.

-ஆகவே அவர்களின் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டியதும் அரசேயாகும்.

-அத்தகையதோர் தீர்வை எட்டுவதற்கு தடையாக உள்ள அனைத்தையும் நீக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கே உள்ளது.

எனவே இந்த விடயத்தில் தொலை நோக்குடன் செயற்பட வேண்டிய பொறுப்பு பெருமளவிற்கு அரசாங்கத்திற்கே உள்ளது.

அரசின் நேர்மை, புரிந்துணர்வு, தீர்க்கமான செயற்பாடு மட்டுமே சமாதானத்தை உறுதிப்படுத்த முடியும்.

இன்றைய சமாதானத்திற்கான நுழைவாயிலை ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியதன் மூலம் திறந்து வைத்தவர்கள் விடுதலைப்புலிகளே.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் சமாதானம் குறித்த நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் தான் அவர்கள் தொலை நோக்குச் சிந்தனையுடன் கையொப்பமிட்டார்கள்.

சர்வதேச சமூகம் ஏற்பாடு செய்த அரங்குகளில் எல்லாம் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டார்கள் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்தார்கள்.

உடன்பாட்டின் விதிகளை நடைமுறைப்படுத்தக் கோரினார்கள். எதனையும் அவர்கள் இரகசியமாக மேற்கொள்ளவில்லை. வெளிப்படையாகவே நடந்து கொண்டார்கள்.

ஆனால் அந்த அளவுக்கு சிறிலங்காவையாளும் இரட்டை அரசுகள் விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை.

சமாதானம் பற்றிப் பேச விரும்பிய அரசு பேச்சுக்களைத் தொடர்ந்து கொண்டு காலத்தைக் கடத்த எடுத்த ஆர்வத்தை, சமாதானத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிகளை அமுல்படுத்துவதில் காட்டவில்லை.

சனாதிபதிக்கும்-பிரதமருக்குமான முரண்பாடுகளுடன் மோதிக்கொள்வதில் சமாதானம் பின் தள்ளப்பட்டு சமாதானத்தின் அடிப்படையிலான சிறிலங்கா அரசுக்குரிய நலன்களை- வளங்களை மேம்படுத்தும் நடவடிக்கையே தீவிரப் படுத்தப்பட்டது.


சமாதானத்தின் பேராலும் இராணுவ நலன்களுக்கே அரசு முன்னுரிமையளித்து- தமிழ் மக்களின் குறைந்தபட்ச அபிலாசைகளைக் கூட நிறைவேற்ற மனமின்றி காலம்கடத்தியது.

இராணுவ நலன்களைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதன் மூலம் சமாதான சூழலை அச்சுறுத்தலின் அடிப்படையில் தக்கவைக்கலாம் என அரசு நினைப்பது தொலை நோக்குச் சிந்தனையுடன் கூடிய சமாதான நடவடிக்கையாகாது.

குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக பெரும் ஆர்வம் காட்டும் அரசால் உயர் பாதுகாப்பு வலயப் பகுதி தொடர்பான மக்களின் கோரிக்கையில் ஆர்வம் காட்ட முடியவில்லையே...

போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் படையினரை விடுவிக்க முனைப்புக்காட்டும் அரசால், காரணமின்றி பொய்க்குற்றச் சாட்டுகளின் பேரில் விசாரணையின்றி நெடுங்காலமாக சிறையில் வாடும் அப்பாவித் தமிழ்க்கைதிகளின் விடயத்தில் அக்கறை காட்ட முடியவில்லையே...

அரசின் சமாதானம் குறித்த தொலைநோக்குச் சிந்தனையில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கவைக்க இப்படி எத்தனையோ காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.




சமாதானத்தின் பேரால் அரசு தன்னை வலுப்படுத்திக் கொள்ள மட்டுமே அக்கறை செலுத்துகிறது. விடுதலைப்புலிகள் தொலை நோக்குச் சிந்தனையுடன், தாம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்ற போதிலும், அமைதி காத்து வருவது சர்வதேச சமூகம் சமாதானம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகளுக்கு எந்த விதமான ஊறும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான்.

இது விடுதலைப்புலிகளின் பலவீனம் அல்ல என்பதை அரசும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும்.

சிறுபான்மைச் சமூகத்தின் மனித உரிமைகளை நிராகரிக்கும் அரசியல் யாப்பின் அடிப்படையில் இயங்கும் ஓர் அரசு, அந்தமக்களுக்கு அந்த யாப்பின் அடிப்படையில் ஒரு நியாயமான தீர்ப்பை வழங்கும் என எந்த ஒரு இனமும் 'தொலைநோக்கு' சிந்த னையின் பாற்பட்டு நின்று நம்பிக் கொண்டி ருக்க முடியுமா?

இதற்கான பதிலை மனித உரிமை ஆர்வலர்கள் தான் அரசிடம் கேட்டுக் கூறவும் வேண்டும். ●

மனிதத் தன்மையின் நிழலே, கலை. – ஹென்றி ஜேம்ஸ்

# “அடிப்பவனைத் தடுப்பதிற்தான் சமாதானம் அடிக்கப்படுபவனைப் பிடிப்பதிலல்ல”

“குரங்குப்பாஞ்சான் விடயம்ஒருமுக்கிய விவகாரமாகத்தான் இருக்கிறது.” என்று நோர்வேயின் விசேடதூதுவர் கூறியதாக அவருடன் பழகும் அரசியல் வட்டாரத்தைச்சேர்ந்த ஒருவர்கூறினார்.

புலிகள் இது விடயத்தில் நெகிழ்ந்து கொடாமைதான் இதற்குரிய காரணம் என்று அவர்கள் தரப்பு சொல்லுகின்றது.

குடா தொடர்பாக ரணில் அரசாங்கம் தன்னுடன் ஒப்பந்தம் செய்திருக்கும் போது இடைக்கால நிர்வாகம் ஒன்றுக்கான சூழல் கருக்கட்டும் வாய்ப்புக்கான நிலையில் ரணில் மீது அழுத்தம் கொடுக்க குரங்குப்பாஞ்சான் ஒரு தக்கவிடயம் என்று எண்ணுகிறது போல உள்ளது.

ரணிலோ புலிகளின் மிக உறுதியான நிலைப்பாட்


இத்தனை சிக்கலினதும் மூலமுடிச்சாய் அமைந்தது கண்காணிப்புக்குழு அந்த முகாமை புலிகள் பின்வாங்க வேண்டுமென்று விடுத்த அறிவிப்பே.

இதுவொரு பெரிய விவகாரமென்று உணரும் அவர்கள் தரப்பு தமது தீர்மானத்தின் முன் ஏன் அதற்கான ஆழமான விசாரணைகளை நடத்தவில்லை? ஒரு தீர்மானம் எடுப்பதற்கு போதுமான அவகாசத்தை

தென்று வாதித்த சிறிலங்காத் தரப்புத் தகவல் பொய்யென்று கண்காணிப்புக்குழுவால் கண்டறியப்பட்ட போதும் அதுஒரு விவகாரமாக ஆக்கப்படவில்லை. இவையெல்லாம் மிகச் சொற்பகாலத்தில் தணிவிக்கப்பட்டுவிட்டன.

ஆனால் இப்பொழுது உரிய கவனத்தில் எடுக்காது கண்காணிப்புக்குழு விடுத்த முடிவிற்கு தமிழர் தரப்பு நெகிழ்ந்து உட்படவேண்டுமென்று எண்ணினால் சமாதானத்தின் பங்குதாரர்களான இருதரப்பில் தமிழர் தரப்பை அவர்கள்ஒரு பொருட்டாக எண்ணவில்லை என்று எடுத்துக்கொள்வதை விட வேறு எப்பிடித்தான் இதைக் கொள்ளமுடியும்.

இந்த விவகாரத்தின் பின்னணியில் பிரான்சில் புலிகள் தமது சட்ட,அரசியல் வல்லுநர்களுடன் ஆராய்ந்தபின் ஒரு இடைக்கால வரைபை அரசுக்குக்கையளிக்கவுள்ளனர். ஏற்கனவே நின்று போயுள்ள பேச்சும் குரங்குப்பாஞ்சானும் சமாதானத்தை கத்திமுனைக்கு கொண்டுவந்துவிட்டன. சமாதானமின்றேல் எதுவுமின்றி இருக்கும் ரணிலின் தற்போதைய அரசியல் நிலையில் கத்திமுனையிலிருக்கும் சமாதானத்தை அவர் இறக்கி வைக்க வேண்டியவராகவிருக்கிறார்.




இனப்பிரச்சினையின் மிகப்பெரிய யுத்த நிறுத்த காலமாகவிளங்கும் இக்காலத்தில் குரங்குப்பாஞ்சான் போன்று வேறு எந்த விடயமும் இத்தனை தூரம் விவகாரமாக ஆக்கப்பட்டதில்லை. அல்லது அனுசரணைத் தரப்பால் வெளிக்கொணரப் பட்டதும் இல்லை.

இராணுவத்தரப்பு யுத்தம் ஒன்றிற்கான எதிர்பார்ப்பில் கிழக்கில் புலிகளின் கவனம் அதிகமாக இருப்பதாகவும் அதில் குரங்குப்பாஞ்சானின் அமைவிடம் திருகோணமலை நகரத்தையும் துறைமுகத்தையும் பாதுகாப்பதற்கு கேந்திர முக்கியத்துவம் மிக்கதென்று கருதுவதாலும் அதனை தம்வசப்படுத்திக்கொள்ள வேண்டும் என குறியாக நிற்கிறது. ஏலவே யுத்தகாலத்தில் படைத்தரப்பு இதற்கு முயற்சி செய்து முடியாது போனதாக புலிகள் கூறுகின்றனர்.

கண்காணிப்புக்குழு அவசரப்பட்டு தான் வெளியிட்ட புலிகளின் வெளியேற்றம் தொடர்பான முடிவை பின்வாங்குவது தனது தீர்மானம் பற்றி, நம்பகம் பற்றி கேள்விகளை எழுப்பும்என விசாரணைகள், மறுபாரிசீலனைகளுக்கு போகாது இவ்விடயம் குறித்த தனது முடிவில் தொங்கிக் கொண்டு நிற்கிறது.

சனாதிபதி சந்திரிகாவோ கண்காணிப்புக்குழுவின் தீர்மானம், புலிகளின் உறுதியான நிலைப்பாடு, அரசாங்கத்தின் நெருக்கடி இதை வைத்துக் கொண்டு சிங்கள மக்களின் இறைமையை ரணில் தாரை வார்த்துவிட்டார் என்று களத்தில் குதித்து அனுசரணைக்கு இந்தியாவையும் அழைத்து ஆட்சிமாற்றத்துக்கு எதையாவது பண்ணிவிடலாமா என்ற நப்பாசையில் இதைக் கொதிநிலையில் பேணிக் கொண்டிருக்கிறார்.

இந்தியாவோ சீனன்

டினால் ஏலவே நிலை தழம்பிப் போயிருக்கும் பேச்சு இந்த விடயத்தால் முறிவைக்கண்டுவிட நேர்ந்தால் சமாதானத்தின் மீதுகட்டப்பட்டிருக்கும் தனதும் தனது கட்சியினதும் எதிர்காலம் என்னவாகிவிடும் என்ற தவிப்பில் இருக்கிறார்.ஆனால் சந்திரிகா மீதான அச்சத்தில் தன்னை ஒரு விட்டுக் கொடாதவனாகக் காட்டிக்கொண்டு புலிகளை நெகிழ்விக்க அவர் வெளியுதவியை அதிகம் நாடுகிறார்.

புலிகளோ இரத்தம் சிந்தி உயிர்களைப்பலியிட்டுத்தக்கவைத்த இடத்தை, அம்மாவட்டத்தின் வலுச்சம நிலையைப்பேணும் கேந்திர முக்கியத்துவம் மிக்கதான இடத்தை விட்டுக்கொடுப்பது உள் நெருக்கடிகளை உருவாக்குமென்பது மட்டுமல்ல, யுத்தரீதியான அர்த்தத்திலும் சரி சமாதான ரீரியான அர்த்தத்திலும் சரி இது தம்மை பலவீனப்படுத்தும் என உணருவதால் இதில் உறுதியாக இருக்க எண்ணுகிறார்கள்.

நோர்வேத்தரப்போ,கண்காணிப்புக்குழு தனது அறிக்கையைப்பின்வாங்குவது தனது அனுசரணைப் பாத்திரத்தைப் பாதிக்கும் என்று புலிகளை நெகிழ்விக்க முயற்சியெடுத்து வருகிறது.

இப்படி இப்பொழுதுள்ள அரசியலில் முக்கிய கதாபாத்திரங்கள் எல்லாமே குரங்குப்பாஞ்சான் விடயத்தை தத்தமது தேவையின் பொருட்டு கையிலெடுத்து வைத்திருப்பது மட்டுமல்ல அதைக் கைவிடாமல் இருப்பதிலும் பிடிவாதமாக இருக்கின்றன.

பெறவில்லை? ஏன் இது விடயத்தில் புலிகள் தரப்பை நாடவில்லை? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

இப்பொழுது பின்வாங்குவது தமது நம்பகத் தன்மைக்கும் தமது பணிக்கும் பாதகமானதென சிங்கள மக்களின் மனோநிலையை மட்டும் கருத்தில்கொண்டு எண்ணுகின்ற அவர்கள் ஒரு பெரிய விவகாரத்தை அதற்குரிய பொறுப்போடும் நிதானத்தோடும் கையாளாத கண்காணிப்புக்குழு மீது தமிழ் மக்கள் எப்படி நம்பிக்கை கொள்ளவேண்டும் என எண்ணுகிறார்கள்.

தமிழ் மக்களின் மனப்பாங்கிலிருந்து தமது நம்பகத் தன்மை கெட்டுப் போய்விடும், தமது பணி பலவீனமடைந்துவிடும் என்று எண்ணி அவர்கள் பின்வாங்குவது பற்றி ஏன் சற்றும் சிந்திக்கவில்லை? சிந்திக்கக்கூடாது?

மட்டக்களப்பில் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் இராணுவம் பொதுமக்களை சுட்டுக் கொன்றமை. கண்காணிப்புக் குழுவால் ஒரு விவகாரமாக்கப்படவில்லை. மானிப்பாயில் யுத்தநிறுத்த விதிமுறைகளுக்குட்பட்டு தமது அரசியல் பணிகளை செய்துவந்த பெண் போராளிகள் நடுவீதியில் வெறித்தனமாக தாக்கப்பட்ட போது அது ஒரு விவகாரமாக ஆக்கப்படவில்லை. நெடுந்தீவில்போராளிகள் தற்கொலை செய்ய நேர்ந்தபோது அது ஒரு விவகாரமாக ஆக்கப்படவில்லை.சர்வதேசகடற்பரப்பில் புலிகளின் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட போது அது தமது கடற்பரப்பிலேயே நடந்த

அதற்காக அதனை ஏற்றுக் கொள்ளப்போகிறார் என்று அர்த்தமாகாது. ஆனால், அந்த வரைவு குறித்து தமக்கு பெரிதளவில் முரண்பாடு இல்லையென்றும் அது குறித்துப் பேசலாம் என்றும் புலிகளை நேரடிப்பேச்சுக்கு ரணில் அழைக்கவே வாய்ப்பிருக்கிறது.

அப்போது தமது வரைவு குறித்து நேரடிப்பேச்சுக்காக ரணில் நெகிழ்வது போன்று விடுக்கப்படும் அழைப்பை புலிகள் தட்டிக்கழிக்காது ஏற்றுப்போவது புலிகளின் பொறுப்பாக இருக்கும்.

எனவே பேச்சு எப்படி முடியும் என்பதற்கப்பால் மீண்டும் தொடங்கும் என்பதற்கான சந்தர்ப்பமே உள்ளது.

அப்பொழுதும் குரங்குப்பாஞ்சான் புலிகளின் விட்டுக் கொடுப்பிற்குரியதாக இருக்க முடியாது. இருக்கவும்கூடாது. முன்னைய சம்பவங்கள் புலிகளை ஆத்திரமூட்டுவதாக, வேதனைப்படுத்துவதாக, சினமூட்டுபவையாக இருந்தன. புலிகள் அதற்கு பொறுமை காப்பது தமது நியாயத்தையோ பண்பையோ வெளிப்படுத்துவதற்குப்பொருத்தமானதாக இருந்திருக்கலாம்.

ஆனால் இதுஅப்படியில்லை. வலுச்சமநிலையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அதனால் தமிழ் மக்களின் அரசியல்தரப்பை பலவீனப்படுத்தக்கூடியது. எனவே இது எதுகுறித்தும் விட்டுக்கொடுப்பிற்குரியதாக இருக்கமுடியாது.

—ஜீ.கே

## ஓகோ அப்படியா!



சந்திரிகா தேசிய பத்திரிகையாளர்களை இராப்போசனத்திற்கு அழைத்துப் பேசியதில

“பிரபாகரன் சமஷ்டிக்கு சம்மதிப்பாரேயானால் நான் என்னுடைய தலையைவெட்டி அதை பிரபாகரனுக்கு அனுப்பி வைப்பேன்.”



ரணில் ஐ.தே.க புனரமைப்புக் கூட்டத்தில்...

“யுத்தத்திற்கு செல்வோமானால் நாம் மீண்டும் கடனாளிகளாவோம்.”



அநுரா தம்புல்ல கூட்டத்தில்

“ஜே.வி.பி-பொ.ஐ.மு கூட்டு அமைப்பதை எந்தக் கடவுள் வந்தாலும் நிறுத்த முடியாது. நான் உயிரோடு இருக்கும் போதே நிறைவேற்றுவேன்.”



மிலிந்த மொரகொட வவுனியாவில் படையினர் மத்தியில்

“புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற் கொண்டாலும் அரசாங்கம் பாதுகாப்புப்படையை பலப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.”



விமல் வீரவன்ச நுகேகொட பஸ்நிலையம் முன்பாக.

“ஐ.தே. முன்னணி அரசு இடைக்கால நிர்வாகம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு தனிநாடு வழங்க முற்படுகிறது. இதனை அனுமதிக்க மாட்டோம்.”



ஜெயலலிதா இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில்.

“இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே கடல் மீது பாலம் கட்டப்பட்டால் விடுதலைப்புலிகள் மூலம் தமிழகத்தில் வன்முறைக்கலாச்சாரம் பரவும்”



G.L பீரிஸ் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில்

“சமாதான முயற்சியிலே இந்தியாவின் பூரண ஒத்துழைப்பினை பெறுவதிலேயே அரசாங்கம் அதிக அக்கறை காட்டிவருகிறது.”

☞ கருணையைத் தீவிரமாகச் செயல்படுத்தாதவன், கொடியவனே. — ஜான் ரஸ்க்கின்

# நறுக்கென...

## சந்திரிகாவின் தணியாத தாகம் சமாதானத்திற்கான யுத்தமே!



சந்திரிகாவினது 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற தத்துவத்தில் இன்னமும் அழுங்குப் பிடியாகவே இருக்கிறார் போலுள்ளது. தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு 'போர் மூலம்' தான் தீர்வைக் காணமுடியும், விடுதலைப்புலிகளை போரில் தோல்விகாண வைத்தால் இனப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும், என்ற ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டினை ஏற்றுக்கொள்ளவேண்டிய சூழலிலேயே உள்ளார்.

ஜே.வி.பியுடனான கூட்டு தேர்தல் நலனுக்கு அவருக்கு தவிர்க்க முடியாத அவசியமாகவே மாறிவருகிறது.

எனவே ஜே.வி.பியின் தமிழர் பிரச்சினை தொடர்பான கோட்பாட்டை அவர் ஆதரிக்கவேண்டிய அவசியமும் உள்ளது.

வெளியே - சமாதானத்திற்கான தனது ஆதரவை காட்டுவது போல் பாசாங்கு செய்யும் சந்திரிகா முப்படைத்தளபதி என்றவகையில் பாதுகாப்பு படைத்தரப்பை பூரணமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே விரும்புகிறார். அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறார்.... அதுவும் தொலைநோக்குடன்...

அண்மையில் வெளியான பத்திரிகைச்செய்தியொன்று நாட்டை மீண்டும் யுத்தப்பாதைக்கு இடடுச்செல்லும் சதித்திட்டம் ஒன்று தொடர்பாக சனாதிபதி செயலகத்திற்கு மிக நெருக்கமான வட்டாரங்களை ஆதாரம் காட்டி தெரிவித்திருந்தது.

படைத்தரப்புக்கு ஆட்சேர்ப்பை தீவிரப்படுத்துமாறு கடுமையான உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார்.

முப்படை மற்றும் பொலிஸ்துறை தலைமைகளையும், சிரேஷ்ட அதிகாரிகளையும் அடிக்கடி சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதுடன் அறிவுறுத்தல்களையும் விடுத்துவருகின்றார். இதன்மூலம் அவர்கள் மீதான தனது நேரடிக்கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்தியும் வருகிறார்.

இதேவேளை தனது ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான போரை வெறித்தனத்துடன் மேற்கொள்ள ஆயுத உதவிகளையும், இராணுவ ஆலோசனைகள் மற்றும் இராணுவ உபகரணங்களையும் வழங்கிய ஆயுதவிற்பனை நாடுகளை இஸ்ரேல், உக்ரைன், பாகிஸ்தான் போன்ற நாடுகளின் படைத்துறை அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களை அடிக்கடி சந்தித்துப்பேசிவருகிறார்.

ஒருவேளை தனது அதிகாரபலத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக்கலைத்து வேறு ஒரு அரசை ஏற்படுத்த நேரில் அதனால் ஏற்படக்கூடிய அரசியல் குழப்பங்களில் இருந்து மக்களைத் திசைதிருப்ப, யுத்தப்பாதையை தேர்வு செய்வதை விட வேறு வழியெதுவும் அவருக்கில்லை.

எனவே யுத்தத்தை மேற்கொள்வதற்கு வேண்டிய சகல திட்டங்களையும் அவர் இப்போது மிகவும் இரகசியமாக மேற்கொண்டு வருவதாக சனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்ததாக அச்செய்தி விபரித்துள்ளது.

இதற்கு 'இந்திய ஒத்துழைப்பைப்பெற ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தையும், லக்ஸ்மன் கதிர்காமரையும் இந்தியாவுக்கு அனுப்பி விளக்கமளித்து வருவதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

எதுவானாலும் சந்திரிகா சமாதானத்திற்கு தயாரில்லை என்பது தெளிவு.

சமாதானத்திற்கான யுத்தம் என்ற நிலைப்பாட்டிலேயே அவர் தொடர்ந்து இயங்க நினைக்கிறார் என்பதும் தெளிவு.

இடைக்கால நிர்வாகம் என்ற தற்காலிகக் கட்டமைப்பையே நாட்டின் ஒரு பகுதியை பிரித்துக்கொடுக்கும் நடவடிக்கை என பிரச்சாரம் செய்து இனவெறியைத்தூண்டிவரும் சந்திரிகா போரின் மூலம் சிறிலங்காவை முற்றாக அழிக்க கங்கணம் கட்டிச்செயற்பட்டால் அதன்விளைவுகளை அவரது நிறைவேற்று அதிகாரத்தால் கூட ஒன்றும் செய்துவிட முடியாது.

## பாவச் சுமையை அதிகரிக்கும் 'கடிர்காம' யாத்திரைகள்.



எல்லாரும் கதிர்காமத்திற்கு காவடி எடுப்பதுதான் வழக்கம். ஆனால் லக்ஷ்மன் கடிர்காமரோ 'வெளிநாடுகளுக்கு' பல்வேறு வேண்டுதல்களுக்காக அடிக்கடி 'காவடி' எடுக்கும் கதை தெரியாததல்ல...

இப்போதெல்லாம் அவர் அடிக்கடி காவடி எடுப்பது இந்தியாவுக்குத்தான்.

இதில் ஒரு வேறுபாடு என்னவென்றால் முன்னரெல்லாம் அவரின் வெளிநாட்டுக் காவடி எடுப்புக்கான வேண்டுதல்கள் அவர்சார்ந்த, சந்திரிகா தலைமையிலான பேரினவாத ஆட்சியின் நலனுக்காகவே இருந்தது.

இப்போது அவரின் இந்தியக்காவடி எடுப்பின் நோக்கம் இந்தியாவுக்கு கெடுதல் ஏற்படக்கூடாதென்ற பரந்த மனத்தைக்கொண்டதாகக் கூறுகிறார்கள்(?) கதிர்காமர் - மன்னிக்கவும் கடிர்காமர் அப்புவின் - வேண்டுதல் எல்லாவற்றிலும் விடுதலைப்புலிகளால் ஆபத்து வருகிறது 'அரோகரா' என்ற எச்சரிக்கைக் கோஷமே மேலோங்கியிருக்கும்.

கிட்டத்தட்ட அபாயச் சங்கின் அலறலாகவே அவர்குரல் ஒலித்துவந்துள்ளதே தவிர ஆக்க பூர்வமாக இல்லை.

பேரினவாத அரசுகளின் மீதான, சந்திரிகாவின் மீதான விசுவாசத்தை வெளிக்காட்டும் அப்பட்டமான குரைப்பாகவே அது இருக்கும்.

தன்னைப்போல் முழுத்தமிழ் மக்களும் அடக்கியாழும் அதிகார வர்க்கப்பேரினவாதிகள் வழங்கும் பதவிகளையும் சலுகைகளையும் ஏற்றுக்கொண்டு அடி மைத்தன சொகுசில் ஆடம்பரமாக வாழ்ந்தால்போதும் என்பதே அவரின் அரசியல் தத்துவம்.

இதுவரைகாலமும் சிறிலங்காவுக்கு விடுதலைப்புலிகளால் ஆபத்து என்று வாய்கிழியக்கத்திய கடிர்காமர் இப்போது அது வலுவிழந்துபோன நிலையில் விடுதலைப்புலிகளால் இந்தியாவுக்கு ஆபத்து என்று இந்தியாவுக்குப்போய்நின்றே உளர ஆரம்பித்துள்ளார்.

இதன்மூலம் இந்தியாவினூடாக சமாதான நகர்வுகளையும் அதன் முன்னேற்றத்திற்கான முதற்படியாகக் கூறப்படும் இடைக்கால நிர்வாகத்தையும் எப்படியாவது குழப்பி, மீண்டும் போரை தொடங்குவதற்கான நடவடிக்கைகளிலேயே அவர் ஈடுபட்டுள்ளார்.

இது அப்பட்டமான தமிழின விரோத நடவடிக்கையேயாகும்.


வடக்கிலும் கிழக்கிலும் ஆக்கிரமித்து-உயர்பாதுகாப்பு வலயங்களை அமைத்து தமிழ் மக்களின் வாழ்வையும் வாழ்நிலங்களையும் நிர்மூலமாக்கி, பகிரங்கமாகவே அச்சுறுத்தல் விடுத்துநிற்கும் சிறிலங்கா இராணுவத்தால் தமிழ்மக்களுக்கு ஆபத்து, தமிழர் பிரதேசத்திற்கு ஆபத்து என்று சொல்வதற்கான இன உணர்வு சிறிதும் இல்லாத கடிர்காமர், தமிழரின் பாதுகாப்புக்கு முகாமமைத்து செயற்படும் விடுதலைப்புலிகளால் இந்தியாவுக்கும், இந்திய அபிலாஷைகளுக்கும் ஆபத்து என்று எச்சரிக்கை செய்வது கடைகெட்ட அயோக்கியத்தனம் மட்டுமல்ல வடிகட்டிய கோமாளித்தனமும் கூட.

கடிர்காமரின் இயல்பை, இந்தியாவை சிக்கலுக்குள் மாட்டவைத்து சந்திரிகாவின் பொறியில் விழவைத்து அவரது அரசியல் இலக்கை எட்டுவதற்கு மேற்கொள்ளும் சதியை இந்திய அரசு புரிந்துகொள்வது இப்போது அவசியமானதாகும். 1980களின் இறுதியில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இப்படித்தான் இந்தியாவை- ராஜீவ் காந்தியை - தனது பொறியினுள் வீழ்த்தி வேடிக்கைபார்த்தார் என்ற பட்டறிவை இந்தியா நினைவிற் கொள்ளவேண்டும்.

மீண்டும் ஒருவரலாற்றுத்தவறை இந்தியா கடிர்காமரின் மந்திராலோசனைக்கு இணங்கி - அவரை நம்பி - மேற்கொள்ளாது என நம்புவோமாக....

கதிர்காம யாத்திரை புண்ணியம் என்பார்கள், அது உண்மையோ,பொய்யோ இந்தக் கடிர்காமரின் யாத்திரைகள் அவரது பாவமூட்டையின் சுமையை அதிகரிக்கவே செய்யும். என்ன செய்வது? கெடுபுத்தி சொற்கேளாதுதானே!

## கதிர்காமருக்கு ஒரு பிடரி அடி; சம்பந்தனின் சரியான கேள்வி!



சிலர் சரியானவற்றை, சரியான நேரத்தில், சிலவேளைகளில் சரியாகவே செய்து விடுவதுமுண்டு.

கடிர்காமருக்கு திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளருமான இரா. சம்பந்தன் சரியான கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்.

திருமலைக்கு உரியவரல்லவா. பொருத்தமானவரிடமிருந்து பொறுப்பான கருத்துத்தான் வெளிவந்துள்ளது.

அதாவது 'திருகோணமலை எண்ணைக்குதங்கள் குறித்தோ, இந்தியாவின் நலன் குறித்தோ பேசுவதற்கு லக்ஷ்மன் கதிர்காமருக்கு எத்தகைய அருகதையும் கிடையாது... அவரின் இந்த நடவடிக்கை கேலிக்குரியது' என்று சம்பந்தன் அவர்கள் கதிர்காமருக்குக் கொடுத்துள்ள பதில் அழுத்தமானது தான்.

அவர் மேலும் இது தொடர்பாகத்தெரிவிக்கையில் 'தமிழ்மக்களின் உரிமைப்போராட்டம் தொடர்பாக யதார்த்தபூர்வமாக இதுவரை எந்தக்கருத்தையும் வெளியிடாத கதிர்காமர் இந்தியாவின் நலன்குறித்து அக்கறைகொள்வது வேடிக்கையானது; என்றும் கூறியிருக்கிறார்.

இதனைத்தொடர்ந்து அவர் குறிப்பிட்ட விடயம் தான் கதிர்காமரின் பிடரியில் போடப்பட்ட அடியாகியுள்ளது.

அதாவது முன்னர் அமெரிக்காவுக்கு எண்ணைக்குதங்களை கொடுக்க நடவடிக்கை எடுத்தபோது வெளிநாட்டில் வாய்மூடி மௌனமாக இருந்த கதிர்காமர் அப்போது அந்த நடவடிக்கையால் இந்தியாவின் பிராந்திய நலன்களும் புவிசார் அரசியல் அபிலாசைகளும் பாதிக்கப்படும் என்று இந்தியாவுக்கு 'சங்கைஊதி' அபாய அறிவிப்புச் செய்யவில்லையே....?!

சம்பந்தன் இந்தக் கேள்வியை சரியாகத்தான் கேட்டிருக்கிறார்.

-அப்போது அமெரிக்க விசுவாசம்

-இப்போது இந்திய விசுவாசம்

-இரண்டுமே மிக முற்றிய சந்தர்ப்பவாதக் கோஷம்!

கதிர்காமருக்கு சம்பந்தன் அவர்கள் கேட்ட கேள்வி ஒரு புறமிருக்கட்டும். இப்போது சம்பந்தன் ஐயா அவர்களுக்கு இதனை விடவும் ஒரு முக்கிய பொறுப்பும் இருக்கவே செய்கிறது.

சம்பந்தன் ஐயாவும் இந்தியாவுக்கு மிக நெருக்கமானவர் நம்பிக்கையானவர், இந்திய நலன்களில் அதீத ஆர்வமும் கொண்டவர் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

இப்போது சம்பந்தன் அவர்கள் கதிர்காமரின் இந்த 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழும்' கதையின் உண்மைத்தன்மையை இந்தியாவுக்கு உரத்தும் உறுத்தியும் சற்று உறைப்பாக உரைத்தாலென்ன

சந்திரிகாவின் ஆட்சியென்றாலும், ரணிலின் ஆட்சியென்றாலும் வேறு எந்த பேரினவாத ஆட்சியென்றாலும் தமிழ் மக்கள் தொடர்பான விவகாரங்களில் இந்தியாவை பொறிக்குள் சிக்கவைத்து இந்திய - இலங்கை உறவிலும் பார்க்க நீண்ட பாரம்பரியமும், இரத்த உறவும் கொண்ட இந்திய-தமிழ் மக்கள் உறவுகளை மேலும் பிளவுபடுத்தி பகைமையை ஏற்படுத்துவதே நோக்கமாகக்கொண்டவை என்பதை சம்பந்தன் செய்வது அவசியமான வரலாற்றுக்கடமையுமாகும்.

கதிர்காமரின் இந்திய அக்கறையின் மீதான உள்நோக்கத்தை இந்தியாவை உணரவைக்கவேண்டும்.

சங்கரியார் செய்யமாட்டார்!

சம்பந்தனாவது செய்வாரா?

**செங்குட்டுவன்**

# அமைச்சர்களின் வருகையும் விலைபோகாத யாழ்ப்பாணமும்

**சிறி.இந்திரகுமார்**

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் இங்கு கடமைபுரிந்த இந்திய இராணுவத் தளபதிகளில் ஒருவரான சர்வேஸ் பாண்டே யாழ்ப்பாணத்து மக்களைப்பற்றி பின்வருமாறு கூறியிருந்தார்...

யாழ்ப்பாண மக்களை சரிவர இந்திய அதிகாரிகள் புரிந்து கொள்ளத்தவறியதால்தான் இந்திய இராணுவம் தோல்வியுற நேரிட்டது என்று...

இதன் பின்னணியோடு யாழ்ப்பாணத்துக்கு இப்போது அடிக்கடி அரசியல் விஜயங்களை மேற்கொள்ளும் தென்னிலங்கை அரசியல் அமைச்சர்களின் விஜயங்களைப்பற்றிப் பார்ப்போம்.

ஒரு சில வாரங்களுக்குள் மிக முக்கிய இரண்டு அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்கள்.

ஒருவர் இலங்கையின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இரண்டாவது அமைச்சர் காணி அமைச்சரான ராஜித சேனாரட்ண இதில் முதலாவதாக யாழ்ப்பாணத்திற்கு வந்த ஜோன் அமரதுங்கவிற்கு யாழ்ப்பாணத்தில் எழுந்த கடும் எதிர்ப்பைக் கவனத்தில் கொண்டு ராஜித சேனாரட்ண மிக இரகசியமாகவே தனது பயணத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இவர்கள் இரண்டு பேரிற்கும் முன்பே யாழ்ப்பாணத்தில் ஐரோப்பிய யூனியனால் புனரமைக்கப்பட்ட ஐம்பத்தைந்து பாடசாலைகளை கையளிக்கும் நிகழ்வொன்றிற்கு வந்த அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா யாழ் பல்பலைக்கழக மாணவர்களின் கடும் எதிர்ப்பால் திருப்பி அனுப்பப்பட்டார்.

ஆக ஒரு சில வாரங்களுக்குள் முக்கிய மூன்று அமைச்சர்கள் யாழ்ப்பாணத்து மக்களால் திருப்பிஅனுப்பப்பட்டுள்ளார்கள். இரண்டுபேர் நேரடியாக மக்களின் எதிர்ப்பலையை தங்கள் கண்களால் தரிசித்து விட்டுச்சென்றார்கள். ஒருவர் அத்தகைய ஒரு நிலையை த்னக்கு ஏற்படுத்திக்கொள்ளாமல் நழுவிச் சென்று விட்டார்.


இப்படிப் பார்த்தால் இவர்களின் விஜயங்களை யாழ்ப்பாணமக்கள் விரும்பவில்லை என்பதாகத்தானே அர்த்தப்படுகிறது.

இந்த அமைச்சர்கள் தாங்கள் மேற்கொள்ளும் விஜயங்கள் மூலம் பொருளாதார, அபிவிருத்தி, புனர்நிர்மானம் என்ற பொறிக்குள் வீழ்த்த நினைக்கும் முயற்சியை யாழ்ப்பாணமக்கள் ஏற்றுக் கொள்ளத்தயாராக இல்லை.

இந்த முயற்சி புலிகளிற்கும் அரசிற்குமிடையில் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சமாதான முயற்சிகளுக்கு சமவேகமாக முன்னெடுக்கப்படுவதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

இதன் அடிப்படை நோக்கு என்னவென்றால் யாழ்ப்பாணத்து மக்களின் உணர்வுகளை கையகப்படுத்திவிட்டால் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை மழுங்கச் செய்யலாம் அல்லது அதன் வேகத்தை தணிக்கச் செய்யலாம் என்பதேயாகும்.





இதற்காக புத்திஜீவிகள் மட்டத்திலிருந்து சாதாரண பொதுமகன் வரை அறிவுசார்ந்த பொறிமுறையொன்றை அமைக்கும் முயற்சி நடக்கிறது. இதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களினூடாக யாழ்ப்பாணத்தை அவர்கள் தரிசிக்க முயல்கிறார்கள்.

இதேவேளை தென்னிலங்கையில் சிங்களவர்கள் முதல் அரசியல் கட்சிகள் வரை ஒருவிதமான கருத்து நிலவுகிறதாம்....

யாழ்ப்பாணத்து மக்களை வசப்படுத்துகின்ற அமைச்சர்களை அரசியல் மேலானவர்களாகப் பார்க்கும் ஒருமுறை. அதாவது அமைச்சர்களின் அரசியல் ரீதியிலான செல்வாக்கில் ஒரு பிரத்தியேகமான கெட்டித்தனமாக பார்க்கும் முறை.

இவை எல்லாவற்றின் ஒட்டு மொத்த விளைவுகளின் வெளிப்பாடுதான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானம்ஏறும் அமைச்சர்களின் யாழ்ப்பாண விஜயங்கள்.

ஆனால் இந்த விஜயங்களில் ஒரு விடயத்தை அவதானிக்க வேண்டும். யாழ்ப்பாணம் படையினரின் பூரணகட்டுப்பாட்டிலிருந்த போது எந்த தென்னிலங்கை அமைச்சர்களாலும் யாழ்ப்பாணமக்களின் முன்தோன்ற முடியவில்லை என்பதை.

ஆனாலும் கூட அப்போது புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களிற்கு பொறுப் பாக இருந்த அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா மேற்கொண்ட ஒரு முயற்சி தற்கொலைத்தாக்குதல் ஒன்றின் மூலம் தடுக்கப்பட்டது. அதாவது புனர்நிர்மானம் என்ற பெயரில் வகுக்கப்பட்ட வியூகம் உடைத்தெறியப்பட்டது.

அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்பு சமாதானக் காலம்வரை எந்த தென்னிலங்கை அமைச்சர்களாலும் யாழ்ப்பாணத்துக்குள் பிரசன்னமாக முடியவில்லை.




இது ஒரு பெரும் அரசியல் தோல்வியாகவே கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கருதப் பட்டுவந்தது.

இதனடிப்படையில்தான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவின் விஜயமும் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் பயணங்களும் அடங்குகின்றன.

ஆரம்பத்தில் தன்னை ஒரு மனிதாபிமான உதவிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அமைச்சராக காட்டிக் கொண்ட ஜெயலத்தின் வேலைத்திட்டங்களிற்கும் புனவர்வாழ்வு, புனரமைப்பு என்ற பொறிக்கும் உள்ள பாரிய வேறுபாட்டை மக்கள் உணரத்தொடங்கிவிட்டார்கள்.

அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவிற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் காட்டிய எதிர்ப்பிற்கு பல்வேறு வியாக்கியானங்கள் கூறப்பட்டாலும் யாழ்ப்பாண மக்கள் ஏமாற்றப்படுவதை அவர்கள் இனியும்பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதாகவேஅந்தஎதிர்ப்பு அமைந்திருந்தது.

இதே போன்றதொரு செயற்பாடே அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் விஜயத்தின் போது யாழ்அரச செயலகத்திற்குள் செல்லவிடாது காணாமற்போனோரின் பெற்றோர்கள் நடத்திய ஆர்ப்பாட்டமும் மறியலும் ஆகும்.

எந்த அரசும், எந்த அமைச்சர்களும் எவ்வளவுதான் வாய் இனிக்கப் பேசினாலும் கடந்தகாலத்துயரங்களை மறந்து போக யாழ்ப்பாண மக்கள் தயாராக இல்லை.

அமைச்சர் ஜோன் அமரதுங்க யாழ் யாகப்பர் ஆலயத்தில் வைத்து நடந்த படுகொலைக்காக தான் மனம் வருந்துவதாக கூறியதை கூட கடந்த கால நினைவுகளின் மீள் வருகையாீகவே யாழ்ப்பாணமக்கள் கருதுகிறார்கள்.

இவை யாழ்ப்பாணமக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாததன் விளைவே ஆகும். இதையேதான் இந்திய இராணுவத்தளபதிகளில் ஒருவரான சர்வேஸ்பாண்டே கூறியிருந்தார்.

உண்மையிலேயே ஈழ விடுதலைப்போராட்டத்தில் யாழ்ப்பாணம் ஒரு புதிராகவே இருக்கிறது. இங்கே உறங்கும் உணர்வுகளை எவரும் மதிப்பிடத் தவறிவிடுகின்றார்கள்.


இதை அன்று யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவச் சிப்பாய்கள் முதல் இன்று நிலை கொண்டிருக்கும் சிங்களச்சிப்பாய்கள் வரை தொடர்கிறது.

இந்த கருத்துரீதியான வெளிப்பாட்டின் வெற்றிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும், யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களுக்கும் கணிசமான அளவுபங்குண்டு.

யாழ்ப்பாண பல்கலைக்கழகமே இன்று யாழ்ப்பாண மக்களிற்குள் ஊடுருவ முயலும் விச யந்துக்களை அகற்றும் அறிவுக் கூடமாக செயற்படுகின்றது.

இந்தவகையில் தான் யாழ்ப்பாணம் விழிப்படைந்து நிற்கிறது. தேசியத்தையும் அது காத்துநிற்கிறது. ●

---



## மதவடி மயிலர்

**செய்தி :** *மேலும் 5000 பேர் உடினடியாக இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.*
**மயிலர் :** "அப்ப மேலும் 10000 பேர் இராணுவத்தை விட்டு ஓடிப்போய் பாதாள உலகக்கோஷ் டிகளில் சேரப்போகினம் எண்டு சொல்லுங்கோ... ஒவ்வொண்டாய் சேர்க்க ஐவ்வஞ்சா நழுவுற கதையாயெல்லோ கிடக்கு பாருங்கோ... எப்பிடியோ தொடர்ந்து பாதாள உலக கோஷ்டிக்கு அரசு ஆள் சேர்த்து பயிற்சி கொடுத்து ஆயுதமும் வழங்கிக்கொண்டு தான் இருக்கப்போகுது போல.....!"

**செய்தி :** *பாடசாலைச்சீருடை வழங்குவதற்கென அரசு 75கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அமைச்சர் தெரிவிப்பு...*
**மயிலர் :** "எப்படியோ.... எல்லாம் சீராக நடந்தால் சரி தான்.... கோடிக்கணக்கான ரூபாவை ஒதுக்கியென்ன்.... அதில் எத்தினை கோடி ஆற்றை வீட்டுக் கோடிக்குள்ளை போய் ஒதுக்கப்போகுதோ ஆருக்குத் தெரியும்... என்ன நான் சொல்லுறதிலை ஏதும் பிழையே பாருங்கோ...

**செய்தி :** *இலங்கையில் நிரந்தரத்தீர்வுக்கு சனாதிபதியும் - பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டும் என்று அறிவுஜீவிகள் சங்கம் கோருகிறது.*
**மயிலர் :** உது கடல்வற்றி க்ருவாடு தின்னலாம் என்று குடல் வற்ற காத்து நின்ற கொக்கின் கதையாத்தான் போகும் பாருங்கோ.... தமிழருக்கு தீர்வு வழங்க இணையமாட்டார்கள். தமிழரை தீர்த்துக்கட்டுவதற்கென்றால் இணைந்து கொள்வார்கள்.... பேரினவாதக்கோட்பாடே அது தான் பாருங்கோ.... இது தெரியாமல் அறிவு ஜீவிகள் அறிக்கை விட்டு என்ன பயன்....?

**செய்தி :** *இணைந்த வடக்கு - கிழக்கிற்குள் தீர்வைக் காணதயாராகவுள்ளோம் என சொல்ஹெய்மிடம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறினர்.*
**மயிலர் :** "அமெரிக்காவிடம் ஒன்று, இந்தியாவிடம் ஒன்று, சிறிலங்காவிடம் இன்னொன்று தங்களுக்குள் வேறொன்று... நோர்வேயிடம் இப்பிடி..... முஸ்லிம் உறுப்பினர்கள் நாளுக்கொன்றும் ஆளுக்கொன்றும் சொன்னால் எப்பிடி...? முதலில் இணைந்த முஸ்லிம்களாக ஒன்றுபடட்டும்.... என்ன நான் சொல்லுறது சரிதானே....!

**செய்தி :** *'அரசின் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு80 சதவீதமான சிங்கள மக்கள் எதிர்ப்பு'*
**மயிலர் :** அப்ப..... யுத்தம் சரணம் கச்சாமி எண்டு தான் சொல்லப்போகினம் போலை.... கெடுபிடி சொற்கேளாது பாருங்கோ... சிங்களம் வெங்களத்தில தான் தீர்வு காண விரும்புது போல...

**செய்தி :** *சிறுவரிடையே குற்றச்செயல்கள் அதிகரிக்க தொலைக்காட்சியே பிரதான காரணம்: மதிப்பீட்டறிக்கை தெரிவிப்பு:*
**மயிலர் :** தொலைக்காட்சி... தொல்லைக் காட்சியாய்ப் போய்க்கொண்டிருக்குப்பாருங்கோ... பெற்றோர் படத்தில் மூழ்கியிருக்கேக்கை பிள்ளைகள் படிப்பில் மூழ்குங்களே... மெகாசீரியல்கள் சீரியஸ்சான பிரச்சினைகளுக்கு காரணமாக வருகுது பாருங்கோ... வீடுகள் தியேட்டரா போய்க்கொண்டிருந்தால் நாடு எப்பிடி உருப்படும்... பாருங்கோ?




சுதந்திரமாக அந்தரத்திலே கரணமிடும் இந்தப்பெண் அண்மையில் அனாகேமில் இடம்பெற்றுவரும் பெண்களுக்கான தகுதிகாண் ஜிம்னாஸ்ரிக் சுற்றுப்போட்டியிலே தனது ஒழுங்கமைந்த கரணங்களை செய்து காண்பிக்கிறார். கலிபோர்னியாவில் இடம்பெறும் 37வது போட்டியிலே சீனா தனக்கான முதலாவது இடத்தை தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. எது எப்படியோ இவர்கள் பறப்பதற்காகவே சீனாவிலே படைக்கப்பட்டவர்களோ என எண்ணத் தோன்றுகிறது · அல்லவா!




பார்ப்பதற்கு ஒரு தேவலோக காட்சி போல தோற்றமளிக்கும் இச்சீனப் பெண்கள் தயாராவது ஒரு படக்காட்சிக்காக சீனாவின் மலை நகரம் ஒன்றில். பிரபல இயக்குநரின் நெறியாள்கையிலேயே இந்த அற்புதக்காட்சி படம் பிடிக்கப்பட்டது. ஒளியின் ஜாலங்களை தத்துரூபமாக காட்டுகிறது இக்காட்சி.

இலவசமான மின்னஞ்சல்களை பெற்றுக்கொள்ள சில இணையத்தளங்கள் www.hotmail.com www.yahoo.com

அண்மையில் உலகின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்து மரணமாகிப்போன இடி அமீன் தான் உயிருடன் இருக்கும் பொழுதே தன் உருவத்தை உகாண்டாவின் நாணயத்தாளில் பதித்துக்கொண்டான். 1971இல் சதிப்புரட்சி மூலம் உகாண்டாவின் ஆட்சியை கைப்பற்றிய இவன் ஆயுதப்படைகளின் தளபதியாகவும் பீல்ட் மார்ஷல் ஆகவும் தன்னை பிரகடனப்படுத்திக்கொண்டான். ஒரு ஹிட்லரைப்போல தன்னை உருவகித்துக்கொண்ட இவன் 3லட்சம் வரையான மக்களையும் கொன்று குவித்தான்.

## உயிருடனேயே...








வழுக்கு மரத்தில் குறியாகவே ஏறிக்கொண்டிக்கும் இச் சிறுவர்கள் இந்தோனேசியாவில் 58வது சுதந்திரதினத்தை கொண்டாடிக்கொண்டிருக்கும் கிழக்கு யகார்த்தாவைச் சேர்ந்தவர்கள். சிறுவர்கள் தனியவே இப்படி ஏறுகிறார்களே எனநினைத்து விடாதீர்கள். பெரியவர்களின் கைகளும் கூடவே ஏறுகின்றன.







இவர் 'கழுவிக்கொண்டிருக்கும் தார்ப்பூசணிக்காயை எவரும் சாதாரணமாக திருடிச்செனறுவிடமுடியாது. ஏனெனில் இதன் நிறை 70கிலோவாகும். சர்வதேச உணவு விவசாய விழாவில் இடம்பெற்ற காட்சி ஒன்றுக்காக கொண்டுவரப்பட்ட பூசணிக்காயே இது. இவற்றைப்போல 2000 வகையான உணவுப்பயிர்கள் காட்சிக்கு வைக்கப்பட்டது. வடகிழக்கு சீனாவின் தலைநகரிலேயே இது இடம்பெற்றது.




புராணக்கதைகளில் வரும் பிரமாண்டமான ஒரு உருவத்தை புற்களாலே உருவாக்கி காட்டியிருக்கிறார்கள். மொன்றியலைச்சேர்ந்த சிற்பக்கலைஞர்கள். தாய்நிலத்தின் புராணக்கதைகள் என பெயரிடப்பட்டு டவுன்ரவுன் நகரில் இடம்பெற்ற சிற்பக்கலைக்கண்காட்சி ஒன்றில் சுடப்பட்டது இப்படம். 60இற்கும் மேற்பட்ட சிற்பங்களுடன் 32 நாடுகளில் இருந்து பங்கு பற்றிய கலைஞர்கள் இக்காட்சிக்கு மெருகூட்டினார்கள்.




தனது குட்டிக்கண்களால் கூர்ந்து கவனிக்கும் பொருள் ஒரு மூன்று சென்ரிமீற்றர் நீளமே மட்டும் கொண்ட விளையாட்டுக்கார். தாய்வானில் அண்மையில் விற்பனைக் காட்சிக்கு வந்திருந்த இந்த குட்டிக்காரின் இன்னொரு சிறப்பு இது சூரிய சக்தியில் இயங்கும் என்பதே. 6.5டொலர் பெறுமதியான இக்குட்டிக்கார் ஒக்டோபரில் சந்தைக்கு வரவிருக்கின்றது.






# தேசிய உணர்வில்லா சமூகச் செயல்முறைகள் மொழி வளர்ச்சியைத் தடுக்கும்

**அன்ரன் அன்பழகன்**

இப்போது உலகின் கவனிப்பை பெறும் பல நிகழ்ச்சிகள் கிளிநொச்சியில் அரங்கேறுகின்றன. இந்த நிகழ்ச்சி களினூடே கடந்த வாரம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் தமிழ் மொழிவிழா ஒன்றும் அதற்கு சிறிது நாட்களுக்கு முன் தமிழ் பெயர்களின் கையேடு கிளிநொச்சி மாகாவித்தியாலய மண்டபத்தில் நிகழ்ந்தேறின. எமது மொழியினூடான வாழ்வை இவை பறைசாற்றின. கடந்த பல தசாப்தங்களில் இரத்தக்கறைபடிந்த இலங் கைத்தீவின் வரலாற்றில் நமது தாய்மொழியான தமிழ் புறந்தள்ளப்பட்டமையால் எழுந்த வீரம் செறிந்த போராட்டத்தால் உருவாகிய புதிய தொரு காலத்தின் பரிணாமப்படிகளில் நிற்கின் றபடி மேற்படி விழாக்களைச் சந்திக்கின்றோம்.

அளப்பெரும் அர்ப்பணிப்புக்களால் உருவான இப்புதிய காலப்பரிணாமத்திலும் நமது தமிழ்தேசிய அடையாளங்களின் அக வளர்ச்சியின்மை என்பது ஒருபெரும் பிரச்சினையாக உள்ளதை மறுக்கமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலமை உள்ளது. இன்று உலகமெங்குமே வேகமாகப்பரவிட்ட உலக மயமாதலையும் அதன் விளைபொருளான நுகர்வுக்கலாச்சாரத்தையும் . இவை இரண் டையுமே வளர்ப்பதற்கு துணைபோகும் புதியதொரு மலினமான உலக மய்மாதல் கலாச்சாரப்போக்கின் வேர்களையும் குறிப்பிட முடியுமெனினும், எமது தமிழ் தேசிய எழுச்சி யின் கட்டமைப்பையும் இழந்துபோகாது பாதுகாக்கவேண்டியது எமது வரலாற்று கடமை யாகும் என்பதை இவ்விழாக்கள் சுட்டிநின்றதை உணரமுடிகிறது.

எந்த ஒரு மொழியும் அது சார்ந்திருக் கும் சமூகச்செயற்பாட்டின் விளைபொருள் தான். தேசிய உணர்வில்லாத சமூகச்செயல் முறைகளால் ஒருமொழி தனக்குரிய ஒரு கௌரவமான இடத்தை உலக அரங்கில் பெற்றுக்கொள்ளமுடியாது.

இப்போது எமது சமூகச்செயல் முறைகளில் தேசியப்பற்றும், தேசிய உணர்வும் இருக்கிறதா எனும் வினாவிற்கு வருவோ மாயின் எமது சமூகச்செயல் முறை களை ஆய்வு செய்யும் ஒரு சூழலுக்குள் செல்ல வேண்டியிருக்கும். பிறக்கும் எமது குழந்தை களுக்கு வைக்கப்படும் பெயர்களுக்குள் தமிழ் மொழி இருக்கிறதா என்பதைவிட இன்னும் நம்மிடையே பலர் ஆங்கிலம் தெரியாதபோதும் தம்மை உறுதிப்படுத்தும் கையொப்பங்களையிடு வதற்கு ஆங்கில வரிவடிவங்களையே உபயோகப்படுத்துகின்றனர். ஆங்கிலேயர் நம்மை அதிகார பூர்வமாக விலகிய பின்னரும் எம்மால் ஆங்கில மொழிமீதான அந்தஸ்து மோகம் விலகவில்லை என்பதும் துர்பாக்கி யமே. ஏனைய தேசிய இனங்கள், குறிப்பாக அபிவிருத்தி அடையாத நாடுகளின் தேசிய இனங்கள் ஆங்கிலத்தை அறிவின் திறவுகோலாக உபயோகிக்க நாமே அதனை வாழ்வின் அந்தஸ்தை குறிக் கும் ஆபரணமாக உபயோகிக்கின் றோம். இதனையே இலங்கையின் கல்வியியலாளர் ஒருவர் Use English as the gat way of Knowledge. not as ornament எனக்குறிப்பிட்டார். ஆங்கில மொழியில் புலமைஇல்லாது போனாலும்அதன் பண்பாட்டுக்கோலங்களை எமது வாழ்வியல் கோலங்களாக கொள்ளுகின்றமை தவிர்க்கப்பட வேண்டும். உண்மையில் எம்மீது திணிக்கப் பட்ட இன ஒடுக்குமுறையும் யுத்தமும் இந்த செழுமைமிகுஇலக்கியங்களை உலகின் அரங்கிற்கு எடுத்துச்சொல்வதற்கான ஊடகமாக ஆங்கிலத்தை உபயோகப்படுத்த முடியாத நிலையிலேயே உள்ளோம். இதில் ஒரு சிறிய பங்களிப்பைகிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களால் நடாத்தப்பட்ட "நெற்றிக்கண்" எனும் அர்த்தத்திலான Thrd Eye எனும் சஞ்சிகை செய்திருந்தது.

கடந்த நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு முன் நடாத்தப்பட்ட உடற் பயிற்சிப் போட்டிகளில் கட்டளை மொழியாக தமிழ் இருந்தது. ஆனால் இப்போது மீண்டும் அந்த இடத்திற்கு ஆங்கிலம் வந்து விட்டது. அதற்குக்காரணமாக தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு போட்டிகளில் கூட தமிழ் கட்டளைகள் வெற்றிவாய்ப்பை இழக்க வைத்துவிடும் என காரணம் கற்பிக்கப்பட்டது. ஆனால் கடந்தவருடம் கொழும்பில் நடத்தப் பட்ட ஆசியப்போட்டிகளில் பல்வேறுமொழி களைபேசும் பல்வேறு நாட்டவர்கள் கலந்து கொண்ட ஓட்டப்போட்டிகளில் கட்டளை மொழி யாக சிங்களம் இருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கின் அரச கட்டமைப்பில் உள்ள உயரதிகாரிகளில் பலரும் தாய்மொழியூடான தமது அரசகரும செயற்பாட்டினைவிட ஆங்கில, சிங்கள மொழி களிலான உரைக்கும் அறிவுறுத்தல்களுக் குமே முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர்.

அடுத்து எமது வாழ்வின் கலை பண் பாட்டு அம்சங்களைப் பார்க்கும்போது தமிழர் கலைகள் என்பது செம்மை பெறாவடிவங் களாகவே இன்னும் உள்ளது. தமிழர் கலை களில் குறிப்பிடும்படியாக காவடி, கரகம், கும்மி, கோலாட்டம் என்பன நவீன வளர்ச்சிகளை உள்வாங்கி செழுமைப்படுத்தப்படுவதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. மாறாக ஏனைய தேசியங்களின் செழுமைப்படுத் தப்பட்ட கலைவடிவங்களுக்குள் நாம் இழு பட்டுப்போகின்ற போக்கே காணப் படுகின்றது.

இன்று 'கதகளி' எனும்போது மலை யாளத்தையும் 'கண்டிய நடனம்' எனும் போது சிங்களத்தையும் நினைக்கிற அளவுக்கு தமிழ்த் தேசியத்தில் எந்த கலைவடிவமும் செம்மைப் படுத்தப் படவில்லை. இன்று ஆசியமட்டத்தில் அங்கீகாரம் பெற்றுள்ள 'கபடி' தமிழர்களின் விளையாட்டான சடுகுடுவில் இருந்து தோற்றம் பெற்றது என்பதை தமிழர்களில் பலரே அறிந்திருக்கவில்லை. இன்று 'கபடி' விளையாட்டுத்தொடர்பான வரலாற்றில் கூட இந்தக்கருத்து இல்லை. அது மட்டுமல்ல சிங்களத்தின் தேசிய அடையாளமாகிவிட்ட கண்டிய நடனம் கூட தமிழர்களின் கலை வடிவமான பறைமேளக்கூத்தில் இருந்து தோற்றம்பெற்றது. முன்னாள் வடகிழக்கு கலாச்சாரப்பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார். மட்டக்களப்புப்பகுதி[illegible] செய்த கண்டிய மன்னர்களை மகிழ [illegible] மட்டக்களப்பு பகுதி பார்த்திருப்பு(இன்றைய பட்டிருப்பு) பகுதி மக்களால் ஆடப்பட்ட இவ் வாட்டத்தால் கவரப்பட்ட கண்டிமன்னனால் அழைத்துச் செல்லப்பட்டவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டதே இன்றைய கண்டியநடனம்

இன்றைய தமிழ் நாடகங்கள் எனும் போது தமிழ் அடையாளங்கள் எனக்குறிப் பிடும்படியான அம்சங்களும் இல்லை என திரு.தாசீசியஸ் ஒரு முறைபேட்டிஒன்றில் குறிப் பிட்டிருந்தார். எனினும் அழகிய அம்சங்கள் நிறையப்பெற்ற ஆடலும் பாடலும் நிரம்பி வழி யும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் தமிழரிடம் உள்ளபோதும் செம்மைப்படுத்தப் படாது நவீன வாழ்வியலுக்கு பொருத்தப்பாட டையாது இன்னும் 'கண்ணகி கோவலன்'கதை கருக்குள்ளேயே சிறைவைக்கப்பட்டிருப்பதும் எமது தேசிய எழுச்சியில் முக்கியமான தடைக்கற்களாகும்.

எனவே எமது தேசிய அடையாளங் கள் வாழ்வின் பரிணாமத்துக்கு ஏற்ப வளர்ச்சிய டையவில்லை என்றால், நவீனப்படுத்தப்பட வில்லை என்றால் வரலாற்றில் நமது தமிழ் தேசிய அடையாளங்கள் தூக்கிவீசப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

600 ஆண்டுகள் வாழ்வுடைய ஆங்கிலமொழி இன்று உலகில் அதிக சொற் களைக்கொண்ட மொழியாக செழுமை யுடன் அதனால் இலங்கமுடியுதென்றால் தனக்கு தேவையான எல்லாச்சொந்தங்களையுமேஅது எல்லாவேர்களிலும் இருந்து பெற்றுக் கொண்டமையும் ஒரு காரணமாகும். தனது அடையாளங்களை இன்னொன்றினுள் கரைத்துக் கொள்ளாதிருத்தல் எனும் உணர்வே இதன் அடிப்படையாகும்.

தொழில் நுட்பப்புரட்சியின் பலன் களை நாம் உள்வாங்குவதில் சற்று தாமதித்து விட்டோம் என்பது உண்மை எனினும் பாரதி சொன்னது போல் "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் 'கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என் பதை செயல்வடிவில் கொள்வோம் ஆயின் எமது மொழி அறிவியலில் உள்ள இடைவெளியையும் கடந்து வெற்றி பெறும். இன்று தமிழ் இணையத் தளங்கள், தமிழ் மொழி மென் பொருட்கள் என்பன ஆக்கப்படுவதில் காட்டப்படும் ஊக்கமே இந்த இடைவெளியை நிரப்பப்பயன்படும் பாலமாக அமைந்து விடும். தமிழ் மொழி யின் வளர்ச்சிக்கான மையம் ஈழத்தி லேயே உள்ளது.



எமது மொழி, இலக்கியம், மொழியியல், நாட்டாரியல் வரலாறு எமது விசேட சொத்துக்களான சித்த மருத்துவம், வானியல், என்பவற்றோடு தமிழ் மொழியிலான தகவல் தொழில் நுட்பத்தையும் வளர்க்கக் கூடியதான வழிகாட்டக்கூடியதான தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று உடனடியாக அமைக்கப்படுதல் அவசியமாகிறது. இது எங்களுக்காக, எங்களால் நடத்தப்படும் பல்கலைக்கழகம் என்பதை மறக்கக்கூடாது.

இந்த தமிழ் விழாவின் நோக்கம் பற்றி அதன் இணைப்பாளராக கடமையாற்றிய கிளிநொச்சிக் கல்வி வலய தமிழ்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்டபோது "தமிழன் தமிழால் நிமிர்வான். தமிழால் தமிழன் வளர வேண்டும். தமிழ்பேசும் ஒவ்வோர் துறைசார் நிபுணரும் தனது துறை சார்ந்து தமிழனது வாழ்வியலை- வளத்தைப் பெருக்கவேண்டும். இதற்காக, அவனிடம் உரு வாகும் உள்ளுணர்வு தமிழ் உணர்வால் தோன்றும்-வளரும்" எனக்குறிப்பிட்டார்.

இந்த உணர்வை பெருக்கும், இளைய இதயங்களில் பதிவைத்து வளர்க்கும் பொறுப்பை மொழிகாக்கும் பொறுப்பினை யுடைய ஆசிரியர்களிடம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பாளரான திரு. வெ. இளங்குமரன் விழாமேடையில் வைத்துக் கையளித்தார்.

---

## ஊக்கமாத்திரை



# உறுதியே வாழ்க்கையின் வழிகாட்டி

இந்த உலகத்தில் நீங்கள் வெற்றியை நிலை நாட்ட வேண்டு மானால், முதலில் உங்கள் மனதின் அடித்தளத்தில் நல்ல எண்ணங் களையும், தளராத உறுதியையும் விதைத்து விடுங்கள்.

என்னாலும் நன்றாக வாழ முடியும் என்ற உறுதிதான் உங் களை உயர்த்தும். மனிதனின் வெற்றிகளுக்கு அடிப்படையாக இருப்பது திடமான உறுதியே! உங் கள் ஆற்றலின் மீது உறுதி வைக் கும்போது உற்சாகம் தோன்றும்.

உறுதி உங்களை இரும்பு மனிதனாக்கும்! சிலவேளையில் உங்கள் சந்தேகம் உங்களையே கோழையாகவும் நடைப்பிணமாகவும் ஆக்கிவிடுகிறது.

உறுதியானது உங்களை வெற்றியோடு பிணைக்கக் கூடிய இணைப்புத் தொடராக இருக்கும் பொழுது, சந்தேகமானது உங்களை தோல்விப்படுகுழிக்குத்தள்ளிவிடும்.

நம்பிக்கையால் உங்கள் உள்மனக்கோட்டையை அரண் செய்து வைத்திருந்தபோதிலும், எப்படியோ சந்தேகம் என்ற அபாய மான வெடிகுண்டு உங்கள் மனவுறு தியின் மீது விழுந்து அதனை சின்னா பின்னமாக்கி அழித்துவிடுகின்றது.

அவ்வாறு இல்லாமல் உங் கள் உறுதியை தக்கவைத்து அதன் மீது சந்தேகமென்ற வெடிகுண்டு விழாமல் இருக்கும்படி நீங்களே காவல் செய்யுங்கள்.

அடிக்கடி கோபம்வரும், செக்கனுக்குச் செக்கன் துன்ப துய ரங்கள் வரும், சிலவேளைகள் ஏமாற் றங்களும் வரலாம். இவற்றையெல் லாம் கண்டு சோர்வடையாமல் உறு தியைக்கைவிடாது மீண்டும் மீண்டும் இன்பத்தை நோக்கிச் செல்லுங்கள்.

நீங்கள் எந்த விதத்திலும் எவருக்கும் தாழ்ந்தவர்கள் அல்ல, எல்லோருக்கும் உள்ள ஆற்றல் உங் களுக்கும் உண்டு என்று, உங்க ளைப் பற்றி நீங்களே நம்பாவிட்டால் உங்களை வேறு யார்தான் நம்பு வார்கள்.

எனக்கு இண்டைக்கு இய லாது, நாளைக்கு இயலாது என்று நீங்களே சொல்லிக்கொண்டு இருந் தால் எப்படி உங்க ளால் உலகில் சாதி க்க முடியும்? என்னா லும் முடியும், நானும் சாதிக்கவல்ல வன் என்ற துணிவு உங்கள் மனதில் உறுதியாக இருந்தால் போதும் வேறு எந்த வகையிலும் உங்களுக்கு ஆத ரவு தேவையில்லை.

உங்கள் பணியினை உங் களால் முடிந்தவரை இன்று நன்றாகச் செய்யுங்கள். நாளை அதைவிட இன்னும் நன்றாகச்செய்யுங்கள். நாளுக்கு நாள் நான் ஆற்றலைப் பெறுகிறேன் என்ற மனவுறுதிதான் உங்களை உயர்த்தும்.

நீங்கள் செய்யும் ஒவ் வொன்றிலும் தொழிலோ, அல்லது உங்கள் கடமைகளோ, அல்லது படிப்போ எவையாக இருந்தாலும் நுட்பமாகவும், புத்திசாலித்தனமாகவும் திட்டங்களை வகுத்து சோர்வி ல்லாமல் உற்சாகத்துடனும், ஆற்ற லுடனும், மனவுறுதியுடனும், தொடர்ச் சியாகவும், செயற்பட்டு வருவதன் மூலமே வெற்றியினை உறுதிப்ப டுத்த முடியும். உங்களுக்கு உயர் வான இடத்தை உலகம் அளிக்கும்.

உங்கள் இலட்சியத்தில் உறுதியுடன் இருங்கள். உங்க ளுடைய ஒவ்வொரு வெற்றிக்கும் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு இவை மூன்றும் உங்களிடம் உறுதியாக இருந்தால் வெற்றி நிச்சயம்! உறு தியுடன் வாழுங்கள். இதுவே 'வாழ்க் கைக்கு வழிகாட்டி!

**முகுந்தினி**

---

காதலன் கண்களின் பார்வை, கழுகையும் குருடாக்கி விடும். - வில்லியம் ஷேக்ஸ்பியர்

**காலங்காலமாய் பெண் இப்படித்தான் இருப்பதற்குப் பழக்கப்பட்டிருக்கிறாள். அநீதிக்கெதிராககுரல் கொடுப்பது அல்லது நடவடிக்கை எடுப்பது என்பது பெண்ணுக்கு அவமானம், களங்கம் என்று அன்றையகாலம் போதித்தது. ஆகவே, அன்றைய பெண் அப்படி வாழ்ந்தாள். அந்தக் கருத்தும், ஆழமான வழிநடத்தலும் இன்றும் சில இடங்களில் ஊறி இருப்பதை நாம் காண்கிறோம். இவை களையப்படவேண்டிய கருத்துகளாக இருக்கின்றன.**

# தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராக கிளர்ந்தெழ வேண்டியவர்கள் பெண்களே!

**ஆதிலட்சுமி சிவகுமார்**



“பெண்கள் இப்போது மிகவும் முன்னேறிவிட்டார்கள்” இன்று பலராலும் முன்வைக்கக்கூடிய கூற்று இது. இக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுதான். ஆனாலும், இந்த முன்னேற்றம் எந்தளவுக்கு இருக்கின்றது என்பதும் சிந்திக்கப்படவேண்டியதாகிறது. முன்னேற்றம் என்பது துணிச்சல், தன்னம்பிக்கை என்கின்ற இரண்டு விடயங்களில் தங்கியிருக்கிறது. இந்த இரண்டு விடயங்களுமில்லாத பெண்கள் மட்டுமல்ல-மனிதர்கள் யாருமே முன்னேற முடியாது.

எமது சமூகத்தில் பெண்கள் மிகவும் வேகமாக முன்னேற வேண்டிய தேவை இருக்கிறது. ஏனென்றால் பாதிப்புகளும் பிரச்சினைகளும் மூடக்கொள்கைகளும் முரண்களும் பெண்களிடமே அதிகம் காணப்படுகின்றன. இவை நிச்சயமாக முன்னேற்றத்துக்கு தடையாகவே அமையும். இந்தத் தடைகளை உடைத்து அல்லது தகர்த்து முன்னேற வேண்டிய பெரும் பொறுப்பு பெண்களுக்குரியது. அப்பொழுதுதான் பெண்கள் இலகுவில் முன்னேறமுடியும்.

பெண்கள் பல கோணங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். பெண்ணின் ஒவ்வொரு திசையும் பயங்கரமானதாக, கரடு முரடானதாகவே பெரும்பாலும் இருக்கின்றது. இதைவிட காலங்காலமாக பெண் பற்றி நிலவி வந்த உருவகங்களும் இன்றைய பெண்களின் முன்னேற்றங்களுக்கு முட்டுக்கட்டை போடுவனவாகவே இருப்பதை காண்கின்றோம்.

பெண்ணின் ஆற்றல், ஆளுமை என்பன பெரியளவில் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படாதவையாகவே இருப்பதை பல இடங்களில் காண்கின்றோம். சில இடங்களில் பெண்ணின் ஆளுமை வெளிப்படுவதை அவள் சார்ந்தோர் விரும்பாத நிலையும் இருக்கின்றது. பெண் என்பவள் இரண்டாம்படி நிலையில் இருப்பதுதான் அவளின் பெண்மைக்கு புனிதம் கற்பிப்பது என்ற மாதிரியான கருத்தும் இருந்து வருகிறது. பல இடங்களில் ‘பெண்தானே’ என்கின்ற அலட்சியம் அல்லது அக்கறையின்மையையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படியான பார்வைகளையும், படிநிலைகளையும் தாண்டி முன்னேறவேண்டிய நிலையிலேயே இன்றைய சாதாரண பெண்இருக்கின்றாள்.

இன்று பெண் தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டவும் ஆற்றல்களை வெளிப்படுத்தவும் பல வழிகள் இருக்கின்றன. எமக்கு முந்தைய சந்ததியினரைப் போல பெண்கள் ஏக்கம் நிறைந்தவர்களாகவோ இன்னொரு வரில் தங்கியிருக்கவேண்டியவர்களாகவோ இருக்கவேண்டிய நிர்ப்பந்தங்கள் அருகிவிட்டன. பாதைகள் பல முனைகளில் திறந்திருக்கின்றன.

இருந்தும், எத்தனை பேர் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்து எழுகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ஏதோ ஒரு விதத்தில் ஏற்படும் பயமும், தயக்கமும் அநீதிக்குட்படுபவர்களின் உணர்வுகளை மரக்கச் செய்து விடுகின்றன. அல்லது மௌனிக்க வைத்து விடுகின்றன என்றே சொல்லவேண்டும். உண்மையில் எப்பொழுதும் அநீதி இழைப்பவர்கள் தான் அச்சமுறவேண்டும். ஆனால் இங்கே மாறாக அநீதிக்குட்படுபர்களே அச்சமுறுகிறார்கள்.

காலங்காலமாய் பெண் இப்படித்தான் இருப்பதற்குப் பழக்கப்பட்டிருக்கிறாள். அநீதிக் கெதிராககுரல் கொடுப்பது அல்லது நடவடிக்கை எடுப்பது என்பது பெண்ணுக்கு அவமானம், களங்கம் என்று அன்றைய காலம் போதித்தது. ஆகவே, அன்றைய பெண் அப்படி வாழ்ந்தாள். அந்தக் கருத்தும், ஆழமான வழிநடத்தலும் இன்றும் சில இடங்களில் ஊறி இருப்பதை நாம் காண்கிறோம். இவை களையப்படவேண்டிய கருத்துகளாக இருக்கின்றன.

சிறிலங்காவின் தேச வழமைச்சட்டம் பெண்களுக்கு மனத்துணிவை ஏற்படுத்துவதாக இல்லை. ஆனால், எமது தமிழீழச் சட்டங்கள் பெண்களுக்கு உரிய முறையில் நீதி வழங்கக்கூடிய வகையில் இருக்கின்றன. இருந்தும், அநீதிகளுக்கு எதிராக துணியாதவர்களும் இருக்கவே செய்கிறார்கள். சட்டம் தெரியாதவர்கள் என்பவர்களைவிட சட்டம் பற்றி முழுமையான தெளிவிருந்தும் முன்வராதவர்கள்தான் அதிகம். சமூகமட்டங்களில் இன்னமும் துன்புறுத்தப்படும், ஏமாற்றப்படும், அவமதிக்கப்படும் பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் எல்லோருமே இந்த அநீதிகளை எதிர்த்து போராட முன்வருகிறார்களா என்றால் இல்லை என்றே சொல்லமுடிகிறது.



ஏன் இவர்கள் இப்படி ஒதுங்கிப் போய்விடுகிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால் பிரச்சினை வெளியே வந்தால் அவமானம் எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற பயம், ‘என்ன செய்வது பெண் என்றால் இதெல்லாம் சகஜம்’ என நினைக்கும் மனோபாவம் என்பவையே காரணங்களாக அமைகின்றதை அறியமுடிகின்றது.

இதன் மூலம் அநீதி இழைப்பவர்கள் தப்பிக்கொள்ள பாதிக்கப்பட்டவர்கள் மனஉளைச்சலுடனும், மாறமுடியாத துன்பத்துடனும் வாழநேரிடுகிறது. மேலும், அநீதி இழைப்பவர்கள் மீண்டும் மீண்டும் இதே அநீதியை இவர்களுக்கோ, அல்லது இன்னும் பலருக்கோ இழைக்கும் மனத்துணிவும் இதன் மூலம் ஏற்படுத்திக்கொடுக்கப்படுகிறது. தவறு செய்வது மட்டுமல்ல, தவறு செய்யப்படுவதை வெறுமனே அனுமதித்திருப்பதும் மாபெரும் தவறாகிறது.

தவறிழைப்பவர்களை மன்னித்துவிடுகிறோம். அல்லது அலட்சியம் செய்துவிடுகிறோம். இதனால் தவறிழைப்பவர்கள் மனச்சாட்சியின் உறுத்தலால் திருந்திக்கொள்வார்கள் என்பது எல் லாம் முழுமையான உண்மை யல்ல. மன்னிப்பது பெருந்தன் மையை வெளிப்படுத்துவது என்று கருதப்பட்டாலும் கூட, இது எல்லா அநீதியாளர்களையும் திருத்தி நல்லவர்களாக்கும் என்று கூறிவிட முடியாது.

ஆகவே,பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழவேண்டியது, போராடவேண்டியது காலத்தின் தேவையாகிறது. இந்தக் கிளர்ச்சி அல்லது போராடும் மனப்பான்மை தான் பெண்களின் முன்னேற்றங்களுக்கு உந்துதலாக அமையும். ●

## புதையல் –01



# புயல் பறவைபற்றிய பாடல்

வெள்ளிபோன்ற பெருங்கடலுக்கு மேலாக காற்று புயல்மேகங்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறது. மேகங்களுக்கும் பெருங்கடலுக்கும் இடையே கருநிறமின்னல் கீற்றைப் போல புயல்பறவை பெருடையுடன் பறக்கிறது.

ஒரு நேரம் அதன் இறக்கையை அலை சீராட்டுகிறது, மறுநேரம் அது ஓர் அம்பு போல எழுந்து மேகங்களைக் கிழித்துக் கொண்டும் பயங்கரமாகக் கத்திக்கெண்டும் செல்கிறது. அதே வேளை மேகங்கள் பறவையினுடைய துணிச்சல் மிக்க கதறலில் ஒரு ஆனந்தப்பரவசத்தைக் காண்கின்றன.

இந்தக் கதறலில் புயல்காற்றுக்கான பேரவா ஒலிக்கிறது! இக்கதறலில் கோபத்தின் சக்தியை, கொழுந்து விட்டெரிகிற உணர்ச்சியை, வெற்றியில் உள்ள நம்பிக்கையை மேகங்கள் காண்கின்றன.

கடற்பறவைகள் அச்சத்தில் புலம்புகின்றன. புலம்பி கடலுக்கு மேலாக அங்குமிங்கும் அலைந்து, பெருங்கடலின் கருமைநிற ஆழத்திலே அச்சத்தை மறைக்கத் தயாராக இருக்கின்றன. நீர் மூழ்கிப் பறவைகளும் புலம்புகின்றன. வாழ்க்கைப் போராட்டத்தின் மகிழ்ச்சி அவற்றிக்குத் தெரியவில்லை. அவை இடியொலி கேட்டு நடுங்குகின்றன.

முட்டாள்தனமான பென்குவின் பாறை இடுக்குகளில் பயந்து ஒதுங்குகிறது.... ஆனால் பெருமைக்குரிய புயல் பறவை மட்டும் பெருங்கடலுக்கு மேலாக, வெள்ளி நுரை பொங்கும் நீருக்கு மேலாகத்துணிவோடும் சுதந்திரத்தோடும் பறக்கிறது!

இன்னும் கருமையாக, இன்னும் தாழ்வாக புயல் மேகங்கள் கடலுக்கு மேலாக மூழ்குகின்றன. அமிழ்கின்ற அலைகளோ ஆவலால் இடியை நோக்கி உயர்கின்றன.

இடி இடிக்கிறது. இப்போது அலைகள் காற்றுடன் பயங்கரமாகச் சண்டையிடுகின்றன. கோப நுரையுடன் அலைகள் புலம்புகின்றன. அந்தோ- காற்று பிரிக்க முடியாதவாறு அலைக் கூட்டத் திரள்களை வெறியுடன் தழுவி, நெடும் பாறைகளின் மீது மரகதம் போன்ற அத்திரள்களை மோதிச் சிதறுமாறு உருட்டுகிறது.

கருநிற மின்னல் போல புயல்பறவைகதறலோடு பறக்கிறது , புயல் மேகங்களை அம்பு போலத்துழைத்து, நீரின் மேலாகப் பறந்து இறக்கையால் அலைகளின் நுரையைப் புரட்டிச் செல்கிறது.

அந்தோ, தூர்த்தேவதை போல, புயற்காற்றின் கரும்பேய் போல, முன்னிலும் சிரித்துக் கொண்டு, முன்னிலும் தேம்பிக் கொண்டு விரைந்து செல்கிறது... புயல்மேகங்களைப் பார்த்துச் சிரிக்கிறது, அதனது ஆனந்தப் பரவசத்தால் தேம்புகிறது!

கூர்மையான பேய், இடியின்முழக்கத்தில் வெகுகாலமாகவே களைப்பைக் கேட்கிறது. சூரியனை மேகங்களால் மறைக்க முடியாது என்பது அதற்கு உறுதியாகிறது: ஆமாம் மறைக்க முடியாதுதான்!

காற்றுச் சீறுகிறது... இடி முழங்குகிறது.. அடியற்ற பெருங்கடலுக்கு மேலாக, நீல வெளிச்சம் போல புயல் மேகங்களின் கூட்டங்கள் எரிக்கின்றன. மின்னல் அம்புகளை கடல் பிடித்து அவற்றைத் தனது ஆழத்தில் போட்டு அவிக்கிறது. கொடிய பாம்புகளைப் போல, அந்த மின்னல்களின் பிரதிபலிப்புகள் கடலில் நெளிந்து மறைந்து போகின்றன.

“புயல்! விரைந்து புயல் வந்து அடிக்கப்போகிறது!”

மின்னல்களுக்கு மத்தியில், கர்ஜிக்கின்ற மூர்க்கமான பெருங்கடலுக்குமேலாகத்தைரியமான புயல்பறவை பெருமையுடன் பறந்து கொண்டிருக்கிறது. வெற்றியின் தீர்க்கதரிசிபோல அது முழங்குகிறது:

“தனது முழு ஆவேசத் துடன் புயல் அடிக்கட்டும்!...”

**மாக்ஸீம் கார்க்கி**

இளமையின் மலர்ச்சி, துணிச்சல்; முதுமையின் அறுவடை நிதானம். - ஸிஸரோ




அத்தியாயம் - 10

# தாமரைச்செல்வியின்

# பச்சைவயல் கனவு

காடு, காட்டுக்குள் இந்தச் சின்னக் கோவில்.

அதில் இத்தனை சனங்கள்.

அவர்களால் நம்பமுடியாத காட்சியாக இருந்தது.

பல தலை முறையாக வாழ்கின்ற இந்த ஊரிலிருந்து மட்டுமல்ல சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் ஆட்கள் வண்டில் கட்டி வந்திருந்தார்கள்.

கோவிலுக்கு எதிர்ப்புறம் தள்ளி இருந்த வயல்வெளியில் சிவம் வண்டிலைக் கொண்டுபோய்விட்டுவந்தான். எல்லோரும் கோவில் வாசலுக்குப் போனார்கள். ஒரு பக்கத்தில் அடுப்பு வைத்து பானைகளில் பொங்கிக்கொண்டிருந்தார்கள். சிலர் வாசலில் இலை விரித்து படையலிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கோவிலைச் சுற்றி வந்தார்கள். இடது புறநீளக் கொட்டிலில் பெரிய பானைகளில் அன்னதானம் கொடுப்பதற்கான சமையல் நடந்து கொண்டிருந்தது.

அதன் வாசலில் நின்ற நடுத்தர வயதுள்ள மனிதர் பக்கத்தில் நின்றவனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

"விநாசி! நீ போய் எங்கட ஆட்கள் எல்லாரையும் சேர்த்து வைச்சிரு. நான் வாறன்."

மரியக்கண்டு மெல்லியகுரலில் சொன்னான்.

"இவங்கதான் கூத்துப்போடுறவங்க. அந்த ஐயாதான் காத்தவராயனுக்கு ஆடுறவங்க. தலைமுடியைப்பாருங்க. அவர் தான். அண்ணாவியார் பெரிய தம்பி."

சிவம் அவரை நன்றாகப் பார்த்தான். தலையை வாரி இழுத்துகொண்டை முடிந்திருந்தார். காதில் கடுக்கனும் நெற்றியில் சந்தனப்பொட்டும் இருந்தது. வெள்ளை வெளேரென்ற வேட்டிகட்டி இடுப்பில் சால்வை சுற்றியிருந்த அவரின் தோற்றத்தில் கம்பீரம் இருந்தது. பக்கத்தில் நின்ற விநாசிக்கு இவர்களின் வயது தான்இருக்கக்கூடும். மெல்லிய தோற்றத்தில் சிறிது உயரமாய் இருந்தான். தலை மயிர் தோள்வரை வளர்ந்திருந்தது. விநாசி திரும்பி சற்றுத்தள்ளி நின்ற இவர்களைப் பார்த்து விட்டு கிட்ட வந்தான்.

"நீங்கள்தான் ராத்திரிக்கு கூத்துப் போடப்போற ஆட்களா?" செல்லத்துரை கேட்டார்."ஓமோம். நாங்கதான் போடுறம். ஐயாதான் பெரிதம்பி அண்ணாவியார்."

"நீங்க..."

"நான் விநாசி. ரெண்டு வருசமாய் இவரோடவந்து இருக்கிறன். இப்போதைக்கு சின்ன வேசம் தான். ஆனா ஒரு நாளைக்கு நல்ல வேசம் போடுவன்."

"நீங்கள் எங்கஇருக்கிறனீங்கள்."

"இங்க குஞ்சுப்பரந்தனில தான். நான் அண்ணாவியாருக்கு தூரத்துச்சொந்தம். இந்தக்கூத்து ஆசையால மீசாலையில யிருந்து வந்து இவரோட இருக்கிறன். இந்த கூத்துமுடிய வாறகிழமை கண்டாவளை கோயில்ல கூத்து போடப் போறம். கோயில் எல்லாம் சுத்திப் பாத்தனீங்களே"

"ஓமோம். சின்னக்கோயில் எண்டாலும் பேர் பெற்ற கோயில் போல கிடக்கு."

"பாருங்கோவன். மீசாலை கொடிகாமப்பக்கத்து சனம் நேற்றே வள்ளம் ஏறி வந்திட்டுதுகள். பூநகரி பக்கத்திலயிருந்தும் வண்டில் கட்டி வந்திருக்குதுகள் இவையள் நிண்டு கும்பிட்டு விடிய நீர்ச்சோறும் சாப்பிட்டிட்டுத்தான் போவினம்."

"கனகாலமாய் இந்தக் கோயில் இருக்குதே." கார்த்திகேசு கேட்டான். இந்தக்கோயிலை தொடக்கி வைச்சது யானை பிடிக்கிற பணிக் கர்தான். அந்த நாளில முத்துக் கொம்பனும் பவளக்கொம்பனும் பிடிபடவேணும் எண்டு அம்மனுக்கு நேர்த்தி வைச்சு கும்பிட்டினம். அவைக்குப் பிறகு இங்க கரை யோரங்களில மீன் பிடிக்கிற முக்கியர் நல்ல மீனுகள் நிறைய பிடிபடவேணும் எண்டு நேர்த்தி வைச்சுக் கும்பிட்டினம். இப்ப வயல் செய்யிற வேளாளர் நல்லாய் நெல்லு விளையவேணும் எண்டு நேர்த்தி வைச்சு பொங்குகினம். கேட்டதெல்லாம் அம்மன் தருவா எண்ட நம்பிக்கைதான்."

"அதாலதான் இத்தினை சனம் வருகுதுகள்போல" வியப்புடன் சொன்னான் சிவம்.

"எங்கட விதானையார் வாறார். இவர்தான் சிவலிங்கம் விதானை. இந்த ஊர் ஆள்தான். இங்கேயே பிறந்து வளர்ந்தவர். இடுப்பில் வேட்டி அணிந்து சுற்றி சால்வை கட்டி நெற்றியில் திருநீறு சந்தனத்துடன் நல்ல உயரமான அதற்கேற்ற பருமனான தோற்றத்தில் வந்து கொண்டிருப்பவரை சிவம் பார்த்தான். அவனை விட ஐந்தாறு வயது அதிகம் இருக்கக்கூடும். இவரை தனக்கு நல்ல பழக்கம் என்று வேலாயுதம் சொன்னது நினைவுக்கு வந்தது.

"என்ன விநாசி இதில நிற்கிறாய். அன்னதான ஒழுங்குகள் நடக்குதே." என்று கேட்டுக் கொண்டே கிட்டவந்தார்.

"தம்பியவை எவடம்?"

"நாங்கள் அஞ்சாம் வாய்க்காலில இருக்கிறனாங்கள். நான் வேலாயுதத்தின்ர தம்பி."

"அட வேலாயுதத்தின்ர தம்பியே. அண்ணையோட வந்து வயல் செய்யிறியே. வேலாயுதத்தை எனக்குத் தெரியும். காணி எடுக்க விண்ணப்பம் குடுத்திருக்கிறார் எப்பிடியும் காணி கிடைச்சிடும் தம்பி. நான் விசாரிச்சது எண்டு அண்ணையிட்ட சொல்லிவிடும். இங்க ஏரம்புவும் வருகுது. எல்லாருமாய் கும்பிட்டுப் போங்கோ. விதானையார் நடந்து போய் அண்ணாவியாருடன் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்.

"நான் கடிதம் குடுக்க வாறனான் தானே. அதால என்னை விதானையாருக்கு நல்லாய் தெரியும். என்ன விநாசி. கூத்து எல்லாம் ஆயத்தமே"

"எல்லாம் ஆயத்தம் தானே. விதானையார் எங்களுக்கு நல்ல ஆதரவு." என்ற விநாசி விதானையாரை திரும்பிப் பார்த்துவிட்டுச் சொன்னான்."

"விதானையாரில இங்க உள்ள சனங்களுக்கு நல்ல பிடிப்பு. நாலைஞ்சு வருசத்துக்கு முந்தி வெள்ளைக்காரர் தான் இவரை விதானை ஆக்கினவை." "வெள்ளைக் காரரோ...." மரியக் கண்டு வியப்புடன் கேட்டான். "நாலைஞ்சு வருசத்திற்கு முந்தி யாழ்ப்பாணத்து ஏஜெண்டாய் இருந்த ஹட்சன் ஐயா ஜீப்பில இந்த ஊருக்கு வந்து எல்லாரையும் கூட்டி வைச்சுத்தான் விதானையைத் தெரிவு செய்தவராம். ரெண்டு பேர் கேட்டவையாம் இவையில ஆருக்கு ஆதரவு கையை உயர்த்துங்கோ எண்டு ஹட்சன் ஐயா சொல்ல முழுச்சனமும் சிவலிங்கம் விதானைக்குத்தான் கையை உயர்த்தினவையாம். அதிலயிருந்து இவர்தான் விதானையாய் இருக்கிறார். நல்ல மனதுள்ளவர் கெட்டிக்காரர். சின்ன வயதிலேயே விதானையாய் வந்திட்டார்." கதைத்துக் கொண்டிருந்த விநாசி அன்னதானம் கொடுப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப் பட்டதைப் பார்த்துவிட்டு "நீங்கள் சாப்பிடுங்கோ. நான் போட்டுப் பிறகு வந்து உங்களைப் பார்க்கிறன்." என்று சொல்லி விட்டு கொட்டிலின் பக்க வழியாகப் போனான். அவர்கள் மற்ற வர்களுடன் சேர்ந்து தாமரை இலையில் அன்னதானச் சோறு வாங்கிச் சாப்பிட்டார்கள். சிவலிங்கம் விதானையார் சாப்பாடு கொடுப்பதை கவனித்துக் கொண்டிருந்தார்.



அவர்களின் பசிக்கு சோறு அமுதமாய் வயிற்றுக்குள் இறங்கியது. சாப்பிட்டு விட்டு கோவிலின் பக்கத்தில் பாலை மர நிழலில் அமர்ந்து கொண்டார்கள். இரவு கூத்து நடப்பதற்கு அருகே ஒழுங்குகள் செய்து கொண்டிருந்தார்கள். சிறுசிறு காட்டுக் கட்டைகளை நெருக்கமாக சதுரவடிவில் நட்டுவிட்டு உட்புறம் மண்ணைக் கொட்டி நிரப்பி அழுத்தி மேடை தயார் செய்தார்கள். விநாசியும் அங்கு நிற்பதைப் பார்த்துவிட்டு இவர்களும் போய் மண்கொட்ட உதவி செய்தார்கள்.

இந்த கூத்து ஆசையால் தான் வீட்டை விட்டு ஓடிவந்த கதைகளை விநாசி சொல்லிச் சிரித்தான். வெற்றிலை போட்டு சிவந்த வாயுடன் பாவனையோடு பேசும் விநாசியின் பேச்சு அவர்களுக்கு பிடித்தமானதாய் இருந்தது.

இரவு மேடைக்கு முன்புற வெளியில் சனங்கள் ஆவலாய் அமர்ந்திருந்தார்கள். மேடைக்கு சமீபமாக சிவமும் மற்றவர்களும் அமர்ந்து கொண்டார்கள். மேடையின் இரு புறங்களிலும் கோவிலின் சுற்றுப் புறங்களிலும் தேங்காய் எண்ணெயில் தோய்த்த பந்தங்கள் எரிந்தன. அவற்றின் வெளிச்சம் அந்த இடத்தையே பிரகாசமாக்கியது.

மேடையில் நடிக்கும் அனைவரும் ஒன்று கூடி சபைக்கு வணக்கம் சொன்னார்கள். தீபங்களின் வெளிச்சத்தில் அவர்களின் ஆடை அலங்காரங்கள் பளிச்சென்று மின்னியது.

"பெரியதம்பி அண்ணாவியாா இதுக்கென்றே இந்தியாவிலயிருந்து பட்டு உடுப்புக்கள் எடுப்பித்தவர் என்று ஏரம்பு சொன்னான். கூத்து ஆரம்பமாகியது.

ஆரம்பத்தில் சின்னக் காத்தான் வந்து ஆடிய பிறகு பெரியகாத்தானாக பெரியதம்பி அண்ணாவியார் ஆடிக்கொண்டு மேடைக்கு வந்தார். அவரது கம்பீரதோற்றமும் கணீரென்ற குரலும் அந்த காத்தவராயனையே கண்முன் நிறுத்தியது.

சிவம் முன்பும் சில கூத்துக்கள் பார்த்திருக்கிறான். இன்றைக்குப் பார்க்கின்ற இந்த கூத்து அவைகளை விடநன்றாய் இருப்பதாக மனதுக்குத் தோன்றியது. விநாசி வேடன் பாத்திரத்தில் இரண்டு காட்சிகளில் வந்து ஆடினான். விடிந்தது தெரியவில்லை. கிழக்கு வெளுத்து வானில் வெளிச்சம் வந்த போது கூத்து நிறைவு பெற்றது. பாட்டும் தாளமும் அவர்களின் ஆட்டமும் அனைவரையும் தம்மை மறந்து பார்க்கச் செய்திருந்தது.

விநாசியைத் தேடிப் போய் சொல்லிக் கொண்டு அவர்கள் புறப்பட்டார்கள்.

"அடுத்த வருசமும் வரவேணும்." என்றான் கார்த்திகேசு.

"ஓமோம் நானும் அதைத்தான் சொல்ல வந்தனான்."

"ஊரில இருக்கிற சனமெல்லாம் கூத்தில நடிச்சிருக்கும் போல கிடக்கு." என்றார் செல்லத்துரை.

"ஊர்ச்சனத்துக்கும் உப்பிடி கூத்துகள் எண்டால் விருப்பம் தானே. அண்ணாவியார் தான் என்னமாய் ஆடிப்பாடி நடிச்சார். இநதத்திறமை பிறவியில வரவேணும்." என்றான்சிவம்.

"ரெண்டு காட்சியில வேடனாய் வந்தாலும் விநாசியும் நல்லாய் நடிச்சான். அவனுக்குள்ள சரியான ஆசை இருக்கு. ஒரு நாளைக்கு கூத்தில பெரிய ஆளாய் வந்திடுவான்."

"நானும் நினைக்க கார்த்திகேசு நீ சொல்லிப்போட்டாய்" கோவிலுக்கு வந்தது மனதுக்கு நிறைவாய் இருந்தது.

கார்த்திகேசுவை அவன் கொண்டுபோய் விட்டுவந்து பகல் என்றும் பாராது அலுப்புடன் படுத்துவிட்டான்.

ஒரு மாதத்தின் பின் ஒரு மாலை நேரத்தில் சிவம் மயிலரின் கடைவாசலில் நின்ற போது வடக்கு திசையிலிருந்து நான்கு வண்டில்கள் வரிசையாய் வந்து சந்தியில் நின்றன.

"வன்னிவிளாங்குளம் அம்மாளாச்சியின்ர பொங்கலுக்கு சாமான்களை ஏத்திக் கொண்டு பண்டவண்டிலுகள் போகுது." என்றார் மயிலர். சிவத்துக்கு மாப்பாணரின் நினைவு வந்தது. திரும்பி வண்டில்களை உற்றுப் பார்த்தான். முன் வண்டிலில் இருந்த மாப்பாணர் அங்கிருந்தபடியே "எட தம்பி சிவத்தான்" என்று சத்தமாய்க் கூப்பிட்டார்.

"சிவம் வண்டில்களுக்கு கிட்டப் போனான். எதிர்பாராமல் அவரைக் கண்டது சந்தோசத்தைத் தந்தது.

"அம்மாளாச்சின்ர வைகாசி விசாகப் பொங்கல் அல்லே. வாழைக்குலை தேங் காய், பிலாப்பழம்எல்லாம் ஏத்திக்கொண்டு பொங்கலுக்குப் போறம். மெய்யே நீயும் வாவனடாப்பா.

"அய்யோ. அவ்வளவு தூரம் வர ஏலாதண்ணை. வயல் வேலையும் இருக்கு விட்டிட்டு வரஏலாது."

"சரி பின்ன பார்த்து அடுத்த வருசம் வாவன் வரட்டோப்பா. உன்னைக் கண்டிட்டுத்தான் நிண்டனான். அண்டைய சவாரிக்குப் பிறகு உன்னைக் காணேலை. இங்க வயல் செய்யிறியாம். மெய்யே பிறகு சவாரிக்கு வரேலை. நீயும் இங்க வந்திட்டாய். உன்ர சவாரி மாடுகளை விற்கிறதாய் இருந்தால் எனக்கொரு சொல்லுச் சொல்லிப் போடு. வரட்டே."

வண்டில்கள் சந்தி கடந்து மெதுவாய் ஒன்றன்பின் ஒன்றாய்ப் போனது ஒரு நிமிடம் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்துக்கு பரந்த திடலும் மாடுகளின் ஓட்டமும் ஆட் களின் ஓவென்ற ஆரவாரமும் கண்களில் மின்னி மின்னி மறைந்தது.

ஒரு உலகத்திலிருந்து இன்னொரு உலகத்திற்கு வந்தது போல் தோன்றியது அவனுக்கு.

(தொடரும்...)

எழில் மிக்க இவ் விளக்குகள்; ஆன்மாவின் சாளரங்கள். — டு பார்ட்டாஸ்

**அது வவுனியா** நகர்தெருவை ஊடறுத்துச்செல்லும் புகையிரத வழிக்கடவை. தனக்கான வழியால் புகையிரதம் போய்க்கொண்டிருந்தது. புதுக்குடியிருப்பிலிருந்து சென்றனர் இரு யுவதிகள். ஒரு யுவதிக்குப் புகையிரதம் தெரியாது - இந்தச்சினிமா யுகத்திலும் புகையிரதத்தைக்காணாத பிறவி அவள். அவளுக்குப்புகையிரதத்தைப்பார்க்கவியப்பாயி ருந்தது.

''என்னடி நீளமாயிருக்கு...?''

அவர்களாகவே இருப்பார்கள் எனத்தோன்ற வைக்கிறது.

அவர்கள் என்ன? எவர்கள் என்றாலும் எமக்கிடை ஒரு விழிப்பு நிலை ஏற்பட வேணும். அந்த விழிப்பு நிலையானது எம்மைப்பாதுகாத்தல் என்ற நிலையைச் சார்ந்தது.

இங்கே ஒரு புகையிரத அனுபவம் பற்றிச்சொல்ல வேணும். ஏனென்றால் மனிதரை மனிதர் நம்பும் இந்த பெருவெளி மனிதர்களுக்காகவே...

பை அவருக்குக்கொடுத்தார்கள்.

''வேண்டாம்'' என்று சொல்ல நட்பின் இறுக்கம் அவரை விடவில்லை. சிலமணி நேர நட்புக்கு எவளவு கனதி?

அவர் 'ரீ'யைக்குடித்தார்.

புகையிரதம் போய்க் கொண்டிருந்தது...

புறக்கோட்டை தரிப்பு இடத்துக்கு புகையிரதம் வந்து அரை மணியாகியதும் நடேசு இறங்கவில்லை. புகையிரதமும் அவரை இறக்கவில்லை.



# ஒரு புகையிரதப்பயணமும்

# அனுபவப் பகிர்வும்

யுவதி கூற தோழி சிரித்தாளாம்! இங்கே சிரிப்பதற்கு எதுவுமில்லை. போரால் மூடுண்ட ஒரு பிரதேசத்து மக்கள் நாம் - எங்கள் நிலம் ஒரு விடுவிக்கப்பட்ட பிரதேசம். கவலைத்துயர் ஆறாய் ஓடிய ஒரு பெருநிலம்.

இந்த நிலத்து ஒரு சந்ததியினருக்கு புகையிரதம் மட்டுமல்ல இன்னும் எத்தனை எத்தனையோ - தண்ணீரையே காசுக்கு வாங்குவதுபோல - புதிது புதிதான வரவுகள்....

இந்த விரிந்த உலகில், வெளியுலகு தெரியாது, வெளி நடப்புகள் அறியாது வலையில் சிக்குண்ட பறவைகளாய் சில காலம் வாழ்ந்த இந்தப்பெருவெளி மனிதர்கள் வெறும் ஏமாறும் மனிதர்களா?

அப்படித்தான் இன்று கதைக்கிறார்கள்(?) அப்படித்தான் இன்று நடக்கிறார்கள்(?) இப்படிக் கதைப்பவர்கள் நடத்துபவர்கள் வேறுயாருமில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வாழ்பவர்கள், வாழ்ந்தவர்களில் ஒரு சிலரே.

இராணுவமென்பது எம்மை அடக்கும் ஒரு சக்தி. அடக்குதல் என்பது வெறும் ஆயுதங்களால் மட்டுமல்ல. அதற்குப்பல வேறு பரிமாணங்கள் உண்டு. அவர்களின் துணையோடுதான் அவர்களின் நிழல் மனிதர்களாய் சிலர் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

கொள்ளை, கொலை, களவு, என நீள, அச்சம் விரவ... இந்த குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் என சந்தேகம் கொள்பவர்களை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளாய்ப்பதிவுகள் செய்தாலும் பொலிஸ் பிரிவினர் இடையில், ஒரு கவனிப்பற்ற நிலையே வெளிப்படுகின்றன. இந்த நிலைகளைப்பார்க்கும் போது அந்த செயல்களில் ஈடுபடுபவர்கள்

இது ஒரு சாதுர்யமான ஏமாற்றுத்திருட்டுச்சம்பந்தமானது. க.நடேசு இவர் வரணி நாவற்காட்டைச்சேர்ந்தவர். 'சூரியக்கதிர்' இடப் பெயர்வோடு அக்கராயனில் வசிப்பவர்.

இவருக்கு புகையிரதம் புதிசல்ல, பயணமும் புதிசல்ல. ஆனால் அந்தப்பயணததில் சந்தித்தவர்கள் தான் புதியவர்கள்.

புகையிரதம் போய்க் கொண்டிருந்தது.... அந்த இருவரும் அவரையே பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அவரும் பார்த்தார். அவர்கள் சிரித்தனர் - அவரும் சிரித்தார்.

சிரிப்பு ஒரு இணைவுப் பாலமானது. அவருக்குத் தனிய என்ற பயம் கலைந்தது.

"நாங்களும் உங்கள் இடம் தான். நீங்களிப்ப "அங்கை" தானே இருக்கிறியள்?"

"ஓ! அக்கராயனில் தான்."

அவர்கள் புத்திசாலித்தனமாய்க்கதைத்து அவரின் இடத்தை அறிந்து விட்டார்கள்.

"நீங்கள்..."

"நாங்களும் பக்கத்திலை தான்"

''அம்பலப்பெருமாள் கோயிலே?"

"ஓ!"

நட்பு விரிந்தது - நடேசு பாவம். வன்னிச்சூழல். சுற்றி வளைப்புக்களற்ற மனிதநேயப் பண்புகளில் பழகும் சுபாபம் கொண்டவர். அவர்கள் கதைத்து விட்டு மற்றப் பெட்டிகளுக்கு மாறினார்கள்.

ஐந்து நிமிடங்கள் கழிந்ததும் இருவரும் கைகளில் "ரீ" கொண்டு வந்தார்கள், ஒரு "கப்"

நடேசு சாதுவாய் கண்களைத்திறந்தார். புகையிரதத்தில் எவருமில்லை. நித்திரை! கண்களைக்கசக்கினார். சீ! மயக்கம்!

கைகளால் ''சீற்றைத் தடவிப் பையைப் பார்த்தார் - ஏமாற்றம் என்ன நடந்தது?

''அந்த இரு நட்பு மனிதர்கள் எங்கே..?"

"ரீ' இல்லை அது மயக்க மருந்து.."

"ஐயோ..."

''கிளினிக்காட், I.C புலிகளின்ரை பாஸ் - காசு பத்தாயிரம்..." கத்திக்கொண்டு புகையிரதத்தால் இறங்கினார் - முறிந்த கால்கள் நிலத்தில் மிதிக்க வலித்தபடி இருந்தது அவருக்கு.

வலி! பெரும்வலி!!

''வீடு போகக்காசு இல்லை..."

கத்திக்கொண்டே நடந்தார்...

. இப்படித்தான் இன்று புகையிரதங்கள்.... புகையிரதங்கள் மாறாது மனிதர்கள் தானே மாற்றம்...?

நடேசை சுற்றி நின்றவர்களில் ஒருவர் சொன்னார் "நேற்றும் உப்பிடித்தான்... மத்திய கிழக்கு நாடொன்றால் வந்தவர். அவர் மூண்டு வருசம் வேலை செய்து விட்டு வந்தவர் - மயக்க மருந்து கலந்த "பிஸ்கட்டகொடுத்திட்டு ஏழு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையையும் பையையும் தூக்கிக்கொண்டு போட்டார்கள்" என்று!

**எரிசரன்**

# பொடுகு நீங்கி முடி வளர...

பொடுகு நீங்கவும் முடி வளரவும் இதோ உங்களுக்கு சில ஆலோசனைகள்.

01) மருதாணியை லேசாக இடித்து வெயிலில் காய வைத்து நன்றாக பொடியாக்கி அதில் சிறிதளவு எடுத்துக்கொள்ளுங்கள்.

02) மருந்துக்கடையில் காய்ந்த நெல்லிக்காய் 4 வாங்கி மிகக் குறைந்த அளவு தண்ணீரில் அதனை நன்றாக வேகவைத்து அந்த நீரை ஒரு தேக்கரண்டி அளவு எடுத்துக்கொள்ளுங்கள்.

03) ஒரு எலுமிச்சைப்பழத்தைப் பிழிந்து சாறு எடுக்கவும். ஒரு தேக்கரண்டி தயிர், கெட்டியான தேயிலைத்தண்ணீர் ஒரு தேக்கரண்டி, நாட்டுக்கோழி முட்டையின் வெள்ளைக்கரு ஒன்று ஆகியவைகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

மருதாணி பொடியில் எல்லா பொருட்களையும் சேர்த்து மாலை நேரத்தில் இரவுமுழுவதும் அப்படியே வைத்திருங்கள். எவர் சில்வர் அலுமினியப்பாத்திரங்களில் இதனை வைக்கக்கூடாது. காலையில் சீப்பால் முடியை நன்றாக சீவி பிரித்து விட்டுக் கொண்டு இந்த கலவையை மண்டையோட்டில் நன்றாகத் தேயுங்கள். கூந்தலில் மட்டும் இதனை தேய்த்தால் பலன் கிடைக்காது. ஒரு மணி நேரம் கழித்து குளியுங்கள். வாரத்தில் ஒருநாள் வீதம் ஒரு மாதம் தொடர்ந்து இதனை தேய்த்தால் நல்ல பலன் கிடைக்கும்.

# இன்னும் சொல்ல எவ்வளவோ இருக்கு...



ஜறின் தனது தோழியோடு பூங்காவின் பக்கமாய் வந்துகொண்டிருந்தாள். தோழி லீசாடியை ஜறினுக்கு மிகவும் பிடித்திருந்தது. தொடர்ந்து இரண்டு வருடமாய் ஒன்றாய் ஒரேகல்லூரியில் படிக்கிறார்கள். லீசாடி மிகவும் இலட்சியப்பிடிப்பு உள்ளவளாகத்தான் ஜறினுக்குத்தெரிந்தாள். அவளுடைய ஒவ்வொரு செயலுக்கு நோக்கமும் இலக்கும் இருந்தது. ஏனைய கல்லூரித்தோழிகளிலிருந்து பல விடயங்களில் வேறுபட்டாள். எதைப்பற்றியும் லீசாடியால் தெளிவாகப்பேசமுடிந்தது. தெரியாத விடயங்களைக்கூட தெரியாது என ஒப்புக்கொண்டாள்.

இருவரும் பூங்காவின் தெற்கேயுள்ள ஒரு பாறையின் சரிவில் போய் அமர்ந்துகொண்டார்கள். ஜறின் தனது ரீசேட்டின் கொலரை சீர்செய்தபடி டெனீம் ஜீன்சையும் முழங்காலளவுக்கு இழுத்து விட்டுக்கொண்டாள். லீசாலி தனது சப்பாத்துக்களின் நாடாக்களை இலேசாக தளர்த்திவிட்டாள். இப்போது லண்டனில் வெப்பநிலை உயர்ந்துவிட்டது.

"இம்முறை லீவுக்கு என்ன புறோக்கிராம் வைத்திருக்கின்றாய் ஜறின்?''

லீசாடியின் கேள்வியை திகைப்புடன் எதிர்கொள்ள வேண்டியிருந்தது ஜறினுக்கு.

"பெரிதாக ஒரு திட்டமும் இல்லை"

"அப்படியானால் விடுமுறை பற்றி இன்னமும் நீ சிந்திக்கவில்லை. அதுதான் உன்னால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என நினைக்கிறேன் நான்''

ஜறினுக்கு உண்மையில் திகைப்பாய் இருந்தது. முகத்தில் செம்மை பரவி உடம்பிலும் ஒரு விதமாற்றத்தை உணர்ந்தாள்.

"லீசா உங்களின் விடுமுறைக்கான திட்டம் என்ன?"

''நான் எனது அவுஸ்ரேலியாவிற்கு போகிறேன். அங்கே என்னைக்காண எல்லோரும் ஆவலாக இருப்பார்கள். அதுஎன் தாய் நாடு.''

லீசாவின் கண்களில் தான் எத்தனை மலர்ச்சி. என்னால் அவளின் மகிழ்ச்சியை விளங்கிக்கொள்ள முடிந்தது.

''உங்களுடைய அம்மாவும் அப்பாவும் லண்டனிலல்லவா இருக்கிறார்கள். அவர்களும் அவுஸ்ரேலியா வருகிறார்களா?"

"தெரியவில்லை. நான் அது பற்றி அவர்களுடன் பேசவில்லை. என்னுடைய திட்டப்படி நான் போக இருக்கிறேன். விரும்பினால் அவர்களும் வருவார்கள். ஏன் அப்படிக்கேட்கிறாய் ஜறின்"

ஜறின் மௌனமாகவே இருந்தாள். மென்மையாய் வீசிய காற்று லீசாடியின் பொன் நிறக்கேசங்களை கலைத்தது.

"உனது அம்மாவும் அப்பாவும் கூட லண்டனல்லவா அதற்கேற்றபடி ஒரு புறோக்கிராம் போடலாம் தானே."

"லீசாவின் கேள்விக்கு ஜறின் தலையை ஆட்டினாள். ஆனாலும் என்னுடைய அம்மாவின் அப்பா சிறிலங்காவில் பிறந்தவர். தமிழர்!"

இப்போது சற்று வயதாகிவிட்டது. யாரோடும் அதிகம் பேசுவதில்லை.

சொல்லிவிட்டு ஜறின் மேலே பார்த்தாள். லீசா ஜறினை கூர்ந்துபார்த்தாள். ஜறின் தனக்கு பக்கத்தில் இருந்த மரத்தின் கிளையில் இலைகள் அசைவதைப்பார்ப்பவள் போலிருந்தாள்.

"அப்போ உனது வேர் சிறிலங்காவில்தானுள்ளது. நீ அதை தேடவில்லையா ஜறின்" என்றாள் லீசா.

ஜறின் நிமிர்ந்து லீசாவைப்பார்த்தாள். அவளின் முகத்தில் மின்னலின் செம்மை பரவியிருந்தது. சிறுவயதில் ஒரு தடவை தாத்தா சொன்னது ஞாபகத்தில் வந்தது. "நீயும் நானும் ஒரு முறை எனது யாழ்ப்பாணத்திற்கு போய் வருவோமா"

லீசா என்னுடைய ஆழ்மனதில் எப்போதும் பயணம் பற்றிய ஆவல் உண்டு. நாளைக்கு என்னுடைய தாத்தா வீட்டிற்குபோய் வருவோமா. தாத்தா எங்களைக்காணுகையில் சந்தோசமடைவார்.

நிச்சயம் நீ அவருடன் பேச வேண்டும்.

"என்ன பேச வேண்டும் ஜறின்"

"ஜறின் விடுமுறைக்காக சிறிலங்காவுக்குப் போறாளென்று. லீசா ஜறினை வியப்போடு பார்த்தாள். ஜறின் முகத்தில் ஏதேவொரு அழகு குடிகொண்டிருந்தது.

"யாருடன் நீ போகப்போகிறாய்"

"நான் என்னுடைய தாத்தா பாட்டியோடு தான்"

"அவர்களால் வர முடியுமா?"

"பாட்டியால் முடியாவிட்டாலும் தாத்தாவால் முடியும். அவருக்கு தனது யாழ்ப்பாணத்தைப்பார்க்க ஆவலாயிருக்கும். ஏனென்றால் ஐம்பது வருடங்களின் பின்னர் தன்னுடைய மண்ணுக்கு அவர் போகப்போகிறார். கூடவே நானும்"

"ஐம்பது வருடங்களாக அவர் போகவில்லையா. ஏன் அப்படியிருந்துவிட்டார்?" என்றாள் லீசா.

"தாத்தா படிப்பதற்காக ஜேர்மனிக்கு வந்தார். பாட்டியை திருமணம் முடித்துக்கொண்டார். ஜேர்மனியில் படிப்பு முடிய பாட்டி தன்னுடைய தாயகத்திற்கு (லண்டனுக்கு) அழைத்துவந்துவிட்டார். அவரால் தன்னுடைய நாட்டுக்கு போகமுடியவில்லை. அல்லது போக முயற்சிக்கவில்லை.

"அவருடைய அம்மா அப்பா சகோதரர்கள் எப்படி இருக்கிறார்கள்."

''எதுவும் தெரியவில்லை. எல்லாவற்றையும்தான் பார்க்கப் போகிறோம்''

ஜறினின் கண்களில் தான் எத்தனை மகிழ்ச்சி. ஏதோவொரு இனம் புரியாத சந்தோசமாய் ஜறின் இருந்தாள். புன்னகையோடு லீசாவின் கைகளை இறுகப்பற்றிக்குலுக்கினாள்.

நன்றி லீசா நான் வருகிறேன்.

மிக்க நன்றி ஜறின்.

அவர்கள் சென்றதும் பாறையின் வெறுமையை சகிக்க முடியவில்லை.

*வனதாஸ்*

கறைகள் நிறைந்த ஒரு தொகுதியல்ல, கதிரவன். - அக்ஸ்ட்டின் டிர்ரெல்

# நல்லூர் கந்தசுவாமி கோயில்

## தேர்த்திருவிழா சிறப்பிதழ்-26-08-2003

### தமிழ்வடிவாய் வந்த தலைவா போற்றி



தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய்
தரணிக்கோர் இறையாகக் கந்தா நின்றாய்
உமையவளின் திருமகனாய் உலகம் கண்டாய்
ஓங்காரப் பொருளனைத்தும் உளத்திற் கொண்டாய்
அமிழ்த மெனும் தமிழுக்கே அழகைச் சேர்த்தாய்
அழகுக்கு அழகாக அவதரித்தாய்
தமை நாடும் எளியவர்க்குத் தாயாய் வந்தாய்
சரவணத்து தாமரையில் தமிழாய்ப் பூத்தாய்

தமிழ் வடிவாய் வந்த தலைவா போற்றி
தமிழ் குடியைக் காக்கின்ற இறைவா போற்றி
உமை என்னும் உளம் மறவா உயிரே போற்றி
ஓம் என்னும் மந்திரத்தின் உணர்வே போற்றி
இமைத்திடுமுன் எம் கவலை தீர்ப்பாய் போற்றி
எழில் மயிலில் பறந்துவரும் இளையோய் போற்றி
தமிழ்க்கவிதை தனிற் பிறந்த தலைவா போற்றி
தனை வணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி.

செல்வி யசோதா பாலசிங்கம்

சிறப்பிதழாக்கம்
காரையூரான்


தேரில் ஏறிவரும் நல்லைக்கந்தன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

MD-90 மற்றும் றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிள்கள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள், பற்றரி வகைகள், அசிட் வகைகள், சோலர் வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

TOYOTA GENUINE PARTS
IZUMI
CTR
Guaranteed Motor Spares from M. M. Organisation
TAKOMA
MINTYE

அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
இல – 108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

அருள் விநாயகர் றேடர்ஸ்
இல – 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-8356)

நல்லைப் பதியுறையும் நாயகனே உன் வரவு நாடெங்கும் நலம் புரிய...

TVS
TVS Victor More smiles per hour

TVS Lanka Private Ltd. இன்
அங்கீகரிக்கப்பட்ட (3S)
யாழ் முகவர்



TP-0777-340056
021 222-6185

சுசுக்கி ரேடர்ஸ்
இல:-59 கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்
(சி-8352)

STAFFORD MOTOR CO-LTD இன்
அங்கீகரிக்கப்பட்ட
(3S) யாழ் முகவர்


HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

RG இரத்தினகோபால்ஸ்
இல:-63,65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

TP-0777-340056
021 222-6185

HERO HONDA 2 Year warranty

கலையம்சத்துடன்
வடிவமைக்கப்பட்ட பைக்



(சி-8351)



# நல்லூர் கந்தசுவ...
# தேர்த்திருவிழா சிறப்பித...

தேர் ஏறி வரும் நல்லூரான் அருள்
நாடெங்கும் பாலிக்குக!

லுமாலா, கீறோ துவிச்சக்கரவண்டிகளும்,
அதன் உதிரிப்பாகங்களும்
யாழ்நகரின் முன்னணி விற்பனையாளர்கள்

ஈஸ்வரன் ரேடர்ஸ்

TP – 021 222 2813
இல:69,கஸ்தூரியார் வீதி, (சி-8337) யாழ்ப்பாணம்

## நாளை எம் தேசத்தி...
## ஈழத்து நல்லூரில் ஆறுமுக...

முருகப்பெருமானிடத்திலே அமையும் கருணை அனைவராலும் விரும்பி அனுபவிக்கப்படுவதாகும். எவரெவர்க்கு எவ்வெவ்வாறெல்லாம் அருள்புரிய வேண்டும் என்ற கருணையுள்ளங் கொண்ட கலியுகவரதன் கந்தக் கடவுள் உலகிலேயுள்ள இயல்புகளெல்லாங் கொண்டு இயற்கையுடனானவனாகவும், இயற்கையதீதனாகவும் விளங்குபவன் ஆறுமுகன். அடியவர்கள் வருந்தியழைக்கும் பொழுதெல்லாம் வேலோடும் மயிலோடும் தோன்றி அருள்புரிபவன் ஆறுமுகவன். ஐந்து முகங்களையுடைய சிவப்பரம்பொருளினால் தோற்றுவிக்கப்பட்டவன் ஆறுமுகன்.

முருகனைச் செந்தமிழாலும் பாடி வழிபடலாம். கொடுந் தமிழாலும் பாடலாம். ஏனெனில் தமிழாலே வைது - நிந்தித்துப் பாடினாலும் அதனைப் பெருமனதோடு ஏற்றருளுபவன் முருகன் இதனாலேயே "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன்" என்கின்றார் அருணகிரிநாதர். செயலாலே "தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்" என்று கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகின்றார். முருகனை வலிமையும், அழகும், அருளும், அன்பும் பொருந்திய பெருங்கடவுள் என்ற கருத்தில் கந்தபுராணம் காவியநாயகனுக்குப் பாடுகின்றது. "சூரனுடலறவாரி சுவறிடவேலை விடவல பெருமாள்" என்று திருப்புகழிலே சிறப்பிக்கப்படுகின்றான். தாரகன்,சிங்கன்,சூரன் ஆகியோரது செருக்கடக்கிய செம்மல் முருகப்பெருமான். "நான்" என்னும் அகந்தையும் 'எனது' என்னும் மமதையும் ஆணவமும் அடங்கிய கதையின் தனமுதற் பரம்பொருள் முருகப்பெருமானேயாவார். "சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்" என்ற வரிகளுக்கு இன்றும் தனிப்பெருந் தெய்வமாக நின்று பெருமை பெறுபவன் முருகன்.

தமிழ்த் தெய்வமாக விளங்கும் முருகனுக்குத் தமிழ் மக்கள் வாழும் இடமெல்லாம் கோவில்கள் எழுப்பப்பட்டன. முருகனுக்கும் தமிழருக்குமிடையிலுள்ள தொடர்பு வரலாற்றிற்கும் அப்பாற்பட்டதெனலாம். ஈழமணித் திருநாட்டிலும் கருணைக் கடலாகிய முருகன் கதிர்... திலும்,மாவிட்டபுரத்திலும்,செல்வச்சந்நிதியிலும், கந்... கடவையிலும், மண்டூரிலும், நல்லூரிலும் ... கொண்டிருக்கின்றான்.

இத்தகு சிறப்புக்கள் பெருக்கும் முருகன் நல்... அலங்காரக் கந்தனாக வீற்றிருந்து அருள் பாலிக்கி... யாழ்ப்பாணத்தில் கந்தபுராணக் கலாச்சாரத்தின் உறை... நல்லூர் நல்ல-ஊர். சைவ அனுஷ்டானங்களுக்... குன்றாக விளங்குகின்றது. நல்லைக் கந்தனுடைய ... ஆண்டுக்கான மகோற்சவங்களெல்லாம் ஆடி ... பதினெட்டாவது நாள் (03.08.2003) ஞாயிற்றுக்... கொடியேற்றத்துடன் சிறப்பாக ஆரம்... நடைபெற்று26.08.2003 செவ்வாய்க்கிழமை தேர்த் தி... தமிழர்களின் தேசியப் பெருவிழா- நல்லூரில் கோலா... பக்தி பூர்வமாக நடைபெறுகின்றது. பூலோக கைல... நல்லூர் காட்சி தருகின்றது. இலட்சோப இலட்சம் ... நல்லைக்கந்தன் தேர்காணத் திருவருள் ... திரண்டிருக்கின்றார்கள்.

ஆறுமுகப் பெருமான் தேரிலே ஆரோக... அற்புதமாக தேவியர் சகிதம் திருப்பவனியாக உலா... அருள் நலம் வழங்கும் காட்சி மாட்சிமை மி... மலருகின்றது. நெருங்கிவரும் இச் சமாதான முக... நிறைவான தீர்வினைத் தேடித்தரும் பொழுதாக ... வேண்டுமென அனைவரும் கந்தனை, கடம்... கலியுகவரதனை, நல்லூர் வேலவனை இவ் நன்ன... வேண்டி வணங்க விழைகின்றனர்.

"ஆறுமுகம் இருக்க அவன் கைவேலிருக்க...
வேறு துணை யாரெமக்கு வேண்டும்
வெற்றி வேலனவன் தாள் பணிய வேண்டும்"

**கவிமாமணி மதுரகவி.காரை.எம்.பீ.அருளா...**
**(அமைப்பாளர், ஈழத்தமிழர் சைவத்தமிழ் பண்பாட்டு...**
**-யாழ்ப்...**

தேரிலே எழுக என்றும் – உனைத்
தேடுவோர் துயரம் அகல – இவ்
ஊரிலே உன்புகழ் பரவ – என்றும்
ஒளியருள் வீசி வருக!

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
நாவிற்கினிய ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
அறுசுவை உணவுகளுக்கும்

லிங்கன் கிறீம் ஹவுஸ்

(சி-8340)
இல: 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அலங்காரத் திருமுருகன்- தேரில்
எழுந்தருளும் இந்நாளில்: பட்ட
அவலமெல்லாம் நீங்கட்டும்-எங்கும்
அன்புச்சுனை பெருகட்டுமென வேண்டுகின்றோம்.

ரூபரா சண்முக வர்த்தகநிலையம்

(சி-8338)
இல:104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தியாக வரலாற்று வீதியிலே
வண்ணத் தேரிலேறும் கந்தா;
எங்கள் எண்ணமெலாம்
உன்னிடத்தை நாடிநிற்குதே-வாய்
ஏற்றிப் புகழ் பாமாலை பாடிச் சொல்லுதே
யாழ்நகரில் அழகு சாதனப் பொருட்களின்
மொத்த,சில்லறை விற்பனையாளர்கள்

லக்சுமி பென்சி

இல:-224,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-8349)

ஓராறு முகம் கொண்டு
உலகை ஆளும் திருக்குமரா! ...
ஈராறு கரமதாலே எங்களை தி...

மக்கள் போற்றும் மக...
ஜவுளிகளின் சாம்ராஜ்...

சிவகணேசன்ரெக்...

இல:-41, பெரியகடை.

ஆறுபடை வீடுடைய
ஆறுமுகக் கடவுளே!
எங்களைத் தினம் காத்திடப்பா!

நங்கையர் விரும்பும் நவநாகரீக
நகை வடிவங்களை நம்பிக்கையுடன்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சிறி நதியா நகை மாளிகை

இல:01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-2222709
(சி-8339)

ஈழமண்ணில் அமைதி நிலவ
எழுந்துவாடா திருக்குமரா!
நாளும் வாழ்வில் நன்மைபயக்க -தேரில்
நகர்ந்து வாடா நல்லைக்கந்தா!



உங்கள் ஆளுமையான
தோற்றத்திற்கு குடும்பத்துடன்
வாருங்கள்

ரவி அன் ராஜ் சில்க்ஸ்

இல: 618, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-8341) TP-021 222 2469


தேரி...
சில...
கைய...
(சி-83...

# ...சுவாமி கோயில்

# ...பிதழ்-26-08-2003



## ...த்தில் நல்லதீர்வு தர
## ...வமுகன் தேரேறி வருகிறான்



...கன் கதிர்காமத்
...தியிலும், கந்தவனக்
...ல்லூரிலும் கோவில்

...ம் முருகன் நல்லூரிலும்
...அருள் பாலிக்கின்றான்.
...ரத்தின் உறைவிடமான
...ஷ்டானங்களுக்கெல்லாம்
... கந்தனுடைய சுபானு
...லாம் ஆடி மாதம்
...) ஞாயிற்றுக்கிழமை
...ாக ஆரம்பமாகி
...மை தேர்த் திருவிழா-
...லூரில் கோலாகலமாக
... பூலோக கைலாசமாக
...சாப இலட்சம் மக்கள்
... திருவருள் பெறத்

...ரிலே ஆரோகணித்து
...வனியாக உலாவருவது
... மாட்சிமை மிக்கதாக
... சமாதான முகூர்த்தம்
... பொழுதாக அமைய
...தனை, கடம்பனை,
...ன இவ் நன்னாளிலே

... கைவேலிருக்க
... வேண்டும்
...னிய வேண்டும்"

...ரை. எம். பீ. அருளானந்தன்
...தமிழ் பண்பாட்டுக்கழகம்
-யாழ்ப்பாணம்)


நல்லை ஆறுமுக வேலன் -தன் அருளொடு இன்பம் அனைத்தும் இன்றைய நன்நாளில் எல்லோர்க்கும் ஈந்திடப் பிரார்த்திப்பவர்கள்

உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22கரட் தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**சாரங்கா நகைமாடம்**

இல:157/1கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T-P-021-2222480
Fax- 021-222 2480

கிளைநிறுவனங்கள்

அருள் முருகன் நகையகம்,
96/1,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்,**
45,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். TP-021 2226059

(சி-8345)



பாரெங்கும் முருகன் புகழ் பாடவேண்டும்!
செய்த பாவம் யாவும் நம்மை விட்டு நீங்க வேண்டும்!
தீப ஒளி கண்டு அருள் பொங்க வேண்டும்!

அச்சகபேப்பர் வகைகள் ,
அச்சக மை வகைகள்
காகிதாதிகள்,
அலுவலக உபகரணங்கள்

இவை அனைத்தையும் நீங்கள் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

**அற்புதா ரேடிங் கொம்பனி**

இல: 198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021-222 2505

(சி-8344)



...ண்டு
...திருக்குமரா! என்றும்
...எங்களை தினம் காத்திடுவாய்!

...ற்றும் மகத்தான
... சாம்ராஜ்சியம்

**...ன்ரெக்ஸ்ரைல்ஸ்**

(சி-8350)

...டை. யாழ்ப்பாணம்.



வண்ண அருளொளி வீசித் தேரில் வலம்வரும் எழில் குமரனின் அருள் எல்லோர்க்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

- சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
- கூறைச் சேலைகள்
- பட்டு வேட்டிகளுக்கு
யாழ்நகரில் கைராசியான நிறுவனம்



**சீமாட்டி புடைவைக்கடல்**

(சி-8353)

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-2222196





தந்தைக்கு உபதேசம் சொன்ன
தங்கவேலோன்
தங்கரதம் மீதேறிவரும் நன்னாளில்
தமிழரெல்லாம் தலைநிமிர்ந்து வாழ
பிரார்த்திக்கின்றோம்.

நயம்! நாணயம்!! உத்தரவாதம்!!!

**சிறி கருமாரி நகையகம்**

அசல் 22 கரட் தங்கத்தில்
காலத்திற்கும் கருத்திற்கும் உகந்த
நவீன டிசைன்களில் தங்க நகைகளை
பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

இல.177 - D, கஸ்தூரியார் வீதி,
(வின்சர் தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

T.P: 021-2225385

(சி-8347)



தேரினில் ஏறி வரும் எம் தெய்வ முருகனின் தேவ அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

1980 ஆம் ஆண்டில் இருந்து
இன்று வரை புகைப்படம் என்றால்
உங்கள் மனதில் இனிக்கும் பெயர்




**போட்டோ சண்கோ டியிற்றல் கலர் லாப்**

இல: 204,கண்டிவீதி, வவுனியா
T,P 024-21130
கிளை: இல:84, காங்கேசன் துறை வீதி,
சுன்னாகம்.
T.P.0777-110261

சில மணித்துளிகளில் உங்கள்
கையில் உங்களின் புகைப்படம்

(சி-8342)



...ஸ்
...ணம்.



வண்ணத்தேரேறி- வீதி வலம் வரும் திருக்குமரன்
நம் மக்கள் துயரறிந்து-அவர் மனம் குளிர
மனதார வேண்டுகின்றோம்.

உங்கள் நாவிற்கினிய குளிர்பான
வகைகளை சுவைத்து மகிழ ஒரு முறை
விஜயம் செய்து பாருங்களேன்.


**கல்யாணி கிறீம் ஹவுஸ்**


இல:73,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(சி-8343)

# நல்லூர் கந்தசுவாமி கோயில்
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்-26-08-2003

## தேசநலன் காக்க தேரேறி வருக!





ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி
தேறுதலைத் தந்தே தேச நலன் காக்க தேரிலேறி வருக
நாறு மாலையோடு நலிந்த வரைக்காக்க
நாலுதிக்கும் தொழவே நல்லூரா தேரிலேறி வருக
வீறு கொண்ட சூரன் வெம்பகையை முடித்த
வேலைத் தாங்கி முருகா தேரிலேறி வருக
தீர்வு தந்தெமது திருநாட்டைக் காக்க
சேதியொன்று கொண்டு தேரிலேறி வருக!

எழிலான நல்லூரா இந்நாட்டு
எல்லோரின் வாழ்விலும் வழிகாட்டு
பொழிலான மயிலேறி பழியோட்டு
புது வாழ்வை மண்ணிலே நிலைநாட்டு
தமிழான கடவுளே அருள் கேட்டு
தாள்களைப் பணிகிறோம் ஒளிகாட்டு
அமிழ்தான தமிழிலே உன்பாட்டு
ஆக்கியே வணங்குகிறோம் வழிகாட்டு.

—— ஈழத்தரசன்


ஆறுமுகனே! உன் அருள் தனைப்பெறவே
இரு கை கூப்பித் தொழுகின்றோம்.

டீ.வி, டெக், குளிர்சாதனப்பெட்டி, றேடியோ,மின்விசிறிகள்,
கணனிகள் ஓடியோ வீடியோCD பிளேயர்இவை அனைத்தையும்
ஒரு வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

**ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்**

இல: 01C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P 021-2225349 (சி-8360)

நல்லை நகர் மீதமர்ந்த நாயகா!
கந்தனாகி நிற்கின்றாய் -முருகா
காத்திடையா எமைக்கடைசிவரை!

உங்கள் எண்ணம் போல் கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்

**முத்துமாரி நகைமாடம்**

இல:78 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் (சி-8346)

**புதிய கருமாரி நகையகம்**
நாச்சிக்குடாச்சந்தி,முழங்காவில்.

நல்லூரான் அருள் நாசிடங்கும் பாலிக்குக!

இலவச கண் பரிசோதனை செய்து.
நவீன ரக பிறேம்களில்
மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள

**மொறாயஸ் ஒளிச்சுடர் பல் மூக்குக்கண்ணாடியகம்** → இல.05,பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்) யாழ்ப்பாணம்.

**ஒளிச்சுடர் மூக்குக்கண்ணாடியகம்** → 44A, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். (சி-8357)

தங்க வேலோன் தேரேறி உலாப்போகும் நேரம்- எங்கள்
தமிழினத்தின் தலையாவும் நிமிர்கின்ற காலம்: வீரம்
பொங்கி வரும் வேளையிலே வேலுக்குண்டு வேலை - உடன்
பொசுங்கி விடும் கந்தனாலே கவலை எல்லாம் நாளை.

**யாழ்ப்பாணம்- சுன்னாகம் பழரசத் தொழிலகம்**

**ஜசுபி தயாரிப்புக்கள்**

உள்ளூர் பழத்தில் இருந்து முற்றிலும் சுகாதார முறையில் தயாரானது

மாம்பழகோடியல்
பழக்கலவை கோடியல்
தேசிக் கோடியல்

நெல்லி ரசம்
மாம்பழ ஜாம்
விளாம்பழ ஜாம்
ஸ்ரோபரி ஜாம்
பழக்கலவை ஜாம்

தக்காளி சோஸ்
மிளகாய்-சோஸ்

Quality Jaffna Product

மாமபழ சட்னி, தேசி ஊறகாய்
மோர் மிளகாய்




எமது உற்பத்திப்பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம். TP 070-2123 070-2128 ஜசுபி தொழிலகம் உடுவில். (சி-8354)

கொல்வோர் கதை முடிக்க வெல்லும் வேல் சுமந்து
வீதியுலாப் போகுமெங்கள் திருக்குமரா: இங்கு
வல்லோர் நாமென்று "வருவோர் போவோருக்கு" தினம்
வண்ணமயில் மீதமர்ந்து காட்டிடையா!

வன்னிப் பெருநிலப்பரப்பின் தலைசிறந்த வாணிபம்

**மெய் மெய் உதிரிகள் வாணிபம்**


**(MST)**

உழவு இயந்திர உதிரிகள்
பஜாஜ் வகை மோட்டார் வாகன உதிரிகள்
சுசுக்கி மற்றும் **TVS** விக்டர், கீரோ கொண்டா
மோட்டார் வாகன உதிரிகள்
எக்சைட் பற்றரி வகைகள்

ஆகியவற்றை நியாய விலையில் உடனுக்குடன்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**மெய் மெய் உதிரிகள் வாணிபம்**

யாழ்சாலை கிளிநொச்சி.



**(MST)**

(சி-8355)



# நல்லூர் கந்தசுவாமி கோயில்
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்-26-08-2003



நல்லைக் குமரனருள் நாடெங்கும் பரவட்டும்!

துவிச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள்,
பெப்சி,மிரான்டா சோடா வகைகள்
ரீ.வி, றேடியோ,வீடியோ,ஓடியோ கருவிகள்
அழகு சாதனப் பொருட்கள்

E.S.P E.S.P

விற்பனையில் யாழ் நகரில்
தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

## இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

50.52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8372)

தொலைபேசி-021-2222988
தொலைநகல்-021-2222368

நல்லை நகராளும் நாயகனே!
உன் அருள் எல்லோருக்கும் கிடைத்திடஉன் தாழ் பணிந்து நிற்கின்றோம்.

ரீ.வி, டெக் றேடியோ, மணிக்கூடு
அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்தையும் பெற்றுக் கொள்ள
அன்றும் இன்றும் என்றும்
நன்மதிப்பை பெற்று விளங்கும்
ஒரே ஸ்தாபனம்.

## ராஜு ஸ்ரோர்ஸ்

இல:67,69 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பர்ணம்.
T.P-0094-21-2225224

190 நாடுகளில் இருந்து விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

WESTERN UNION | மனி டிரான்ஸ்ஃபர் SM
உலகெங்கும் பணத்தை பெற விரைவான வழி. SM

பணம் மாற்றும்
வாடிக்கையாளர்களுக்கு
அன்பளிப்புப் பொருட்கள்
வழங்கப்படும்.

(சி-8348)

RAMCO CEMENT

தேரிலேறி வரும் நல்லூரான் அருள் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## ராம்கோ சீமெந்து
## RAMCO CEMENT

ஆசியாவின் முதல் தர(நம்பர்-1)

தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட
தொழிற்சாலையில் உற்பத்தி
செய்யப்படும் ராம்கோ சீமெந்தினை
நேரடியாக குடாநாட்டுக்கு இறக்குமதி செய்து
குடாநாட்டு மக்களின் பல கோடி
ரூபாய் பணத்தை மீதப்படுத்தினோம்.

SLS -107 அங்கீகாரம் பெற்றது
ISO -9002தரம் பெற்றது
BSS-12 -1991தரத்திற்கு அமைவானது

ராம்கோ சீமெந்து ஏகஇறக்குமதியாளர்கள்

## ஈஸ்வரபகவான் & கொம்பனி

இல:91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021 2222350

(சி-8373)

குறிப்பு: முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக ராம்கோ சீமெந்து விநியோகிக்கப்படும்.

RAMCO CEMENT

தேரிலுன் துணையொடு நீ உலாப்போகும் காலை
எம்முன் தேங்கிய துயரினை நீக்கிடு முருகா!


## LG யாழ்ப்பாண மின்னகம் LG

எமது மண்ணில் மங்காப்புகழ் பூத்த
மாபெரும் மகத்தான LG ஸ்தாபனத்தாரின்
இலத்திரனியல் பொருட்கள் அனைத்தையும்
யாழ் நகரில் ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ளலாம்.



அபான்ஸ் லிமிட்டெட்டின்
அங்கீகரிக்கப்பட்ட
விற்பனையாளர்


## யாழ்ப்பாண மின்னகம்



இல:141,மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-222 5766

இல:06,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-222 2353

(சி-8359)



மயிலேறி விளையாடி- நம் மனம் குளிர வைப்பவனே!
தேரிலேறி வந்து நம்தேசமதைக் காத்திடையா!

## மகாநதி புடைவையகம்

புத்தம் புதிய டிசைன்களிலான
நவீன பாணியிலமைந்த
ஆடைத் தெரிவுகளுக்கு
நாடுங்கள்

## மகாநதி புடைவையகம்



இல:16,நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

இல:04,நவீன சந்தை,
சாவகச்சேரி.

சாறி, பிளவுஸ்பீஸ் வகைகளுக்கான
பிரத்தியேகக் காட்சியறை.

இல:16,நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.(மேல்மாடி).

(சி-8358)

## சிறுகதை

இலக்கிய வடிவங்களில் சிறுகதை தனித்துவமானது. சம காலத்தில் சிறப்புப்பெற்றுள்ளது. உண்மையில் கதை சொல்லல் அல்லது கேட்டல் மனித குல வரலாற்றுடன் இணைந்த ஒரு செயற்பாடு ஆகும். கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப இப்போது வடிவம் எடுத்துள்ளது. சில வேளைகளில் அது ''பெல்பாட்டமும்'' போடும். சில வேளைகளில் ஜீன்ஸ்.

ஏனைய வடிவங்களை விட சிறுகதையானது மிக வயதில் குறைந்ததும் ஆகும். உலகில் எந்த மொழியிலும் சிறுகதை தத்தமது தனித்துவப்பண்புகளுடன் தலை நிமிர்ந்து நிற்பதாக சொல்லப் படுகின்றது.

மேற்கு நாட்டில் நாவல் இலக்கியம் தோன்றி நூறு ஆண்டுகள் சென்ற பின்னர்தான் சிறுகதை இலக்கிய வடிவம் பிறந்தது.

எனினும் சென்ற நூற்றாண்டின் மத்தியிலேயே ரஷ்யா, [illegible]ன்ஸ், அமெரிக்கா ஆகிய [illegible]ன்று [illegible]டுகளிலும் சிறுகதைக்கு இலக்கிய மதிப்பு ஏற்பட்டிருந்தது என்கின்றனர் "சிட்டியும்" "சோ.சிவபாதசுந்தரம்" அவர்களும்

சிறுகதை என்றஇலக்கியவடிவம் உருவாகக்காரணமாக இருந்த முன்னோடிகளில் குறிப்பிடத்தகுந்தவர் "எட்கார் அலன்போ" அவர்களாவார்.

அமெரிக்க எழுத்தாளரான "நாதானியன் ஹாதோன்" என்பவர் தாம் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து "திரும்பச்சொன்ன கதைகள்" என்ற தலைப்பில் ஒரு தொகுப்பாக வெளியிட்டார்.

1885 ஆம் ஆண்டு மாத்யூ என்பவர் கதை என்பதற்கு தனி அழுத்தம் தந்து சிறியகதைகளிலிருந்து சிறுகதையை பிரித்துக்காட்டி சிறியகதை என்ற இரண்டு ஆங்கிலச்சொற்களை ஒன்றாக இணைத்துச் சிறுகதை என்ற ஒரு சொல்லாக்கினார்.

ஏறத்தாழ இக்காலப் பகுதியிலேயே சிறுகதை ஒரு தனி இலக்கிய வகையாகக் கால் கொண்டது என்கிறார் டாக்டர் இரா.தண்டாயுதம்.

அன்ரன் செக்கோவ்



பலரும் வ.வே.சு ஐயர் அவர்களை தமிழ் சிறுகதையின் மூலவராகவும் அவரது குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதையில் இருந்தே தமிழ் சிறுகதை வரலாற்றினை தொடங்குகின்றனர். அவரது சிறுகதைகள் 1915 - 1918 க்கும் இடைப்பட்ட காலத்திலேயே எழுதப்பட்டன.

எனினும் 18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரமா முனிவனின் "பரமார்த்த குரு கதை" தமிழ்க்கதை வரலாற்றில் முதன்மையானது.

19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வீராசாமிச்செட்டியாரின் "விநோதரஸ மஞ்சரி", தாண்வராய முதலியாரின் ''பஞ்சதந்திரம்'' என்பனவும் அதன் வழியே வந்தனதான்.

மகாகவி பாரதியார் 1908 - 1918 க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தாகூரின் சிறுகதைகளை தமிழில் மொழியாக்கம் செய்து தந்தார். பாரதியாரே உரைநடையில் பல சிறியகதைகளையும் இக்காலப் பகுதியில் எழுதினார்.

### எங்கள் சிறுகதை

1960இல் "உதயதாரகை" பத்திரிகையில் ஆசிரியராக இருந்த கே.ஆர். ஆனாஸ்ட் சதாசிவம் பிள்ளை அவர்கள் பல சிறுகதைகளை அக்காலப்பகுதியில் எழுதியுள்ளார். அவரது கதைகள் "நன்நெறிக்கதாசங்கிரகம்" என்ற பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளது. 1875 ஆம் ஆண்டிலும் "கதாசிந்தாமணி" என்ற கதைத்தொகுதியை பண்டிதர் சந்தியாகோ சந்திரவர்ணம் பிள்ளை வெளியிட்டார். தம்பி

# இலக்கியப் பகிர்வு...

இத்தொகுப்பினை "எட்கார் அலன் போ" அவர்கள் "கிரகாம்ஸ் மகசீன்" என்ற சஞ்சிகையில் விமர்சனம் செய்தார். அவர் எடுத்துக் கொண்ட ஆய்வு முறையினை சிறுகதை பற்றிய இலக்கியக் கொள்கையாக இலக்கிய உலகம் ஏற்றுக் கொண்டது.

''சிறுகதை என்பது அரைமணியிலிருந்து ஒரு மணி அல்லது இரண்டு மணி அவகாசத்துக்குள் ஒரேமூச்சில் படித்து முடிக்கக் கூடியதாய் இருக்கவேண்டும். அது தன்னளவில் முழுமை பெற்றதாய் இருக்க வேண்டும். அது தரும் விளைவு ஒரு தனி மெய்ப்பாடாயிருக்க வேண்டும். கதையை படித்து முடிப்பதற்குள் புறத்தேயிருந்து எவ் விதகுறுக்கீடுகளும் பாதிக்காமல் வாசகனின் புலன் முழுவதும் கதாசிரியனின் ஆதிக்கத்தில் கட்டப்பட்டதாயிருக்க வேண்டும் என்று"எட்கார் அலன்போ" கருத்து வெளிப்படுத்தியிருந்தார்.

(ரசியா), மாப்பாசான்(பிரான்ஸ்), ஓஹென்றி (அமெரிக்கா) பால் ஸாக்(பிரான்ஸ்), கிப்ஸிஸ் (இங்கிலாந்து) பிராங்க் ஓக்காணர்(அமெரிக்கா) போன்ற புகழ்பெற்ற சிறுகதையாளர்கள் தோன்றி சிறப்பான சிறுகதைகளை படைத்தார்கள்.

### தமிழில் சிறுகதை

ஆங்கில நாவல் தோன்றி நூறு ஆண்டுகள் கழித்தே தமிழில் நாவல் தோன்றியது. தமிழில் நாவல் தோன்றி 50 ஆண்டுகள் கழித்தே சிறுகதை இலக்கிய வடிவமாக உருப்பெற்றது.

தமிழ் சிறுகதை இலக்கிய வரலாற்றில் வ.வே.சு.ஐயர், பாரதியார், அ.மாதவையா, ஆகிய மூவரைய்ும் தமிழ் சிறுகதையின் முன்னோடிகள் என்று கூறுகின்றார்கள்.

முத்துப்பிள்ளை அவர்கள் "ஊர்க் கதைகள்" தொகுதியினையும், ஐதுருஸ் லெப்பை மரைக்கார் "ஹைதர்சா சரித்திரம்" என்ற தொகுதியையும் வெளியிட்டதாக செங்கை ஆழியன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

எனினும் 1930 தொடக்கமே ஈழத்தில் உருவப்பிரக்ஞையுடன்சிறுகதைகள் வெளிவரலாயின.

இலங்கையர்கோன் (1930), சோ.நடேசையர்(1931), நவாலியூர் சோ.நடராஜன்(1934), சோ.சிவபாதசுந்தரம்(1936), அ.நல்லையா (1936), சம்மந்தன்(1938), ஆனந்தன் (1938), பாணன்(1938), சி.வைத்திலிங்கம்(1938), பவன்(1939).

இந்தப்பத்துப் படைப்பாளிகளுமே ஈழத்தின் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளாக கருதப்படுகின்றனர்.

—— சிதம்பரம்



# அப்பாவும் வீடும்

அப்பா வீடு கட்டுகிறார்
சீமெந்து மணல் கல் மரத்தடி
இப்படியாக எதுவும் அவரிடமில்லை
கைவசம் அவரிடம் இருப்பதெல்லாம்
என்றோ ஒரு நாள் வரைந்து வைத்த
கட்டுமானத்திட்டமும் படமும் மட்டுமே.

அவருக்கு மிகவும் பிடித்த பூசலாரைமட்டும்
மானசீகக் குருவாகக் கொண்டு
அப்பா வீடு கட்டுகிறார்.

தன்வயதொத்த ஆனால் பலம் குன்றாத
அந்த வேம்பின் கீழிலிருந்துதான்
அதைப்பற்றிச் சிந்திக்கிறார்.
அதோ அவருடைய கண்களில்
பயம் கலந்த ஏக்கம் தெரிகிறது
வீடு கட்டும் வேலைகளுக்கிடையிலேயும்
நடக்கப்போகும் அக்காவின் திருமணம் பற்றியும்
மாப்பிள்ளை வீட்டார்பற்றியும் சிந்திக்கிறார்.

இப்பொழுது அப்பாவின் கண்கள் சிவக்கின்றன.
கல்லறைக்கூட்டுக்குள் துயிலும் என் தம்பியையும்
துயிலும் இல்லத்தையும் நினைத்துக் கொள்கிறார்
அதில் அவருக்கோர் ஆத்மதிருப்தி
இருப்பதாக எனக்குப்படுகிறது.

இதோ இக்கணத்தில் அப்பாவின் முகம் கைகால்
அனைத்து அவையவங்களிலும் அம்மாவின்
கண்ணீர்போல்
மிக வலிமையான சோர்வு தென்படுகிறது
வீட்டுக்காக நிலையம் பார்த்த இடத்தில்
குறையாகக் கிடக்கும் அத்திபாரக் கிடங்கையும்
பக்கத்தில் பாழடைந்து கிடக்கும்
பழையவீட்டின் இடிபாடுகளையும் பார்க்கிறார்.

சில நிமிடங்கள், அப்பாவின்
இதயத்துடிப்பினைப்போல்
வேகமாகத் தற்கொலை செய்து கொள்கின்றன.
இப்பொழுது நாளாந்த வயிற்றுப்பாட்டிற்காக
துருவேறிக் கிரீச்சிடும் சைக்கிளில் எதுவித
சலனமுமின்றி அப்பா போய்க்கொண்டிருக்கிறார்.

நாளைக்கும் தனக்கு மிகவும் பிடித்த
பூசலாரை மானசீகக் குருவாகக் கொண்டு
அப்பா வீடு கட்டுவார்.

வேல்.லவன்



# கனவுகள் திறக்குமா?

'ஏ-9'பாதையில்
'டொல்பின்கள்' நீந்துகின்றன.
பாதை மருங்கில் நின்று
வேடிக்கை பார்ப்பது
என் சின்னமகனுக்கு
இப்போதெல்லாம்
நல்ல பொழுது
போக்காகிவிட்டது.

காடு போர்த்தியிருந்த முட்பாதை
இன்று பூவாய் விரிந்து
கிடக்கிறது.
கனவாகவிருந்த பொருளெல்லாம்
கடைவீதிகளில்
கண்சிமிட்டுகின்றன.

வறுமையிருள் விலகா வாழ்வில்
இவையாவும்
இன்னும் கனவுகள்தாம்.
தேவதையொன்று தோன்றி
வரம் தந்தாலொழிய
வழியில்லை.

நிறைய மனிதர்கள்
தினமும் வருகிறார்கள்;
புதிய முகங்கள்
புன்னகைக்கின்றன;
புதிய மொழிகள் காற்றில்
பரவுகின்றன;
கள்ளுக்கடைகள் கூட
புதிய மொழியில் பெயர்ப்பலகை
தொங்க விட்டுள்ளன.

என் சின்னமகன் கேட்கிறான்
"ஆட்களெல்லாம் வருகிறார்கள்
அப்பா மட்டும் ஏன்வரலில்லை?"
அடிக்கடி என்மனதில்
தீமூட்டும் கேள்வி இது.
"அப்பா வருவார் மகனே
எல்லா வாசல்களும்திறபடும்
போது
களுத்துறை சிறைக்கதவுகள்
மட்டும்
திறக்காமலா போகும்..."
கண்ணீரும் நம்பிக்கையுமாய்
பதிலுறுக்கின்றேன்.

வேனிலன்

## குட்டிக்கதை



# புதிர்

"லவ்ருடே" இதுகள் இங்கிலீஸ் படங்கள் போலை கிடக்கு அம்மம்மா."

"உவன் எங்கை போட்டான்? வார்த்தையில் எரிச்சல் போத்தியபடி வந்தது."

''மாமா கிணத்தடியில நிக்கிறார். வரச்சொல்லட்டே அம்மம்மா." "ஓ நான் வரட்டாமெண்டு கூப்பிடு"

''மாமா அம்மம்மா வரட்டுமாம்''

"என்னணை..."

"உதுகளை ஆர் பாக்கிற தெண்டு இஞ்சை எடுத்தந்தனீ? உந்த இங்கிலீசுப்படங்கள் ஆருக்கு விளங்கப் போகுது?

"எணேய் உதுகள் இங்கிலீஸ்ப் படங்கள் இல்லையணை. தமிழ்ப்படங்களணை... தமிழ் படங்கள்."

"அம்மம்மா இண்டைக்கு வீட்டில படம்."

"படமோ! ஆர் சொன்னது?"

''மாமா படக்கொப்பியள் எடுத்தந்து வைச்சிருக்கிறார்''; என்றாள் பேர்த்தி மலர்ந்த முகத்துடன்.

"என்னென்ன படமாம் மோனை?"

"பொறுங்கோ பாத்துச் சொல்லுறன்."

ம்... "ஸ்ருடன்நம்பர் வன்"

"பிறன்ஸ்"

தமிழில் இருநூற்றி நாற்பத்தேழு எழுத்துக்கள் இருக்க, தமிழ்ப்படங்களுக்கு தமிழில் ஒரு பெயர்வைப்பதை விடுத்து இருபத்தாறு எழுத்துக்களே உள்ள ஆங்கிலத்தில் பெயர் வைக்கும் மாயம்தான் என்னவோ?

என்று கேட்டது வளையில் இருந்த பல்லி.

ஆவரங்கால் சுதன்

காண்பவர்கள், ஐயத்துக்கு அப்பாற்பட்டு அறிகின்றனர். – ப்ளாட்டஸ்




# மெய்மையின் மறுபக்கம்

சி.மாதுளா

வானதி கானகனைக் கைபிடித்து இன்றுடன் ஐந்து வருடங்களை நிறைவு செய்கிறாள். "பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்க" என வாழ்த்தப்பட்டதில் ஒன்றைத்தவிர எல்லாவற்றையும் கானகன் கொடுத்து விட்டான். கிடைக்காத 'அந்த ஒன்று' எல்லாவற்றையும் இல்லாமற் செய்து விட்டது அவளுக்கு. கானகன் கொடுக்காததும், பெறாததும் பிள்ளை வரம் தான்.

பிறந்த வீட்டிலிருந்து தன் எட்டுச்சகோதரர்களையும் பிரிந்து, தாய் தந்தையிடம் விடை பெற்ற போது ஆறாய்ப்பெருகிய கண்ணீர் பிரிவுத்துயராய் ஓட வானதியின் கண்ணீர் மட்டும் புகுந்த வீடு வரை வந்தது. "பிள்ளை நீ மருமகள் மட்டுமல்ல, எங்கட பெண் பிள்ளையும் நீதான். அம்மா அப்பாவா நாங்கள் இருக்க மாட்டோமா?" உண்மையான பாசத்துடன் மாமியார் கூறிய வார்த்தைகளுக்கும் கட்டுப்படாமல் கண்ணீர் பெருக்கெடுத்த போது: "ஏய் இன்னும் ஒரு வருடத்தில எங்களுக்கென ஒரு குட்டிச்செல்வம் பிறந்திடும் - அதுக்குப்பிறகென்ன உலகமே உன்ர கையில இருந்து தான் சுற்றும்." அவளின் தனிமைத் துயருக்கு கானகனின் வார்த்தைகள் கனவாகி இனிமையை ஏற்படுத்த இரண்டு வருடங்களின் பின்னர் தான் தான் காண்பது கனவு என அவள் உணரத் தலைப்பட்டாள்.

அக்கனவை உண்மையாக்கவென எங்கட ஊர், சிவன், முருகன், அம்மன் சரிவராதெண்டு இந்தியாவிலுள்ள கோயில்களுக்கெல்லாம் இறைஞ்சியும் 'கிடைக்கும்' என்ற பதில் அசரீதியாய் கிடைத்ததே தவிர பிள்ளை மட்டும் இன்னும் கிடைக்கவில்லை. உணவைப்போல் மூன்று வேளையும் மருந்தை உட்கொண்டும் மருந்து கூட பிள்ளையாய் உருமாறவில்லை. மாறாக அவனும் அவளும் இளைத்ததே மிச்சம்.

கொவ்வம் பழ நிறத்தில் கொக்கை போல் வளர்ந்தவள் கோலம் மாறிப்போனாள். இலையுதிர் காலம், வேனிற்காலம், மாரிகாலம் என நீண்ட ஐந்து வருடங்களில் ஐம்பது வருடங்களை வாழ்வில் கடந்தவளாய் சோர்ந்தே போனாள்.

மாளிகை போல் கட்டப்பட்ட வீடு நிரந்தரச்சிறையாகத் தெரிந்தது அவளுக்கு. வீட்டுத்தோட்டத்து மலர்களுக்கு - தன்னைக் கொடுக்க அவளால் முடியவில்லை. அவளின் நீண்ட கூந்தலைத்தொடமுடியாமலே பூக்கள் சொரிந்து மண்ணில் வீழ்ந்தன. மருதாணி அவள் நகங்களை சிவப்பாக்காமலேயே மரத்துப் போனது. சுவாமி அறை சிலந்திக்குச்சொந்தமாகியது. - நிலவு ஏக்கத்தையும் இரவு வெறுப்பையும் பகல் இழக்கக்கூடாத நம்பிக்கையையும் அவளுக்குக் கொடுத்தன.

'இலக்குமி' பக்கத்து வீட்டு மாலதிக்கு அப்பப்ப உழைச்சுப்போடும் ஜீவன் - மாலதியின் காதில் தூங்கும் இரண்டு தூக்கணத்திற்கும் காலில் உள்ள கொலுசுக்கும் அந்த ஜீவனே சொந்தக்காரி. இனிமையாய்க்கழிய வேண்டிய மாலைப்பொழுதில் இலக்குமிக்கென்றே ஒரு மணி நேரத்தை ஒதுக்குவாள் மாலதி. இலக்குமியை குளக்கரைக்கு கூட்டிச்செல்வாள் - காட்டுப்புறத்துக்குக்கூட்டிச்செல்வாள் - திரும்ப வரும் போது இலைகுழைகளை வெட்டியந்து அதன் கொட்டகையில் தொங்க விடுவாள். இந்த உணவே மறுநாள் ஐந்து மணிவரை அதுக்குப்போதுமானதாக இருக்கும்.

"என்ன இலக்குமி என்றியள்? இலைகுலை என்றியள்? வானதியை இடையில கைவிட்டிட்டியள்....." என நீங்கள் ஏன் தலையைபிய்த்துக்கொள்ளுறியள்? கொஞ்சம் பொறுமையாய் வாங்கோ.

'இலக்குமி' ஒரு ஆடு, ஆறுமாதத்திற்கு ஒருக்கால் இரண்டு குட்டிகளை ஈன்று மாலதியின் குடும்பச்சுமையில் சிறிதளவையேனும் அது ஈடுசெய்வதால் 'படத்தில் மட்டுமே பணத்தைத்தரும் இலக்குமியின் பெயரை மாலதி விரும்பி வைத்ததுதான் உங்கள் குழப்பத்துக்கு காரணம். "அட" என்றாமல் கதையோட சேருங்கோ.

இன்று இலக்குமியின் மடி நன்றாக இறங்கியிருந்தது. நீர்க்குடம் வெளியில் எட்டிப்பார்க்க மாலதிக்கு அதிஸ்ட்ட சீட்டு விழுந்தது மாதிரி மகிழ்ச்சி. "இன்னும் இரண்டு மணி நேரத்தில் குட்டியைப்போட்டிடும். "அவள் நினைத்தது போலவே ஆடு முனகிக்கத்தத் தொடங்கியது. இலக்குமிக்கு இது ஆறாவது பிரசவ வலி. ஆதரவுக்கு துணைவன் இன்றி




மருத்துவத்துக்கு வைத்தியர் இன்றி சுகப்பிரசவம் நடந்தேறியது. இரண்டு குட்டிகளை அரை மணி நேரத்தில் இலக்குமி ஈன்றது. 'காணாமல் போகும் குட்டிகள்' எனத்தெரிந்தும் நம்பிக்கையுடன் நாக்கினால் தடவிக்கொடுத்தது. பால்நிறக்குட்டி அதன் தகப்பனை உரித்து வைத்துப்பிறந்திருந்தது. கறுப்புக்குட்டி அதன் தாயின் பதிப்பு.

விளக்குடன் ஓடி வந்த மாலதி வழமை போலவே இரண்டு குட்டிகளினதும் பின்னங்கால்களைத் தூக்கிமறியா? கிடாயா? எனப் பார்த்ததுதான் முதலில் அவள் செய்த வேலை. அவளுக்கு இன்றும் நல்ல காலம் தான் - இரண்டும் கிடாக்குட்டிகள். இன்னுமொரு வருடத்தில் . இன்னுமொரு சங்கிலியை மாலதியின் கழுத்தில் ஏற்றப்போகும் குட்டிகள்: தம் பிஞ்சுக்கால்களால் மாலதியை உதறி விடுதலை பெற்றபின் தாயின் முலையை மொத்து மொத்தென்று உறுஞ்சத்தொடங்கின.

வானதிக்கும் மாலதிக்கும் இலக்குமிக்கும் என்ன தொடர்பு என்று கேட்காமல் வாங்கோ இனித்தான் தொடர்பே இருக்குது.

ஒரு வேலி தான் வானதியின் வீட்டையும் மாலதியின் வீட்டையும் பிரித்தது. இலக்குமி பல நாட்கள் வானதியின் வீட்டு எல்லைக்குள் புகுந்து பூங்கண்டுகளை நுள்ளி எடுத்ததனால் இரண்டு வீட்டாருக்கும் சச்சரவுகள் தலை தூக்கியிருந்தன - ஆனால் இந்த ஆட்டுக்குட்டிகள் சச்சரவுகளை தீர்த்து விட்டன. "எப்படி" என்கிறீர்களா? இப்படித்தான்:

ஆடு வேலி புகுவானேன்? பகை வருவானேன்? என ஒரு பாதுகாப்பாக ஆட்டின் கழுத்தில் முக்கோண வடிவில் பனை மட்டையை கட்டிவிடும் மாலதிக்கு எங்கேயோ இருந்து வந்த கழிவிரக்கம்: பிறந்து ஐந்தே நாள் ஆனஇலக்குமியின் குட்டிகளுக்கு பனை மட்டையை கட்டி விடாமல் விட்டு விட்டது.

கிடைகப்போகின்ற கொடூரமான எதிர்காலத்தைத் அறியாத பாலகக்குட்டிகள் பூமியைப்பார்த்து வியந்து அதன் வனப்பை இன்னும் காணத்துடிக்கும் ஆவலுடன் வேலிபுகுந்து வானதியின் வீட்டுத்தோட்டம் வரை சென்றிருந்தன. மரணித்த உணர்வுகளில் பிறந்த ஏக்கம் அகன்ற விழிகளில் குந்தியிருக்க ஒரு சிலையாய் ஓவியமாய் அவள் அசைவற்றிருந்ததை அவை காணவில்லை. அவை துள்ளித்துள்ளி எகிறி எகிறி பாய்ந்தன. வளர்ந்த தென்னம் மரத்திலேறி சாகாசம் செய்தன. துள்ளித்துள்ளி வீட்டு முற்றத்தை சுற்றி வந்தன. உலகில் விசாலத்தை அவை அறியாவிட்டாலும் மகிழ்வின் விளிம்பில் வாழ்வின் உச்சியில் நின்று எகிறி எகிறிக் குதித்தன. இடையிடையே 'இம்மா' என குரலிட்டு தம் தாயுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டு வானதியின் கால்களை முகர்வதும் அவள் மெல்லப்பிடிக்க எட்டிப்பாய்வதுமாக ஏய்ப்புக் காட்டின.

இன்று வானதி அந்தக் குட்டிகளைக் கலைக்கவில்லை. அவளே பூக்களை, இலைகளை, துளிர்களை நுள்ளி "இந்தா சாப்பிடு" என நீட்டினாள். "என் வயிற்றிலிருந்து ஒரு மகன்(ள்) பிறப்பான்(ள்) என் கவலைகளெல்லாம் கலைப்பான்(ள்)" எனும் ஏக்கத்துடன் வாழ்க்கையை கரைத்துக்கொண்டிருக்கும், கடந்து கொண்டிருக்கும் வானதிக்கு அந்த இரண்டு குட்டிகளும் அவள் குழந்தைகளாயின.அதன் எகிறல் சாகாசம் தன் பிள்ளைகளினுடையதாகவே எண்ணிக்கொள்ளத் தொடங்கினாள்.

அவற்றைப்பிடித்து தடவிக்கொடுத்தாள் - முத்தங்கொடுத்தாள். தன் மார்புடன் இறுக அணைத்துக்கொண்டாள். ஏக்கத்துக்கு ஒரு வடிகால் கிடைத்த திருப்தி - உலகம் மீண்டும் இயங்குவதாய் ஒரு தோற்றம் அவளுள் முளைவிடத் தொடங்க பூக்கள் மலையாகின - மாலைப்பொழுது ஆட்டுக்குட்டிகளுடன் இணைந்து சுகம் கொடுக்கத்தொடங்கியது. அவளும் ஒரு ஆட்டுக்குட்டியாய் வீட்டுத்தோட்டத்தை சுற்றிச்சுற்றி ஓடி வரத்தொடங்க - மீண்டும் கானகன் காதலனானான் வானவில்லின் ஏழு நிறங்களிலும் பூக்களைக்காணத் தொடங்கினாள். வானதியின் பொழுதுகள் ஆட்டுக்குட்டிகளுடனும் ஆட்டுக்குட்டிகளின் பொழுதுகள் வானதியுடனும் கழிந்தன. பாலுக்கும், இரவு படுக்கைக்கும் மட்டுமே அவைதம் தாயுடன் சேரத்தொடங்கின.

இலக்குமியால் பகைக்கப்பட்ட இரண்டு குடும்பங்களும் இலக்குமியின் குட்டிகளால் இணைக்கப்பட்ட வானதியின் பலவீனத்தையறிந்த மாலதி இரண்டு குட்டிகளையும் வானதிக்கே விற்று காற்றுள்ளபோதே தூற்றிக் கொண்டாள்.

"என்ன முழிக்கிறீர்கள்? கொடுப்புக்குள் சிரிக்கின்றீர்கள்? இவை எல்லாம் நடந்தது ஒன்றரை வருடங்களுக்கு முன் - இன்று என்ன நடக்கிறது? என்று தான் பாருங்களேன்.

"சிந்து" கானகனுக்கு குடும்பத்தை மீண்டும் ஒட்டி வைத்த மகன் - வானதிக்கு வாழ்வை கையிலெடுத்து வந்த ஆண் குருளை. எங்களுக்கு அவன் சுட்டிப்பையன். அவரவர் தங்களின் பரம்பரை வேர்களுடன் சிந்துவின் தோற்றத்தை பொருத்திப்பார்த்தாலும் வானதியின் இன்னுமொரு நகலெடுப்புத்தான் சிந்து: அவனது உணர்வுகளின் கவலையான சிரிப்பு, சிணுங்கல், துள்ளல், எகிறல், கெஞ்சல் எல்லாமே அந்த இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் ஆடியோடி மறந்து விட வானதிக்கு காரணங்களாகின. சிந்து ஆடுகளைப்பார்க்க விரும்பினாலும் 'சீ' அதுகள் இடிக்கும் எனக்கூறி வானதி அருகில் கூடசெல்ல விடுவதில்லை. வீட்டு வாசலுக்கு சட்டமிடப்பட்டு சிந்து சிறையிடப்பட்டான். பிளாத்திக்கிலான விளையாட்டுப்பொருட்கள் வீட்டை நிரப்பினவே தவிர அவன் மனதை நிரப்பவிலை. பிளாத்திக்குப் பாயில் உடம்பு பிரட்டினான் - சீமெந்துத் தரையில் தவளத்தொடங்கினான். நாலடி புழுதி மண்ணில் ஆசையாய் வைக்கலாம் என்றால் கதவுச்சட்டம் சிறைக்கம்பியாய் அவன் முன்னே - அன்பு, பாசம், பாதுகாப்பு என்பதன் பெயரால் சிந்துவின் பாலகப்பராயத்து சுதந்திரம் பறிக்கப்படிருந்தது.

இந்தச்சிந்து பூமியில் வந்துதித்து இன்று ஒருவருடத்தை பூர்த்தி செய்கிறான். பல வருட ஏக்கத்தின் பின் பரம்பரை வேர்களுக்கே ஒளி சேர்ந்து, பிறக்கும் ஒவ்வொரு நாட்களையும் புதிய நாட்களாகவே மகிழ்வித்த சுட்டியின் பிறந்தநாள் என்றால் கேட்கவா வேண்டும்.

மறுமணத்திற்கு தன்னை அலங்கரித்த பெண்ணைப்போல் வானதியின் வீடு பல வருடங்களின் பின் மீண்டும் தன்னை அலங்கரித்துக் கொண்டது. பூட்டன், பூட்டி, மாமன், மாமி, மச்சான், மச்சாள் என ஒவ்வொன்றாய் உறவுகள் கூட வளவு சிறு ஊரானது. பல வருடங்களின் பின் அந்த ஊரில் அப்படி ஒரு களை கட்டல்.

எல்லோரும் தங்கள் தங்கள் பந்தங்களுடன் வலம் வந்தார்கள். அவர்களின் வசதி வாய்ப்புக்களினை அள்ளிக்கட்டிக் கொண்ட நகைகள் ஒளிர்ந்து காட்டின. (சில வேளை இரவல் நகைகளில் பக்கத்து வீட்டு வசதி வாய்ப்புக்களினை) பலதை மறைப்பதாக முகப்பூச்சுக்களும், லிப்டிக்குகளும், கெயார்டைகளும், வாசனைத்திரவியங்களும் உடைகளும் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தன.

''இஞ்சேருங்கோ ஐசிங் கலர் சரியில்லை..." "மாம்பழத்தை எடுத்திட்டுஅப்பிள் பழத்தை முன்னுக்கு வையுங்கோ...'' அஜித்தின்ர நடிப்புக்கு சிம்ரனின் நடிப்பு போதாது. ''அவளின்ர ஜக்கட் சாறிக்கு எடுப்பாயில்லை....'' ''தேவரின் மகள் அதுக்குள்ள பெரிசாயிட்டாள்...." என்னடி பொன்னம்மா மெலிஞ்சு போனாய்...! "உமக்கு சாறி எடுப்பாய்த்தான் இருக்கு...." "மச்சான் என்னடா தனியாய் வந்திருக்கிறாய்...." "டேய் அந்தக்கலரைப்பார்..." சொந்தங்களின் 'ஆரோக்கியமான' உரையாடல்களை மீறி சிந்துவின் அழுகை ஒலி எல்லோரையும் மேடையை நோக்கித்திருப்பியது.


சிந்து தங்கப்பாப்பாவாக தங்கத்தில் மின்னினான். பிஞ்சுக்கழுத்தால் தாங்க முடியாத பெரியதொரு சங்கிலி - பகல் நேர வெக்கைக்குப்பொருந்தாத கோட், சூட், சப்பாத்து, சிந்து அழுதுகொண்டே நின்றான். பிறரின் மகிழ்விற்காய் தான் வருந்துவதை எண்ணி எண்ணி விம்மி விம்மி அழுதான்.

கெரில்லா வீரன் எதிரியை சுட்டு விட குறிபார்ப்பது போல், கமராக்காரனும் வீடியோக்காரனும் சிந்துவை சுட்டு விட குறி பார்க்க... வானதி சிந்துவின் கையைப்பிடித்து மெழுகுதிரியை ஏற்ற.

"இம் ஆ." வீட்டுக் கோடிக்குள் ஒரு மூலையிலிருந்தெழுந்த ஆட்டின் அலறல் வீட்டுச் சுவரில் மோதி மீண்டும் மீண்டும் எதிரொலித்தன. ஆட்டின் கத்தலை யார் தான் பொருட் படுத்துவார்கள்? அதுவும் ஒரு பிறந்த நாள் வீட்டில... சிந்து கேக்கை வெட்டி முடிக்கவும் ஆட்டின் கழுத்தும் வெட்டி முடிக்கப் பட்டிருந்தது. ஆடு மௌனமாய் அடங்கியது.

"தலையில் உறைப்பாய் ஒரு சூப்பு, குடற்கறி, இரத்தவறை... இண்டைக்கு ஒரு பிடி பிடிக்க வேணும்." இறச்சியை வெட்டிக் கொண்டிருந்தவர்கள் உழிழ் நீர் சிந்தக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சிறுசிறு துண்டுகளாக ஆட்டின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு சட்டியை நிரப்பிக் கொண்டிருந்தன. அதன் இரத்தம் உறையும் முன்பே அடுப்பிலேறியது. அதன் எஞ்சிய பகுதிக்காக இரண்டு நாய்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்க மரத்திலிருந்த காகம் பார்த்துக் கொண்டிருந்தது. ●



## குட்டிக்கதை

# ஏமாற்றினால் ஏமாறுவாய்

அந்தக்கிராமம் எப்போதும் பசுமையாகவே இருக்கும். அதற்குக் காரணம் அந்த கிராமத்திற்கென்றொரு குளம் இருந்தது. இந்தக் குளத்தை நம்பித்தான் இந்த ஊர்மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களது பிரதான தொழில் விவசாயமும் மந்தைகளை வளர்ப்பதுமாகும். இந்தக்கிராமத்தில் தான் குமரன் என்ற ஏழைத்தொழிலாளி வசித்து வந்தான். இவன் அவ்வூரில் கூலி வேலைகளைச் செய்து வந்தான். அவனது சிறிய காணியிலே ஓர் ஓட்டைக் குடிசை ஓரத்தில் நல்லின மாமரம்ஒன்றும் நின்றது. இம்மரம் இவனுக்காகவே காய்ப்பதுபோலவே காலம் தப்பாது காய்த்துக்குலுங்கும். இது அவனது வறுமைக்குச்சற்று ஆறுதலாகவே அமையும்.

ஒரு நாள் பூரணி என்ற மாம்பழவியாபாரி குமரனது குடிசைக்கு வந்தாள். தனக்கு இந்த மாங்காய்களைத் தருமாறும் அதற்குப்பணம் தருவதாகவும் சொன்னாள். குமரனுக்கு மிகவும் சந்தோசம் ஏனென்றால் பணம் கிடைக்கப்போகின்றதல்லவா அது தான். பூரணி ஒரு தந்திரமான வியாபாரி . குமரன் ஒரு படிப்பறிவற்றவன் என்பதையும் புரிந்துகொண்டாள். இவனை ஏமாற்றுவது கடினமாக இருக்காது என்று யோசித்தாள். கிட்டத்தட்ட இருநூறு மாங்காய்களுக்கு மேல் பிடுங்கி விட்டுச் சொன்னாள் "இந்தா முப்பது மாங்காய்களும் அவ்வளவு நல்லதா இல்லை" என்று பணத்தைக் கொடுத்தவாறு நகர்ந்தாள். எவ்வளவு மாங்காய்களைப்பிடுங்கிப்போட்டு இவ்வளவு பணம் தானா...? என கொஞ்சமாவது யோசிக்கத்தான் செய்தான்.

மூன்றாவது நாள் பழுக்க வைத்த மாம்பழங்களை எடுத்துக்கொண்டு இந்த முறை நல்ல இலாபம் கிடைக்கும் என்ற ஆசையுடன் சந்தியில் இருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் உள்ள மரத்தடியில் பரவிவிட்டுக்காத்திருந்தாள். அன்று ஏனோ ஒன்று இரண்டு மாம்பழங்களுக்கு மேல் விலைப்படவில்லை. மதியவேளை பசி அவளை கிள்ளத்தொடங்கியது. கண்கள் சோர்வடைந்தன. பூரணி மெதுவாக எழுந்து சற்று ஓரமாகப்படுத்துக்கொண்டாள்.

திடீரென அவளது காதுக்குள் ஏதோ நுழைந்துவிட, திடுக்குற்று கண்விழித்தாள். அப்போது இரண்டு பசுமாடுகள் அவள் பரவிவைத்திருந்த மாம்பழங்களைச்சாப்பிட்டுக்கொண்டிருந்தன. அவை முழுமையாக சாப்பிட்டே முடித்துவிட்டது எனலாம். அவளால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. எழுந்து கலைக்கவும் அவளது மனம் விரும்பவில்லை. அவளது தலை அவளை அறியாமலே குனிந்துகொண்டது.

"அடுத்தவரை ஏமாற்றியோ அல்லது அடுத்தவருக்கு அறியாயம் செய்தோ எம்மால் நல்லபடியாக வாழமுடியாது. நேர்மையாகவும் உண்மையாகவுமே உழைக்கவேண்டும். அதிக பணத்திற்குஆசைப்பட்டு அந்த ஏழையை ஏமாற்றி விட்டேனே என வருந்தினாள். இனி ஒருபோதும் மற்றவர்களை ஏமாற்றி வாழக்கூடாது" என்பதைப் புரிந்து கொண்டாள்.

**வி.பாணு**



## வாரம் ஒரு குறள்

நாம் எல்லோரும் சந்தோசமாகவே வாழ விரும்புகின்றோம். ஆனால் அதற்கு இடையூறாக "சினம்" குறுக்கே வந்து விடுகின்றது. ஆகவே சினம் என்பதை நாம் வெறுத்து ஒதுக்கினால், சந்தோசத்தை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் சில விடயங்களில் சினங்கொள்வோமாயின் எமது காரியங்கள் பாழாகிப்போவது மட்டுமல்லாமல், அடுத்தவர் மூலம் பெறக்கூடிய உதவியையும் இழந்துபோய்விட ஏதுவாகிவிடும். இதனைத்தான்,

**"உள்ளிய தெல்லாம் உடனெய்தும்**
**உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி எனின்"**

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

## குறுக்கெழுத்துப் போட்டி 34

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | | | | |
| | 08 | 09 | | | 12 |
| | 14 | | | 17 | |
| | | 21 | | | |
| | | | | | |
| | | | | | |

### இடமிருந்து வலம்

01. ஐந்து பேர் கொண்ட சபை.
08. நகை.
14. விழி தலைகீழாக உள்ளது.
17. தொடக்கம்.
21. தூபி குழம்பி உள்ளது.

### மேலிருந்து கீழ்

01. சிருட்டித்தல்.
08. கடவுள்.
09. சூரியன்.
12. உண்மை குழம்பிஉள்ளது.
17. நீர்ப் பூ ஒன்று.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.32 இன் விடைகள்

**இடமிருந்துவலம்**

01. அகலிகை.
10. பணம்.
14. காயத்திரி.
29. பலா.
33. கயல்.

**மேலிருந்துகீழ்**

01. அந்தணர்.
02. கடிகாரம்.
06. பரிதாபம்.
10. சத்தியம்.
23. புலால்
27. கண்

### குறுக்கெழுத்துப்போட்டி இல.32 இன் பரிசுக்குரியவர்

**தனுசான், தரம் -04^A^,**
**இராமநாதபுரம் மேற்கு,**
**அரசினர் வித்தியாலயம்.**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.32இன் பாராட்டுக்குரியவர்கள்.


01. சு.சுதாகரன், 8ம்,வட்டாரம், புதுக்குடியிருப்பு.
02. பிரபாகரன், கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.
03. ந.பவித்திரா, யாழ் வீதி, கிளிநொச்சி.
04. அருட்செல்வி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
05. ந. வதனி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இளையவர்களே!

மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.34
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



இவ் இரு படங்களில்"5" வித்தியாசங்கள் உள்ளன அவற்றைக்கண்டு பிடியுங்கள்!

**பூ.நிறஞ்சன்.**

## பொன் மொழிகள்

01) சொன்னசொல்லையும் எறிந்த கல்லையும் திரும்பி அழைக்கமுடியாது.

02) வாழ்நாளில் இனிய பருவம் இளமை இதை நாம்முதுமையில்தான் உணர்கிறோம்.

03) பலநற்பண்புகளை இருளில் மறைக்க ஒரு தீய செயல் போதுமானது.

04) வாழ்க்கை என்பது ஒரு சமுத்திரம். அதில் சலிக்காமல் கவனத்துடன் நீந்த வேண்டும்.

**உ. அஸ்வினி,தரம் -02,**
**இர்மநாதபுரம் மேற்கு**
**அ.தக.பாடசாலை.**

## பெற்றோரைப் பேணுவோம்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்றார் ஔவைப்பாட்டியார். எமக்காக உயிரை உருக்கி உழைப்பவர்கள் அப்பாவும், அம்மாவுமே. தியாகத்தின் சிகரங்கள் இவர்களன்றோ! அன்னையின் அன்பு அற்புதமானது. அலாதியானது. தன்னலமற்றது. தந்தையின் அன்பு உறுதியானது. உன்னதமானது மன ஆழத்திலிருப்பது.



எமது உயர்வு கண்டு மகிழ்வார்கள். வெற்றி கண்டு வாழ்த்துவார்கள். எமக்கு நோய் துன்பம் வந்திடாமல் காத்திடுவார்கள். சிறு துன்பம் நேர்ந்து விட்டால் கூடத்துடிப்பார்கள். அல்லும் பகலும் எமது வாழ்விற்காகப் பாடுபட்டு உழைப்பார்கள். "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" ஆதலால் பெற்றோரை மதிப்போம். அவர்களை அன்போடு பாதுகாப்போம்.



**கு.மணிமேகலை**

## நகைச்சுவை



**ரீச்சர்:-**

பிள்ளைகளே ஒன்றும் ஒன்றும் இரண்டு இப்படித்தான் கூட்டல் கணக்குச் செய்கிறது சரிதானே. சுமதி எழும்பு எட்டும் ஆறும் எத்தினை.

**சுமதி:-**

என்ன ரீச்சர் சுகமான கணக்கை நீங்கள் செய்து கொண்டு கஸ்ரமான கணக்கை எனக்குத்தாறீங்கள்.

**இ.ராஜ்குமார்,**
**மு/புதுக்குடியிருப்பு ம.வி**

## கல்வி

கார் இருளை
ஒளிமயமாக்கிய - எம்
வாழ்வின்
கல்வியை நாம்
கற்றிடுவோம்
கல்வியை கற்கும் போது
கசக்கும்
கற்றபின்னே அது
இனிக்கும்
இதனை நோக்குகையில்
கற்றவனின் வாழ்வு
முழுமையான நிலவு
போன்றது
கற்றிடுவீர் அகிலம்
போற்ற
கற்றிடுவீர்!

**ஆ.சுதர்சிகா,**
**கிளி/முருகானந்தா ம.வி**

## நண்பன்

**இன்பத்திலும் துன்பத்திலும்**
**பங்கு கொள்பவனே**
**உண்மையுள்ள நண்பன்**

**வெற்றியிலும் தோல்வியிலும்**
**கை கொடுப்பவனே**
**உண்மையுள்ள நண்பன்**

**ஏழ்மையிலும் செல்வத்திலும்**
**உறவு கொள்பவனே**
**உண்மையுள்ள நண்பன்.**

**ஸ்.அலெக்ஸ்சாண்டர்,**
**தரம் - 07^A^**
**C.C.T.M.S வவுனியா**

# இறக்கைகள் வெட்டப்பட்ட சமாதானப் புறாவும், ஒரு சிங்கள மனிதனும்...



அவன் சோம்பலின் சுகத்தை அனுபவித்தவண்ணம் விகாரமாதேவிப் பூங்காவில் மரவாங்கொன்றில் அமர்ந்திருக்கின்றான். அதற்குப்பக்கமாக உள்ள பற்றையின் அடியில் வெண்புறாவொன்று புதுமையான விதமாக வளைந்து உட்கார்ந்திருந்தது. சல்லாபிப்பதற்கு அக்கம் பக்கத்தில் யாரும் இல்லாதபடியால் அதனோட அளவளாவினால் என்ன வென்று அந்தமனிதன் எண்ணிக் கொண்டான்.

**மனிதன்:-** உன்னால் பேச முடியுமா?

**புறா:-** முடியும்! எனக்குச் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் நன்றாகத்தெரியும்.

**மனிதன்:-** நீர் யார்?

**புறா:-** ஏன் என் நிறத்தில் இருந்து தெரிந்து கொள்வது கடினமா?

**மனிதன்:-** இப்பொழுது பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களும் வெள்ளை அணியும் போது நிறத்தைக்கொண்டு யார் என எப்படித் தெரிந்துகொள்ள முடியும்.

**புறா:-** நான்தான் சமாதானப் புறா!

**மனிதன்:-** சமாதானப்புறா! ஆச்சரியமாய் இருக்கிறது. அப்படியானால் உமது இறக்கைகள் எங்கே?

**புறா:-** எனது இறக்கைகள் இரண்டையும் வெட்டிப் போட்டு விட்டார்கள்.

**மனிதன்:-** யார் அந்தக் கொடிய செயலைச் செய்தார்கள்.

**புறா:-** எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. நான் கொள்ளுப்பிட்டிப் பக்கம் சுவர் ஒன்றின் மேலே உட்கார்ந்திருந்த போது அடையாளம் காணமுடியாத ஒருவர் வந்து என்னைப் பலாத்காரமாக பிடித்து தன்மடிமீது வைத்துக்கொண்டு எனது தலையைத் தடவத் தொடங்கினார். அந்தச்சுகத்தில் நான் என்னை மறந்து நித்திரையாகிப் போனேன். எனது இறக்கைகள் இரண்டும் வெட்டப்பட்டிருந்தன.

**மனிதன்:-** உனது குரல் ஏன் இப்படி கர்ண கடூரமாக இருக்கிறது?

**புறா:-** இந்த நாட்களில் முடிவின்றித் தொடச்சியாக சமாதானம் பற்றி விரிவுரைகள் நடத்தவேண்டியேற்பட்டது. பாராளுமன்றத்தில், மேடைகளில்,கோடைப்புகையிரத நிலையத்துக்கு முன்பாக, லிப்டன் சதுக்கத்தில் என்று பலவிடங்களிலும் ஊர்வலங்களிலும் தொண்டை கிழிய கத்தினேன். நாட்டை இரண்டாகப் பிரித்தாவது சமாதானத்தைக் கொண்டு வாருங்கோ என்று.

**மனிதன்:-** அது சரி இவ்வளவு நாளும் நீர் எங்கே இருந்தீர்?

**புறா:-** வடக்கில் கோவிலின் உள்ளே. சத்தியமாகச் சொல்கிறேன் நான் வெளியில் பறந்து திரிந்தது இரவு வேளைகளில் மாத்திரமே. பகல் பொழுதுகளில் ஒளிந்திருந்தேன்.

**மனிதன்:-** ஏன் அப்படி ஒளிந்திருந்தீர்?

**புறா:-** அங்கு ஆயுதம் ஏந்திய இராணுவத்தினர்களுக்கு பெண் புறாவைக்க ண்டால் பிடிக்காது. கண்டால் போதும்.

**மனிதன்:-** இறக்கைகள் இன்றி உம்மால் பறக்கமுடியாதுதானே வடக்கிலிருந்து எப்படி கொழும்புக்கு வந்தீர்?

**புறா:-** ஆயுதங்கள் கொண்டுவரும் லொறியின் கூரையின் மேல்ஏறி வந்தேன்.

**மனிதன்:-** (ஆச்சரியத்துடன்) ஆயுதங்கள் கொண்டுவந்த லொறியா?

**புறா:-** ஓம் அமெரிக்காவிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் அனுப்பியிருந்தார்கள். வடக்கிற்கும் தெற்கிற்கும் பங்கிடச் சொல்லி. வடக்கின் பங்கை அவர்கள் அனுப்பிவைத்தார்கள். தெற்கின் பங்கை அனுப்பிவைத்த போது நானும் அந்த லொறிகளிலே ஏறிக் கொண்டேன். சத்தியமாகக் குற்றம் சொல்லமுடியாது. வடக்கிலுள்ளவர்கள் சாதாரணமானவர்கள். தெற்கிற்கு உரிய ஆயுதங்களில் ஒன்றைக்கூட அவர்கள் களவாடவில்லை.

**மனிதன்:-** வடக்கிற்கு கப்பல்களில் வெளிநாடுகளிலிருந்தும் ஆயுதங்கள் கிடைக்கும்போது எங்கடைகொஞ்சப் பொருட்களிலை ஒன்றை ரெண்டை எடுப்பதற்கு அவர்களுக்கு வெட்கமாக இருக்கலாம்.

**புறா:-** புலிகளுக்கு இரக்கம் ஏற்பட்டு இந்தாங்கோ இந்தச்சிறிதளவை வைத்துக் கொள்ளுங்கோ என்று நாளைக்கோ நாளை இன்றைக்கோ தெற்கிற்கு ஆயுதலொறி அனுப்பினாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். அவர்கள் எங்களுக்கு உயிர் கொடுப்பதற்கும் ஆயத்தம்.

**மனிதன்:-** அமெரிக்காவிலிருந்து எதற்காக அந்த ஆயுதங்களை அனுப்புகின்றனர்?

**புறா:-** வேறு ஒன்றுக்காகவும் அல்ல. கித்துள் பொல்லுகளை வைத்துக் கொண்டு எங்கடை பொலிஸ் காரங்களாலை சமாதானத்தைப் பாதுகாக்க முடியாது. அதனைச் செய்வதற்கு அவர்களாலை இயலாது என்பது அமெரிக்கன்காறங்களுக்குத் தெரியும்.

**மனிதன் :-** நீர் பிரபாகரனைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?

**புறா :-** உயர் ஆற்றல் மிக்க தேககளையோடு கூடிய முன்வரிசை சேனாதிபதிகளில் ஒருவர். உங்கடை ஆக்கள் மாதிரி காதில் கொடுத்தால் இரண்டாக வளைய மாட்டார். எப்பவாவது அடிக்கவேணுமென்று சொன்னா, தாயார் தடுத்தாலும் அடிப்பார்.

**மனிதன்:-** வடக்கில் இருந்து ஏன் தெற்கிற்கு வர நினைத்தீர்?

**புறா:-** அந்தக்காலத்தில் வடக்கில் நாட்பூராகவும் நிலக்கண்ணிகள் வெடிக்கும் சத்தம் கேட்கும். இப்போ கேட்பதில்லை. வெடிச்சத்தத்துக்குப் பழகிப்போன எனக்கு, அது இல்லாதபோது அங்கு இருப்பதற்கு சோம்பலாக இருக்கிறது. தெற்கில் இப்பொழுது ஒவ்வொரு நாளும் எந்த இடத்திலாவது வெடிகள் வெடிக்கின்றன. வங்கிகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. பெண்கள் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்படுகின்றனர். பஸ்கள் புரள்கின்றன. வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. மண்சரிவுகள் ஏற்படுகின்றன.

பாராளுமன்றத்திற்கு சவப்பெட்டிகளைக்கொண்டு வருகின்றார்கள். பால்மணம் மாறாததுகள் எல்லாம் இங்கே சிகரட் புகைக்கிறார்கள். தூள் அடிக்கிறார்கள். அது மாத்திரமா? ஒவ்வொரு மாதமும் சங்கீத காட்சிகள் ஆனபடியால் நான் வடக்கை விட தெற்கு நல்ல 'ஜொலி' என்று நினைத்தேன்.

**மனிதன்:-** இந்த சமாதான கண்காணிப்புக்குழுக்களில் இருப்பவர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்த வெள்ளையர்கள். அவர்கள் வடக்கிற்குச் சென்றால் எதனைச் சாப்பிட்டுக் குடிக்கிறார்கள் என்று தெரியுமா?

**புறா:-** அவர்கள் எதனைச் சாப்பிடுகிறார்கள் என்பது தெரியாது. சத்தியமாகச் சொல்கிறேன் அவர்கள் இருபகுதியினரும் ஒரே மேசையில் அமர்ந்தே சாப்பிடுகிறார்கள்.

**மனிதன்:-** நீர் சொன்னீர்தானே. தெற்கிலுள்ள பெடியள் சிகரட்புகைக்கின்றார்கள்....தூள் அடிக்கின்றார்கள் என்று...வடக்கில் அப்படி இல்லையோ?

**புறா:-** வடக்கில் என்றால் இருப்பது ஒரே ஒரு அரசாங்கம். அந்த அரசிற்கு எல்லோரும் பணிந்து நடக்கிறார்கள். தெற்கில் அப்படி இல்லை. எத்தனை அரசுகள் இருக்கின்றன. மத்திய அரசு...சனாதிபதியின் அரசு.... பொலிஸ் அரசு.... படைகளின் அரசு... பாதாள உலகத்தவர்களின் அரசு... பிரதேச பெரியவர்களது அரசு..... பிரதமரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களது அரசு... தோற்றுப்போன கட்சிக்காரர்களின் அரசு.....என எத்தனை அரசுகள் இங்கு. நீங்கள் நீதிச் சட்டங்களை மதிப்பதில்லை.

என்று சொல்லியவாறு இறக்கைகள் வெட்டப்பட்ட அந்தச் சமாதானப் புறா தத்தித்தத்தி நடைபோடத் தொடங்கியது. புறாவோடு சம்பாசித்துக் கொண்டிருந்த அந்த மனிதனும் சோம்பலை முறித்தபடியே எழுந்து நடைபோடத் தொடங்கினான்.

சிங்கள மொழிமூலம் தமிழில் :
**வல்வையூரான்**

## ஒரு அஞ்சலிக் குறிப்பு
# லியோன் யூரிஸ்



அத்திலாந்திக்கின் இரு பக்கமும் தனது நீண்ட நாவல்கள் மூலம் பிரமாண்டமான எண்ணிக்கையிலான வாசகர்களைப் பெற்றுக் கொண்ட லியோன் யூரிஸ் அண்மையில் தன் 78 வயதில் காலமானார்.

இவருடைய நாவல்களில் இஸ்ரேல் உருவாக்கம் பற்றியும் இருப்பிற்கான யூதர்களின் நீண்ட கால தொடர்ச்சியான போராட்டம் பற்றியும் எழுதப்பட்ட நாவல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

பெரும் வெற்றி பெற்ற ஏனைய எழுத்தாளர்களைப் போலவே இவரது நூல்களின் விற்பனை மற்றும் திரைப்பட ஒப்பந்தங்கள் அவரது எதிர்கால நாவல்களுக்கு பாரிய முன் பணத்தொகைகளை பெற்றுத்தந்தாலும் விமர்சகர்களால் அதிகம் பாராட்டப்படாத ஒருவராகவே லியோன் யூரிஸ் -உம் இருக்கிறார். ஊடகத்துறைசார்ந்தது போன்ற அவரது எழுதும் பாணி, பிரபல சொற்தொடர்கள், வசனக்கூறுகள், குறுகிய பந்திகள் முதலியவற்றைப் பயன்படுத்தும் வழக்கம், இசகு பிசகான அவரது உரையாடல்கள், முதலியவை தொடர்பாக விமர்சகர்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் விட வரலாறை அவர் தீட்டிக்காட்டும் முறை(Treatment) வீறாப்பானதாக(Cavalier) இருந்திருக்கிறது. ஆனால் அவர் சிறப்பாக கதை சொல்லியிருக்கிறார். அவரது நூல்கள் கிளச்சியூட்டக்கூடியவை.

அவரது நூல்களிலே அதிகம் வாசிக்கப்பட்டதாக எக்ஸடஸ்(Exodus) இருக்கிறது. 600 பக்கங்களுக்கு நீண்டிருக்கும் அந்த




நாவல் 1900ஆம் ஆண்டின் ஐரோப்பிய யூத வாழ்க்கையில் இருந்து 1948ம் ஆண்டில் இஸ்ரேல் உருவானது வரையான கதையைச்சொல்கிறது. இந்தநூலை எழுதுவதற்கான ஆராய்ச்சிக்காக அவர் 12000 மைல்கள் பயணம் செய்து, இறுதியாக, போர்ச்செய்தியாளராக 1956இன் சினாய் போரியக்கத்தின் போது இஸ்ரேலிய துருப்புக்களை தொடர்ந்து சென்றார். 50 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட இந்த நூல், கோண் வித் த விண்ட்(Gone with the wind) என்ற நூலுக்கு அடுத்ததாக அமெரிக்காவில் அதிக எண்ணிக்கையில் விற்பனையானது என்ற புகழைப்பெற்றிருக்கிறது.

எக்ஸடஸ்ஸை (1961ஆம் ஆண்டிலே போள் நியூமனை கதாநாயகனாகக் கொண்டு திரைப்படமாக்கப்பட்டது.) தொடர்ந்து, மிலா 18(Mila18) வெளிவந்தது. வோர்ஸோவின் யூதச்சேரியின் தலைமறைவு எதிர்ப்பியக்கம் பற்றியதாக அந்த நூல் இருக்கிறது.

அடுத்ததாக, போருக்கு பிந்திய ஜேர்மனியை பின்னணியாகக் கொண்ட ஆமகெடன் (Armageddon) (1964) உம், கொம்யூனிஸ்ற் உளவாளிகள் ஊடுருவியிருந்ததாகக் கூறப்பட்ட பிரெஞ்சு அரசை கருப்பொருளாகக் கொண்டு ரொப்பாஸ்(Topaz-196?) என்ற உளவாளிகள் கதையும் வெளிவந்தன. வழமை போலவே உண்மையான சம்பவங்கள் இந்நாவலில் அடக்கப்பட்டுள்ளன. 1960 களில் இடம்பெற்ற கியூப ஏவுகணை நெருக்கடி இந்நாவலுக்கு பின்னணியாக அமைந்துள்ளது.

யூறிஸ் எதிர் கொண்ட மான நட்ட வழக்கின்போது லண்டன் உயர் நீதிமன்றத்தில் அவர் எதிர் கொண்ட அனுபவங்களை அடிப்படையாக கொண்டு அவரது இன்னொரு நாவலான கியூபி செவன் (QB VII -1970) எழுதப்பட்டிருக்கிறது.

பிரித்தானிய குடியேற்ற நாட்டுசேவைகளில் பின்னர் ஆற்றிய சேவைக்காக பிரித்தானி சாம்ராஜ்ய பெருந்தகைகள் அமைப்பு கௌரவம்(OBE) வழங்கப்பட்ட போலாந்து நாட்டவரான டாக்டர் வ்ளாடிஸ்லோ டெறிங் (Dr.wladislaw Dering) முன்னர் சித்திரவதைத் தடுப்பு முகாம் கைதிகள் மீது விதையடிக்கும், மலடாக்கும், பிறப்புறுப்புக்களைச் சிதைக்கும் சந்திரசிகிச்சைகளை மேற்கொண்டார் என்று எக்ஸடஸ் - இல் யூறிஸ் குறிப்பிட்டிருந்தார். இதற்காக டெற்றிங், யூறிஸ் மீது மானநட்ட வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கிற்கென யூறிஸ்சும் அவரது வெளியீட்டாளரும், பெரும் செலவில், உலகம் எங்கும் சிதறியிருந்திருந்தவர்களிடமிருந்து சாட்சியங்களை பெற்று வந்த போது, அவர்களது அச்சகர் நீதிமன்றத்துக்கு வெளியே சமரசத்தீர்வு செய்து கொண்டு விட்டிருந்தார். எனினும் அவர்கள் உறுதியாக நின்று வழக்கை நடத்தினார்கள். மிகுந்த பிரச்சாரத்திற்கிடையே 1964 இல் விசாரணைக்கு வந்த இந்தவழக்கில் யூரிகள் டெறிங்குச்சார்பாக தீர்ப்பு வழங்கி அவருக்கு 1/2 பெனி நட்டஈடு நிர்ணயித்தார்கள். அவர் வழக்குச்செலவாக 20,000 பவுண்கள் செலுத்த வேண்டியதாயிற்று

- நன்றி:- த.ஐலன்ட்,
- மொழிபெயர்ப்பு:- வின்சன் புளோறன்ஸ்

**குறிப்பு:-** வரலாற்றுப் புகழ்பெற்ற இந்த நூல் 1991 இல் தமிழில் திரு.வி.பி.யோசப் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு எமது ஈழநாதத்தால் 1993 ம் ஆண்டில் "தாயகம் நோக்கிய பயணம்" என்ற பெயரில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். எமது போராட்டத்தோடு நெருங்கிய தொடர்புபட்டசம்பவங்களைக் கொண்ட இந்த நாவலில் எமக்கான படிப்பினைகள் ஏராளமாகஉள்ளன.

சியோனிஸ சித்தாந்தத்தோடு எமக்கு ஒருமைப்பாடு இல்லா விட்டாலும், ஒரு இனம் தன்விடுதலைக்காக நடத்திய போராட்டத்தின் படிப்பினைகளை எமக்கு வழங்கிய இந்த அற்புதமான எழுத்தாளர் என்றும் எம்மால் நினைவுகூரத்தக்கவரேயாவர்.

கயமை உறங்கும் இடம், கயமைக்குத் தெரியாது. -- ஆப்பிரிக்கப் பழமொழி

# வர்ணங்கள் வேற்றுமைப்பட்டால்

என் வாழ்க்கையில் கட்டம் கட்டமாய் ஓயாதஅலைகள் கட்டம் போல எல்லாமே விரைவுத்திருப்பங்கள்! போரியல் அனுபவங்கள் போல வாழ்வியல் அனுபவங்கள்....

வாழ்க்கையின் அர்த்தத்தை தேடியலையும் எனக்கு அதுவேண்டியதுதான். அல்லது நான் காற்றுப்போன பலூனாய் போய்விடுவேன்.

விபரம் தெரிந்த வயதிலிருந்து என் வயிற்றுக்குள் பிறாண்டிக்கொண்டிருந்த வண்டு மண்டைக்குள் வந்த மாதிரி ஒரு உணர்வு : குடைவு, வயிற்றுப்பிறாண்டலை விட மண்டைப் பிறாண்டல் வலிமையானதுபோல.



ஏன் பிறந்தன்? என்ன செய்யவேணும்? என்ன செய்து கொண்டிருக்கிறேன்.... எந்தவேளையிலும் இந்தக் கேள்விகள் என்னுள் புகும். காதலுக்கும் தும்மலுக்கும் கணங்கள் இல்லாததைப் போல இந்தக்கேள்விக்கும் கணங்கள் இல்லை. காலங்கள் இல்லை.

என்னுள் புகும் இந்தக்கேள்விகள் என்னைப் படாதபாடுபடுத்தி ஓய்கிறபோது எல்லாமே சூனியமாய்; எல்லாமே நோவாய்; எல்லாமே ரணங்களாய் எலும்புகளெல்லாம் உடம்பெல்லாம் கூட இத்துக்கொண்டிருப்பது போல என்ன உணர்விது....

என் அமைதி தான் இதை வெளிப்படுத்தும்; புயலுக்கும் முந்திய அமைதி போல ஓரிரு வார்த்தைகள் வெளிவருவதும் காணாமல்போகும். காணாமல்போனோர் கதைக்கு முடிவில்லாததைப்போல. யார் கேள்விக்கும் பதிலிருக்காது

பிறப்பு ; இருப்பு; இறப்பு...

'தேடல் உள்ள உயிர்களுக்கு வாழ்வில் ருசியிருக்கும்' எனக்கும் வாழ்வில் ருசி வந்தது.

கல்வி; கல்வி; கல்வி....

'கல்வி கரையில கற்பவர் நாட்சில'

நாலடியார் வரிகள்! அற்புதமான வரிகள்.

தீர்மானித்துக்கொண்டேன். முடிந்தவரை விரைந்து வேகமாய் கரைகண்டு விடுவது என்று; கற்றது போல் நிற்பது என்று; கண்ணியமாய் வாழ்வது என்று; கண்ணிய வாழ்வாய் வாழ்வாங்கு வாழவைப்பது என்று.

தீர்மானமே சுவாரஸ்யமாய் இருந்தது.

அமைதியாய் ஓடிக்கொண்டிருந்த மகாவலி வடபகுதியை எட்டமுதல் திசைதிருப்பப்பட்டது போல ஆகாயக்கடல் வெளிச்சமர் என்னைத்திசைதிருப்பிற்று.

1991 க.பொ.(உயர் தரம்) போட்டிப்பரீட்சைக்கான தயார் படுத்தலில் நான். கல்வியில் கரை காணலுக்காக நான் போராடிக் கொண்டிருக்கையில், அவர்கள் ஆகாயக்கடல் வழிச்சமரோடு போராடிக்கொண்டிருந்தார்கள்.

'குப்பி விளக்கில் குப்புறக்கிடந்து படிக்கும் தமிழா - உன் உடன்பிறப்புகள் மிதிபடுவதை நிமிர்ந்துபார்....'

இயற்கை இணைந்து அவர்களுக்காய்போடப்படடிருந்த கொட்டகையில் அது ஒலிபரப்பாகி வானலைகளில் பரவிவரும்.

அவர்களைப்போலவே அந்த ஆலமரங்கள் அகலக்கிளை பரப்பி விழுதெறிந்து நிழல்பரப்பி விழுதுகளால்சாமரம் வீசிக் கொண்டிருக்கும். எல்லோருக்குமாக.

அவர்களும் எல்லோருக்குமாகவே. தினம் தினம் 5,6ற்கு மேற்பட்ட வித்துடல்கள் அதன் கீழ்நிரையாய் தாம் நேசித்த மக்களிடமிருந்துவிடைபெற, அவர்களை இறுதியாய் தரிசித்து விடக்காத்திருக்கும்.

நிதமும் இவர்களைக்கடந்துபோகையில், உடலெல்லாம் கூனிக்குறுகும், குற்றமாய் உடலைஎரிக்கும்.

இவர்கள்....? இவர்கள் வாழ்வின் அர்த்தம்? வீரமரணத்தின் அர்த்தம்....?

இவர்கள்நிழலில் இவர்கள் உயிர்ச்சூட்டில் குளிர் காய்வதாகத்தோன்றியது. அப்போதுதான்.

ஆகாயக்கடல் வெளி முடிவுக்கு வந்தபோது நானும் என்னாலான அளவு பங்காற்றியிருந்தேன். பங்காற்றியிருந்தேன் என்பதைவிட அப்பிடியும்இப்பிடியும் உதவியிருந்தேன்.

எல்லாம் ஓய்ந்துவிட்டபோது எனக்குள் ஓயாத அலைக் குமுறல். எது வாழ்வின் அர்த்தப்படல்.

என் தாய் என்மனப் போராட்டத்தைப்புரிந்துகொண்டிருக்க வேண்டும். 'வெள்ளம் வருமுன் அணை கோலுவதாய்' அவள் நினைத்திருப்பாள். கோழி மிதித்துக்குஞ்சு சாகாது என்பது ஏனோ அவளுக்குப்புரியாமல்போனது.

பார்சல் பண்ணிவிட்டாள் கொழும்பிற்கு!

சிங்கத்தின் குகைக்குள் சிக்கவைத்துவிட்டதை என் கைது உணர்த்தியிருக்கும். புலியாம்நான்.

புலியாய் இருந்ததால் என் புழுக்கம் புரையோடியிக்காது.

விநாடியும்வாழ்வின் அர்த்தப்படுத்தலின் விலாசம் தேடியவன் விலாசமே இல்லாமல்....

என் உள்ளக்கொதிப்பு:

'காதலனைப்பிரிந்தவளின் மனம் போலவொன்று
கவிபாடிப்பரிசு பெறான் மனம் போலவொன்று
தீதுபழி கேட்டவன் மனம் போலவொன்று
செய்தபிழைக்கழுங்குமவன் மனம்போலவொன்று
நீதி பெறாவேளை துயர் மனம்போலவொன்று
நிறைபழித்தகற்புடையார் மனம்போலவொன்று
காதுமழுக்காறுடையான் மனம்போலவொன்று....' நவாலியூர் சோமசுந்தரப்புலவர் கோணமலை வெந்நீர்க்கேணிகளுக்கு செய்த ஒப்புவமை எதனாலும் ஒப்புவமை செய்துவிடமுடியாத உள்ளக்கொதிப்பு என்னது.

இதயமில்லா இரும்பர்களால் இருட்டுக்குள் புதைக்கப்பட்ட புதைந்த காலங்கள் அவை.

விடுபட்டதும் ஆசுவாசப்படுத்த அகாதியாய் வந்தேன். மீளவும் மற்றொருவன் முத்திரை குத்திவிடுவான் என பயந்தார்கள் என் உறவுகள். விளைவு பார்சலில் நான் கனடிய நகரான ரொறண்டோவில்.

புத்துயிர்ப்புப்பெறத்துடித்த துடிப்பு இரவையும் வெளிச்சமாக்கியிருக்கும். இங்கையும்; இருளின் சாயலை! இங்குள்ள இதயங்களில் கண்டுகொண்ட போது இரத்தம் சொட்டுகிறது.

ஊடகத்துறையே என் உயிர் மூச்சானது; எல்லாமே அத்துபடியாய் உண்மைகள் புரிந்தபோது உறைந்து போனேன்.

'மெய்ப்பொருள் காண்பது அறிவு'

எப்போதுமே நான் அப்பாவியாய் இருப்பது வேதனை; எல்லாவற்றையுமே காலம் தாழ்த்திப்புரிந்துகொள்வதுவேதனை; கண்டு கொள்ளப்படும் உண்மைகள் வேதனை.

உயர்கல்வி கற்ற எனக்குள்ளேயே இத்தனை போதமைகள் எனில் பாமரமக்களிடம்...?

என் தாத்தா ஊடகத்துறையில் 'பழம் சாப்பிட்டு கொட்டை போட்டவர்' என்பார்களே அவர்கள் வகை.

கனடாவில் இத்தனை தமிழ் பத்திரிகைகளா; என வாய்பிளந்த போது, என் அறியாமைக்காய் என் தாத்தா நகைத்தபோது, இவர் நகைப்புப்புரிய, வெட்டவெளிச்சமாய் சூட்சுமங்களை சுட்டிக் காட்டும் வரையில்.... இதிலையும் காலதாமதம் தான் நான்.

அனுபவங்களுக்கப்பால், தூரத்துப்பச்சையாய் யதார்த்தங்களை உணரமுடியாதசூழலை சாதகமாக்கி உலகத் தமிழர்களுக்குள் ஊடுருவியிருந்த புல்லுருவிகளை, கோடாரிக்காம்புகளை தாத்தா புட்டுக்காட்டிய போது 'பாரதியாரின்' 'முரசுப்பாடல்' தான் நினைவிற்பளிச்சிட்டது.

"வெள்ளை நிறத்தொரு பூனை
.................................
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக்கொருநிறமாகும்.
சாம்பல் நிறமொரு குட்டி - கரும்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி
பாலின் நிறமொரு குட்டி
.................................
வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் - அதில்
மானுடன் வேற்றுமையில்லை.
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இங்கு
யாவருக்கும் ஒன்றெனல் காணீர்
.................................
துன்பங்கள் யாவும் போகும் - வெறும்
சூதுப்பிரிவுகள் போனால்
.................................
இன்பங்கள் யாவும் பெருகும் - இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்'

தமிழர் உண்மை எடுத்து இயம்ப இத்தனை ஊடகங்கள்.

CTBI, ITBT, கீதவாணி, ஈழமுரசு, ஈழநாடு, உதயன், தாயகம், உலகத்தமிழர் பத்திரிகை, செந்தாமரை, தமிழர் செந்தாமரை, நம்நாடு....

தமிழர்கள் தமிழர்கள் தான் என்று பூரித்துப்போயிருந்த எனக்கு அவற்றின் நிறங்கள் சுட்டிக்காட்டப்பட்டபோது...

சை.... என்ன மனிதர்கள்... புத்திஜீவிகள் புண்ணாய் இருப்பது ஏன்....கொடையான எழுத்தாற்றல் கேடாய்கேடு வரைவது ஏன்... பாமரத்தனத்தை சாதகமாக்கி உண்மை உரைப்பதாய் உண்மைகளைப்புதைத்து குழப்பங்களை விளைவிப்பது ஏன்...

எம் உறவுகள் உருக்குலைக்கப்படுவதை, உரிமைக்காய், இருப்பிற்காய் இருப்பிழந்து போவதை எம் இருப்பிற்காய் தங்களையே ஆகுதியாக்கிக்கொண்டிருக்கும் எம் உறவுகளை, எம் தலைவரை புரிந்துகொள்ள முடியாது இருப்பது ஏன்?

உண்மை சொல்வதாய் உண்மையைப்புதைக்கும் ஊடகம் ஒன்று. ஒலிபரப்பப்பட வேண்டியவற்றை ஒலிபரப்பாது கேளிக்கைகளுக்கும். அறிவியலுக்கும் அப்பாற்பட்ட அலட்டல்களுக்கு முதன்மை வழங்கும் ஊடகம் ஒன்று: உலகத் தலைமையின் ஊடகமாய் உண்மை விளம்புவதாய் உறவு இருப்பதாய் பறைசாற்ற தமிழர் தலைமையிலும், தளபதிகளினதும் உரைகளை உறவுஊடகங்களிலிருந்து திருட்டுச்செய்து முந்திக் கொள்வதன் ஊடாய் இல்லாத் உறவைஇருப்பதான மாயையை தோற்றுவித்து முதன்மைபெறும் ஊடகமாய் ஒன்று கானல் நீராய் பிறிதொன்று.

உலகமறிய உண்மை சொல்லவேண்டியவர்கள் ஆளுக்கொரு ஊடகமாய்பூஞ்சை நிலங்களில் நஞ்சுவிதைப்பது வித்தையா?

'மெய்ப்பொருள் காண்பது அறிவு'

உயர்கல்வியை ஊட்டிய இலட்சினைபதியாது போனதா?

உயர் குழாமாய் உண்மை உணர்த்த வேண்டியவர்கள் 'சுயத்துக்காய்' உறைக்கும் உண்மைகளை உளம் கொண்டு விளங்கி மெய்ப்பொருள் காண்பாரா என் உலகத்தமிழ் உறவுகள்?

உலகத்தமிழர்களே கோடரிக்காம்புகளை இனங்காணுங்கள்.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

உரத்துக்கத்திவிட்டேன் என்று தான் தோன்றியது. உதடுகள் கூடபிரியவில்லை என்பது உறைபனியாய் பார்த்த போதுதான் புரிந்தது.

**ஆதித்தநிலா**




## இப்படியும் ஒரு கவிதை

என் உடலையே நான்
தீவட்டி ஆக்குகின்றேன்
இருளைப்போக்க -
மனிதர்களின் அன்பை ஒளிரச்செய்ய
வியட்நாமில் அமைதி ஏற்பட.......

-நாட்சிமாய்-
வியட்நாமில் 1967ல் தீக்குளித்த மாணவன் கடைசியாக எழுதிய கவிதை

## இப்படியும் ஒரு சிந்தனை

சினிமா விமர்சகன் முக்கியமாக தெரிந்து கொள்ள
வேண்டியது ஒன்றை மட்டுமே - அது
தியேட்டரில் பிறர் எவரும் கண்டு பிடிக்க முடியாதபடி
தூங்குவது எப்படி என்பதை மட்டுமே.

வில்லியம் ஆர்ச்சா

## இப்படியும் ஒரு எழுத்தாளன்

"டால்ஸ்டாய், காப்கா, துர்க்கனேவ், அன்டன் செகாவ் மாதிரி.... தமிழில் பா.சிங்காரம், சுந்தரராமசாமி, தி.ஜானகிராமன்... இவர்களைப் பார்த்தால் பிரமிப்பா இருக்கு.... என் நல்ல எழுத்தை இனிமேல் தான் நான் எழுத வேண்டும். அது முடியுமா என்று எனக்குத்தெரியேல்லை..."

-பிரபல எழுத்தாளர் வண்ணநிலவன்

## இப்படியும் ஒரு கருமி

தண்ணீரில் ஒருவன் மூழ்கிக்கொண்டிருந்தான். கரையில் நின்ற அவனின் மகன் தந்தையைக் காப்பாற்றுமாறு மற்றவர்களை கூவி அழைத்துக் கொண்டிருந்தான். தண்ணீருக்குள் இருந்து ஒரு முறை எம்பிப்பார்த்த தந்தை பதிலுக்கு மகனிடம் கத்திச்சொன்னான். "டேய் அவர்கள் வேண்டுமானால் வந்து காப்பாற்றட்டும். ஆனால் மூன்று ரூபாய்க்கு மேல் கொடுக்க ஒப்புக்கொள்ளாதே......!"

## இப்படியும் ஒரு விமர்சனம்

"இது பக்திப்படமுமல்ல, உணர்ச்சியூட்டும்
சக்திப்படமுமல்ல...
இது விளையாட்டுப்படம்....."

-முன்னர் 'திருவிளையாடல்' படம் குறித்து 'குமுதத்தில்' வெளியான விமர்சனம்

## இப்படியும் ஒரு தம்பதிகள்

"நாங்கள் குற்றமற்றவர்கள். இதுதான்
முழு உண்மை. இந்த உண்மையைக்கைவிட
மறுத்ததால் விலைமதிக்க முடியாதஎங்களின்
உயிர்களை இழக்கின்றோம். உண்மையை மறுத்து
இந்த வாழ்க்கையை திரும்பப்பெறுவது என்பது
கண்ணியத்துடன் வாழும் வாழ்க்கை ஆகாது"

-1953இல் ஒற்றர்கள் எனக்குற்றம் சுமத்தப்பட்டு அமெரிக்க சிறையில் மின்சார நாற்காலியில் இறந்த ரோஷன்பேர்க் தம்பதிகள்

## இப்படியும் ஒரு 'ஹைக்கூ' கவிதை

தகிக்கும் கோடை
தனக்குத்தானே விசிறிக்கொள்ளும்
ஒற்றைப்பனை மரம்

சிற்பி

## இப்படியும் ஒன்று

திக்கென்று இருக்கிறது
சுடுகாட்டை கடக்க நேரிடும் போது
இங்குதான்
கொண்டுவரப்படுவேனா என.....
இதை எழுதும் விரல்களில்
செல்செல்லாக சூடேறி
சாம்பலாய் உதிருமோ என....
சுமந்துவந்தவர்கள்
நெருப்பிட்டுத்திரும்புகையில்
யாது பேசிக்கொள்வார்களென.....
தெரிந்தால்
திருப்தியுறுவேன்
கால் பாவாத உயிர்நுனியை
மயானத்து மரத்தின்
கிளையொன்றில் முடிச்சிட்டு
வெளவால்களுடன் தொங்கியபடி...
எப்பிடியாவது பார்த்து விட வேண்டும்
எரியும் என்னை.


எஸ். பாபு

**பொறுக்கி**

## பயணத்தின் அனுபவத்திலிருந்து

# பீனிக்ஸ்ஸாய் எழும் அன்னையின் பதி





ஆவணி பதினைந்தாம் நாள் வரப்போகிறதென்றால் எல்லோரின் வாய்களும் மடுவுக்கு போகவில்லையா....? என்றே கேட்கத்தூண்டும். அன்று தான் "மடுத்தாயின் விண்ணேற்றப் பெருநாள்" நடந்தேறும்

கிளிநொச்சியிலிருந்து ஆரம்பமாகி நீண்ட பயணத்தின் பின் மடுத்தேவாலய நுழைவாயிலுக்குள் இரவு 8.00 மணியளவிலே வாகனம் சென்றபோது எங்கு பார்த்தாலும் தரப்பாள் கொண்டும், சேலைகளைச்சுற்றிக் கட்டியும் குடும்பம் குடும்பமாக சமையல் சாப்பாடுகளோடும் அமைதியான குதூகலத்தோடும் இருந்ததைக்காணமுடிந்தது.

ஒரே வாகனங்களும், தங்கள் தங்கள் பாடுமாக பயமற்றிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாயிருந்தது. கடந்த கால இடப்பெயர்வுகள் மனதில் தோன்றி மறைந்தாலும் இனமத பேதங்களை மறந்து ஒன்று கூடவைக்கும் விந்தை அன்னையின் ஆலயத்துக்கே சொந்தமானதாக இருந்தது.

வரவேற்பு மாதா முன் தங்கள் மனக்கவலைகளைத் தமக்கே உரித்தான மொழிகளில் மௌனமாகவே கொட்டித்தீர்த்து கண்ணீர் வழிய மன்றாடியதை மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் பார்த்திருந்தாள்.

ஓங்கி வளர்ந்த அந்த மரங்களின் கீழும் ஆலய முன்றலிலும் மக்கள் வெள்ளம் கூடிக்கூடித் தங்கள் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதும் ஆலயத்தின் உட்பிரகாரத்தினுள் போவதற்குக் கூட முண்டியடித்து இடிபடாது வரிசையில் நின்று அமைதியாக நகர்ந்து தங்கள் காணிக்கைகளை மாதா முன்வைத்து மன்றாடியதில் நேர்த்தியான அழகு ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அவர்களோடு நாமும் எங்கள் வழிபாட்டினை முடித்துக் கொண்டு வெளியே வந்தபோது "அங்க பாருங்கோ அந்த இடத்தில தான் ஷெல்லடிச்சு சனங்கள் செத்ததுகள்" என்று ஒருவர் காட்டிய திசையை நானும் பார்த்த போது என் மனமும் ஒரு கணம் விம்மியது....

ஓயாத அலை - 03 சண்டை நடந்தபோது இராணுவத்தினர் தப்பிஓடி "ஆயுதங்களுடன்ஆலய வளவுக்குள் நடமாடக்கூடாது" என்ற இறுக்கமான கட்டுப்பாட்டையும் மீறி அன்னையின் ஆலயத்தை காலுக்குள் போட்டு மிதித்தனர். அடைக் கலம் தேடி ஓடிவந்த மக்கள்மீது கொடூரமாக எறிகணையை வீசி 36 அப்பாவிப் பொதுமக்கள் அன்னையின் கண்முன் துடிதுடித்து இறந்தபோதும், காயப்பட்டவர்களின் குருதி ஆலயச்சுவர்களில் பட்டுத்தெறித்தபோதும், இராணுவம் நரபலி வேட்டை ஆடிய போதும் அன்னை மௌனமாக இருந்தாளில்லை. அவர்கள் விரட்டி அடிக்கப்பட அன்னையே காரணம் என அந்த ஊர்ம க்கள் மனம் ஆறினர். ஆனாலும் அந்தக்கறைபடிந்த நாளும் கொடூரச்செயலும் எப்படித்தான் பூசி வெள்ளை அடிக்கப்பட்டாலும் வரலாற்றுப்பதிவில் என்றும் அழியாது நிலைபெறும்.

குருவானவர் கணீரென்ற குரலில் திருப்பலி ஒப்புக்கொடுத்த போது எழுந்து நின்றும், முழந்தாளிட்டும் குருவானவர்கள், திருக்கன்னியர், மற்றும் தமிழ், சிங்களப்பக்தர்களின் அந்தந்த நேரத்திற்கேற்ப செபங்களையும் பதில் மொழிகளையும் உச்சரித்துக் கொண்டிருந்தனர்.

"இன்று போர் நிறுத்தப் பட்டுள்ளது. அழிவுகளும், உயிரிழப்புகளும் அதனால் மக்கள் அனுபவித்தபல்வேறு இன்னல்கள் எல்லாம் ஓரளவிற்கு நின்றுவிட்டன. ஆனாலும் கலாச்சாரச் சீரழிவுகள் என்ற பேரில் சிக்கியுள்ளனர். இதில் சகலரும் அவதானமான முறையில் கலாச்சாரச்சீரழிவுகளில் இருந்து எமது சமுதாயத்தை காப்பாற்ற வேண்டியது சகலரின் பொறுப்பாகும். இல்லையெனில் கலாச்சாரச் சீரழிவு மோசமாகி எமது சமுதாயம் அழிவுக்கே செல்லும்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதும் பொருட்கள் வடக்கே வருகின்றன. யாழ்ப்பாணம் வியாபாரமையமாக உள்ளது. கடந்த காலம் எப்படி வாழ்ந்தோம் என்பதைச் சிந்தியுங்கள்." என்று யாழ் மாவட்ட கத்தோலிக்கஆயர் அதி.வண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மும்மொழிகளிலும் உரையாற்றினார்.

அன்னையின் திருச்சொரூப பவனி ஆலய வளவைச் சுற்றி வந்தபோதும் ஆனந்தக் கண்ணீர் மல்க அன்னையின் திருப்பாடல்களை அமைதியாகப்பாடிக் கொண்டு தங்கள் கவலைகளை அன்னையிடம் முறையிட்டனர்.

**பொ. நந்தினி**

பூசைகள் முடிய நாம் எமது இருப்பிடம் வந்தபோது சிலரோடு உரையாடவும் முடிந்தது.

"முந்தி புலிகள் பற்றிய பயம், சண்டை நடக்குமோ என்று தான் இங்க வாறதக்குறைச்சுக் கொண்டம். ஆனால் இப்ப சண்டையில்ல சமாதானம் தானே பயமில்லாம பூசையில வந்து கலந்து கொண்டம்" என்றும்

"எங்கட புத்தாவும் ஆனையிறவுச்சண்டையில இறந்து விட்டார். புலிகள் பற்றிய பயம் சமாதான காலத்தில் எப்படியோ இல்லாது போய்விட்டது" என்றும்

"எங்களுக்குச் சண்டை விருப்பமில்ல. நாங்க ஒற்றுமையா, சமாதானமா தெமிழங்களோட சந்தோசமா இருக்கிறதையே விரும்புறம்" என்றும் கூறியவர்கள் தமிழர்களல்ல.

எங்கட குடும்பத்தோட சேர்ந்து போட்டோ எடுக்க வாங்க, பாற்சோறு சாப்பிடுங்க என்றும் சகோதரத்துவப்பண்போடு உபசரித்த அணுகுமுறை அலாதியானது.

ஆனாலும் வடுப்பட்ட மனதில் எளிதில் நம்பிக்கை வேரூன்றிவிட அது போதுமானதல்லவே.

வழமைக்கு மாறாக ஆலயத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் வியாபார ஸ்தலங்கள் அமைந்திருந்தமுறை ஆலயத்தின் புனிதத்தன்மையை மேலும் பேணுவதாக இருந்தது.

அதற்கு சற்று முன் இருந்த பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லத்தில் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கும் மண் காத்த மறவர்களுக்கும் அஞ்சலியைச்செலுத்தி விட்டு மனதில் ஒருவித அமைதிதோன்றினாலும், அன்று நடந்த அவலமான நிகழ்வுக்கும் இன்று நடந்த கோலாகலமான விழாவுக்கும் ஒரு சமரசத்தைக் காணமுடியாத ஆதங்கத்தோடு.... கிளிநொச்சிக்கான பயணத்தைத்தொடர்ந்தேன்.

---

# நேர்நோக்கு

## விசித்திரமான உத்தரவு

**வடமராட்சி கடற்தொழிலாளர்** சங்கத்திற்கு சிறிலங்கா பொலிசார் நூதனமான/விசித்திரமான உத்தரவொன்றைப்பிறப்பித்துள்ளனர். இது சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபரினால் அனுப்பப்பட்ட உத்தரவு எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதாவது வடமராட்சிக்கடற்பரப்பில் அத்துமீறிப்பிரவேசித்து அப்பகுதி மீனவர்களுக்குப்பெரும் நாசங்களை விளைவித்து வரும் இந்திய மீனவர்களைப்பிடித்தால் உடனடியாகத் தம்மிடம் ஒப்படைக்கவேண்டும். தவறினால் அவர்களைப்பிடிக்கும் உள்ளூர் மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுமே அந்த உத்தரவாகும்.

இவ்வாறே சுழிபுரத்தில் மீனவர்களின் வலைகளை அறுத்த இந்திய மீனவர்களைப் பிடித்தமைக்காக சுழிபுரம் பகுதி மீனவர்களின் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் அவர்கள் தொழில் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. அதாவது அவர்களின் வாழ்வுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது.அவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவிற்கும் அவர்கள் செய்த குற்றம் தான் என்ன?

கடந்த இருபது வருடங்களாக தொடர்ந்த யுத்தத்தாலும், சிறிலங்கா அரசாங்கங்கள் பதினைந்து வருடங்களுக்கு மேலாக அமுல்படுத்தியுள்ள கடல் வலயத்தடைச்சட்டத்தாலும் வடக்கு கிழக்கில் வாழும் கடற்தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்துவருகின்றனர்.

இடையிடையே ஏற்பட்ட சமாதானச்சூழ்நிலைகளில் கூட இக்கடல் வலயத்தடைச்சட்டத்தை நீக்கி இவர்கள் கடற்தொழிலை மேற்கொள்ள சிறிலங்கா ஆட்சியாளர்கள் முற்றாக மறுத்து வந்தமையால் தொடர்ச்சியான பாதிப்புக்கு உட்பட்டவர்களாக கடற்தொழிலாளர்கள் உள்ளனர்.

இதேவேளை தொடர்ச்சியாக இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல்மார்க்கமான தாக்குதல்கள் இவர்களுக்கு பாரிய உயிரிழப்புகளையும், அவையவ இழப்புகளையும் உடமை இழப்புகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இவ்வளவு இழப்புகளுக்குப்பின்பும் இன்று தோன்றியுள்ள சூழ்நிலையிலும் கூட இவர்களின் தொழில்வாய்ப்பு என்பது நிரந்தரமற்ற ஒன்றாகவே உள்ளது. இது கடற்படை உயரதிகாரிகளிலிருந்து கரையோரங்களில் காவலரண்களிலிருக்கும் சாதாரண சிப்பாய்களின் மனநிலைக்கு ஏற்ப மாறுபட்டதாகவே இருந்து வருகின்றது. தொழிலுக்குச்செல்ல அனுமதிப்பதிலிருந்து தொழில் செய்யும் நேரம், தூரம் உபகரணங்கள் வரை கடற்படையினரின் கைகளிலேயே இவையெல்லாம் உள்ளன. இவர்களுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள் எல்லாம் வேளைக்கொன்றாகவே இருந்துவருகிறது.

இவ்வாறு இந்த நிபந்தனைகளுக்கெல்லாம் உட்பட்டு தொழிலுக்குச்செல்வோரை கடற்படையினர் தமது விசைப்படகுகளால் மோதி உயிர்,உடமை இழப்புகளைச்சந்தித்த சம்பவங்களும் உண்டு. சூழ்நிலைகளின் நிமித்தம் குறிப்பிட்ட நிபந்தனைக்கு உட்பட்டு கரைதிரும்பாத மீனவர்களுக்கு கடற்படையினர் பலவிதமான தண்டனைகளை விதித்து வருகின்றனர்.

ஆனால் இந்திய மீனவர்களால் இவர்கள் வைத்திருக்கும் அற்பசொற்ப உடமைகள் அழிக்கப்படுவதைத் தடுக்க கடற்படைக்கு முடியவில்லை. முடியவில்லை என்பதல்ல மனமில்லை. அதிலும் மேலாக வேண்டுமென்றே இதனை அனுமதிக்கிறது என்பதே உண்மையாகும்.

யுத்தம் நடைபெற்றவேளை புலிகளுக்கு உதவுவதாகக்கூறி இந்திய மீனவர்களைச் சுட்டுக்கொன்று வந்த சிறிலங்காக்கடற்படை இந்திய மீனவர்கள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளைத்தடுக்கத்தம்மிடம் போதிய வளம் இல்லை எனக்கூறுவதும் இதைவிடமுக்கியமான வேலைகள் தமக்கு இருப்பதாகக் கூறுவதும் கேலிக்குரிய காரணமாகும். அவ்வாறு அதுதான் உண்மையானால், சிறிலங்காக்கடற்படை தமிழ் மக்களைப்பாதுகாக்கவே நிலைகொண்டிருப்பதாகக்கூறுவதைக்கைவிடவேண்டும்.

இந்திய மீனவர்களின் இந்த நடவடிக்கைகள் குறித்து சிறிலங்கா அரசாங்கம், இந்திய அரசாங்கம், சிறிலங்காக்கடற்படை, போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு சர்வதேச நாடுகள் உட்பட பலதரப்பினருக்கும் பல தடவைகள் உள்ளூர்கடற்தொழிலாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இதனைக்கட்டுப்படுத்துமாறுவேண்டுகோள்விடுத்துள்ளனர். தமது துயர நிலை குறித்து இவ்வாறு அத்துமீறிவரும் இந்தியக்கடற்தொழிலாளர்களிடம்கூட எடுத்துக்கூறியிருக்கின்றனர்.

இவையெல்லாம் பயனற்றுப்போய்விட்ட நிலையில் தான் அவர்களைப்பிடிக்கும் முயற்சியில் இறங்கவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இவ்வாறான நடவடிக்கைகளின் போது முன்னர் இந்திய மீனவர்களின் தாக்குதலுக்கும் சிறிலங்கா கடற்படையினரின் தண்டனைக்கும் கூட உள்ளாகி இருக்கின்றனர். ஆனால் இவற்றையெல்லாம் விட அவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு பெரிதாக இருப்பதே இவ்வாறான பிடிக்கும் நடவடிக்கைக்கு காரணமாக அமைந்தது.

ஆனால் இவற்றுக்கெல்லாம் தீர்வுகாண முயலாத சிறிலங்கா அரசாங்க இயந்திரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கே மேலும் உத்தரவுகளையும் நிபந்தனைகளையும் விதிக்கிறது. தண்டனை வழங்கப்போவதாகவும் மிரட்டுகிறது.

சட்ட விரோதமான முறையில் உள்நுழைந்து அழிவு வேலைகளைப்புரியும் இந்திய மீனவர்களின் நடவடிக்கைகளை சிறிலங்கா அரச படைகள் கட்டுப்படுத்துமானால் கடற்தொழிலாளர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஏன் ஈடுபடப் போகிறார்கள்?

இந்நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்திவிட்டு அவர்களைப்பிடிக்க கூடாதென உத்தரவிடுவது நியாயமானதாக இருக்கும். ஆனால் மறுதினமே நெடுந்தீவில் 60 மீனவர்களைப் பிடிக்கக்கூடிய சூழல் நிலவுகையில், சிறிலங்காப்பொலிசாரின் இந்த உத்தரவும் எச்சரிக்கையும் பெரும் விரக்தியை ஏற்படுத்தக்கூடியதாகும்.

இது தமிழ் மக்கள் என்றோ எடுத்து விட்ட முடிவை உறுதிப்படுத்தும் செயலுமாகும்.

**வேலவன்**

# சனசமூக நிலையங்களிற்கு வெள்ளிநாதம் இலவசம்

ஈழநாதம் பத்திரிகையின் வாரவெளியீடான வெள்ளிநாதத்தினை சனசமூக நிலையங்களிற்கு காலாண்டிற்கு இலவசமாக நிலவன் வெளியீட்டகத்தின் நிதி ஆதரவுடன் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

கீழ்காணும் விபரங்களோடுஎம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

01. சனசமூக நிலையங்களின் விபரத்துடன் நிர்வாகத்தினரின் கடிதம்.
02. அந்தந்த கிராமசேவையாளர்களிடம் உறுதிப்படுத்திய கடிதம்.
03. சனசமூக நிலையத்திற்கு அண்மையிலுள்ள ஈழநாதம் விற்பனை முகவரின் முகவரி.

குறிப்பு :-
நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்ட திகதி யிலிருந்து காலாண்டிற்கு வெள்ளிநாதம்வழங் கப்படும்.

என்பவற்றுடன் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆசிரியர்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.



மிக விரைவில்... வி.பி.யோசப் எழுதும்

# "பாடசாலை போக வேணும்"

வெள்ளிநாதத்தில் (மொழிபெயர்ப்புத் தொடர்)





# A/L பரீட்சை முடிவுகள் உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறதா?

இன்னும் உங்கள் காலத்தை வீணாக்காதீர்கள்.....

உங்கள் எதிர்காலம் தொடர்பான கவலையை எம்மிடம் விடுங்கள்...

உங்களை இன்னும் மூன்றே மூன்று வருடத்தில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றின் கணனிப்பட்டதாரி ஆக்கிக்காட்டுகின்றோம்

உங்கள் எதிர்காலக் கனவுகளுக்கு நாங்கள் வழிகாட்டி ஊக்கம் அளிக்கக் காத்திருக்கிறோம்.

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.**

## வழிகாட்டல் கருத்தரங்கு

**ஆகஸ்ட் 23ம், 24ம் திகதிகளில்**

காலை அமர்வு 10.00மணி மாலை அமர்வு 4.00மணி

இடம் - IIS பிரதான மண்டபம், யாழ்ப்பாணம்.

**IIS, John Keells Institute** துறைசார் வல்லுனர்களின் வழிநடத்தலினால் நடாத்தப்படும் முற்றிலும் இலவச இக் கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர்காலத்தை தீர்மானியுங்கள்

இக்கருத்தரங்கில் மாணவர்களுடன் பெற்றோரும் கலந்து கொள்ளமுடியும்.

"IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி" சி-8362

**INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )**
**100, Clock Tower Road, Jaffna.**
T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk


# 4ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 05 - 05 - 1977



தாயக மண்ணில் 22 - 08 - 1999

## கப்டன் - இளங்கீரன்
**(நமசிவாயம் — உதயகுமார்)**
**யாழ்ப்பாணம்**

"வீழ்ந்து விட்டாய் எம் விழு தே!
உனைக் காணத்துடிக்கின்றோம் ஐயா!
தானை கொண்ட தலைவன்
சேனை தனில் அணிவகுத்த - உன்
பெயர் பொறித்து வந்தது உன் உருவம்
எம் செல்வமே!
நாளை மலரும் ஈழமதில் தினம் - உன்
நினைவுகளை சுமந்து வாழ்ந்திடுவோம்"

இவருடன் வீரகாவியமாகிய மேஜர் நிருபன், லெப்.மலரவன், 2ம் லெப்.தியாகன் ஆகியோரையும் இந்நாளில் நினைவுகூருகின்றோம்.

த.முகவரி
விஸ்வமடு - கிழக்கு,விஸ்வமடு

உன் நினைவுடன்
வாழும் குடும்பத்தினர்

# 31ம் நாள் அழைப்பிதழ்



பிறப்பு -23.06.1956
இறப்பு -25.07.2003

அன்னாரது மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 23-08-2003 சனிக்கிழமை அதாவது நாளை எமது இல்லத்தில் நடைபெறும் 31ம் நாள் வீட்டுக் கிரியை நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## அமரர் வேலுப்பிள்ளை நவரத்தினம்
(குமரன் வெதுப்பக உரிமையாளர்)

2ம் வட்டாரம்,
கோம்பாவில் வீதி,
புதுக்குடியிருப்பு.

மனைவி,
பிள்ளைகள்.



# அனுமார் பதில்கள்

● **அனுமாரே! எரிச்சல், பொறாமை என்பது ஆண்களுக்கா பெண்களுக்கா அதிகம்? எப்படி வந்தது?**

தணிகா,
வட்டக்கச்சி.

மனிதருக்கு. குரங்கு மனிதனாகிய போது வந்தது.

● **அரசு - புலிகள் பேச்சு வார்த்தை அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகுமாம் இதைப்பற்றி அனுமார் நீர் என்ன கூறவிடம்புகிறீர்?**

ஜெ.ஜெயூரன்,
மு/விசுவமடு.ம.வி.

இந்த இதழின் மூன்றாம் பக்கத்தில் ஜீ.கே.யும் அப்படித்தான் கூறியிருக்கிறார்.

● **அன்புள்ள அனுமாரே! படிக்காத முட்டாளையும் படித்துவிட்டும் முட்டாளாய் இருப்பவர்களைப்பற்றியும் தங்கள் கருத்தென்ன?**

ரஜனிகாந்,
பூனகரி.

எங்கோ படித்தது...
மனிதன் கடமைப்பட்டிருப்பது மூளைக்கல்ல, முயற்சிக்கே. கடவுள் வரங்களை விற்பனை செய்கிறான்; முயற்சியே அவற்றின் விலை.

● **அன்பின் அனுமாரே! உங்கள் அம்மா அப்பாவுடன் நின்று எடுத்த போட்டோவை, நான் ஒரு இடத்திலும் காணவில்லை அந்த போட்டோவை ஒரு தடவை இதில் பிரசுரிப்பீர்களா?**

பி.எஸ்.செல்வன்,
பேராலை,பளை.

''என் அப்பன் வாயு தேவனை நான் எப்படித்தான் படம் பிடிக்க.

● **அனுமாரே! சிங்களவர்க்கும் இடைக்கால நிர்வாகம் வேண்டுமாமே?**

யோ.கவின்சிகா,
நெடுங்கோணி.

அடியடா புறப்படலையில எண்டானாம்.

● **அன்பின் அனுமார் ஐயா! படையினரின் போர்நிறுத்த மீறல்கள் நிறைய இருக்க குரங்குப் பாஞ்சான் முகாமை தூக்கி தலையில் வைத்துக்கொண்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதித்தலைவர் ஆடுகிறாரே புலிகளின் யுத்த நிறுத்த மீறல் என்று?**

யோ.ஜினோகன்,
நெடுங்கேணி.

''பொய் சொல்ல அவர் மனசுக்குத் தெரியவில்லை - சொன்னால் பொய் பொய் தானே.''

● **ஹாய் அனுமாரே தற்காலத்தில் குறைந்த வயது ஆண்கள் கூடிய வயது பெண்களை விரும்பி மணமுடிக்கிறார்கள். இவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

சு.கருணா,
திருவையாறு.

காதலுக்கு கண்ணில்லை என்றபோது வயதேது.

● **அனுமாரே! வவுனியாவில் இருக்கின்ற இளைஞர்கள் பெரும் பாலனோர் மது, மஞ்சள் பத்திரிகை சினிமா இவை மூன்றிலும் மூழ்கியுள்ளனர். இவர்களை திருத்த ஒரு வழி சொல்லுங்களேன்!**

சுகந்தன்,
வவுனியா.

'அயல் வீட்டுச் சப்பாத்துச் சகோதரர்களை' அனுப்ப வழிதேடினால் இதற்கு விதி பிறகு தானாய்ப் பிறக்கும்.

● **டியர் அனுமார்! தற்பொழுது இளஞ்சமுதாயம் சீர்கெட்டுப் போவதுபற்றியும் எதிர்காலம் பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?**

கு.அன்பழகி,
தமிழீழம்.

வரலாறு முழுவதும் இந்தக் கேள்வி இருந்தது. இனியும் இருக்கும்.

● **இடைக்கால நிர்வாகம் கைகூடும் பட்சத்தில் நமது பிரசசினைகள் எல்லாம் முடிவுக்கு வருமா?**

க.அப்பன்,
கிளி சாந்தனூர்.

அதற்காகவா போராடினோம்! அது யாத்திரையில் தண்ணீர்ப் பந்தல் சர்க்கரைத் தண்ணீர். பருகி தாகம் ஆறலாம்.

● **வணக்கம் அனுமார் அவர்களே நண்பர் ஒருவருக்கு சிக்கனம் பற்றி - பதில் பார்த்து இன்புற்றேன். கடி ஜோக் ஒன்று கூறுங்கள்!**

க.அப்பன்,
கிளி சாந்தனூர்.

ஐரோப்பாவின் கோடை கால விடுமுறையில் இங்குவந்த நண்பனிடம் ஒரு இளைஞன் கல்யாண வீட்டில் கட்டியிருந்த வாழையைக் காட்டிக் கேட்டான். ''இதை ஏன் கட்டுகிறார்கள் என்று சொல்பார்ப்போம்''

பலபதில் சொல்லிக் களைத்துப்போன நண்பன், ஏன் எனக் கேட்டபோது ''கட்டாவிட்டால் விழுந்து விடுமே என்பதற்காக'' என்றான்.

● **அன்பின் அனுமாரே! நியாயத்தை தட்டிக்கேட்டால் எம்மை தட்டிக்கழிக்கின்றனர் இதற்கு என்ன செய்யலாம் அனுமாரே?**

கே.நந்தினி,
அக்கராயன்.

நாட்டுப் பிரச்சினையே அதுதானே.

● **அனுமாரே! சீனா இலங்கைக்கு உதவி செய்வதாகச் சொல்லி இருக்கின்றது. அது சாத்தியமாகுமா?**

மா.நகுலன்,
உடையார்கட்டு தெற்கு.

அழகான இச்சிறு தீவில் எவருக்குத் தான் ஊடல் இருக்காது அதுவும் அதுவாகவே தன்னை அனுபவிக்கும் படி கேட்டு நிற்கும் போது!

● **இந்திய மீனவர்கள் ஏன் மன்னார்க் கடலில் கண்வைத்துள்ளார்கள்?**

சீதா வடிவேலு,
அக்கராயன்குளம்.

அங்கு பொன்னாக வல்லவா விளைகிறது மீன்.

● **வறுமைக்கு எதிராக போராடவேண்டும் என இந்திய சுதந்திர தினத்தில் வாஜ்பாய் பாக்கிஸ்தானுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இது பற்றி உமது மனதில் தோன்றுவது என்ன?**

எ.றாகவி,
கொக்குவில்.

''பறக்க வேண்டும் ஒரே சின்னக் கொடி அது பஞ்சம் இல்லை எனும் அன்னக் கொடி''

●

# முகப்பின் பின்னணியில்


திருகோணமலை கோட்டைவாயில். (Frederick) பிரட்டிக் கோட்டையின் முகப்பு. மஞ்சளும் கறுப்புமான வர்ணம்.

புகைப்படம் எடுப்பது கூட அவ்விடத்தில் தடை. முன்னாலிருக்கும் சிப்பாயின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு எடுத்துக் கொண்ட புகைப்படம். இடது கரைச்சுவரில் வர்ணப்பூச்சின் மேலாக தழும்புகளான தோற்றம். இன்னும் உற்றுப்பார்த்தால் புரியும் அது ஒருகல் வெட்டு. திருகோணமலையின் சரித்திரத்தை தமிழரின் வரலாற்றை எடுத்தியம்பும் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க கல்வெட்டின் கதி எப்படிபோய் விட்டது எனப் பார்த்தீர்களா? கோணேசர் ஆலயத் திருப்பணி பற்றிய இக் கல்வெட்டை மூடிமறைப்பதால் மொத்த தமிழர் வரலாற்றையே மூடிமறைக்கப்பார்க்கிறது இராணுவ இயந்திரத்தை முடுக்கி விடும் அரசு. அதை கண்டு பிடிக்க விடக்கூடாது என் பதில் ஒவ் வொரு சிப்பாயும் கூடவே கவனமாயிருக்கிறான் என்றால் பாருங்களேன். முன் அட்டையின் பின்னணியில் தெரிவது கந்தரோடையிலமைந்த வரலாற்று மையம். அவை யாருடையவை என்பதறிந்தோ என்னவோ கந்தரோடையை பெயர் மாற்றவும் அவற்றை பாதுகாக்கவும் எடுக்கும் சிரத்தையும் மிக வேகமாக இருக்கிறது.

ஆனால் தமிழர் வரலாற்றின் கதி... தமிழர்களை போலவே!

**படங்கள்,**
**கோ.சி.கலைக்கதிர்.**

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –32



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –32

........................................
........................................
........................................
........................................

பெயர் : ........................
முகவரி : ........................
........................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –31



**ப.கண்ணன்,**
**இல.551.இராமநாதபுரம்**
**வட்டக்கச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

உன்முகத்தில் ஏக்கம் -
உன்மனதினில் தாக்கம் -
குடையில்லாமல் நீ பட்ட கலக்கம்
உனக்கு இயற்கை தந்த பதக்கம்!

### பாராட்டுக்குரிய வரிகள்

*கொழும்பு போன மாமா கொண்டு வருவார்*
*அழகான தொப்பி என்றிருந்தேன்*
*கழுத்துறையில் மாமா இருப்பதாக கடிதம் வந்தது.*
*அழகான தொப்பி இது போதும் எனக்கு.*

க.இரத்தினசிங்கம்
கிளிநொச்சி.

*போரின் துயரால் உடமைகள் இழந்தும்*
*வெயிலின் துயரால் இலையிலா புகலிடம்!?*
*வேதனைகள் வேண்டாம். வீறுடன் எழுந்திடு*
*சோதனைகள் இன்றி சாதனைகள் இல்லை.*

கி.கிருபாலினி
தருமபுரம்.

*தாமரை இலைதானா உனக்குத்தஞ்சம்*
*தவழும் தமிழீழம் தானடா இது*
*நாளைய உலகில் கால் பதிக்க நீயும்*
*நாணமின்றி நடையைப்போடடா.*

மலைமகள்
வட்டக்கச்சி.

*வெயில் வெப்பம் தணிக்க*
*குடைபிடிக்கவேண்டிய பிஞ்சு*
*வறுமையின் கோரத்தால் தலை மேல்*
*இலை வைத்து வாடுகிறது இங்கு.*

இ.பிரதீபன்
கிளிநொச்சி.

*ஒற்றைச் சூரியனின் சூடு தாங்காமல்*
*பற்றைச் செடியில் பறித்து இலையணிந்து*
*பெற்றவள் எங்கே? என்றா மகனே*
*பீதியுடன் தேடுகிறாய்.*

எஸ்.கஜனி,
தர்மபுரம்.

*தலைமேல் ஆதவன் எரிப்பு*
*தலையில் இலையால் காப்பு*
*குறு விழியில் ஏன் இந்த நெருப்பு*
*குழந்தாய் உனக்கு வேண்டும் சிரிப்பு*

அ.காவ்யா,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு வழங்குகின்றது. கிளிநொச்சி.

கருத்துக்களே, படைப்பின் வேர்கள். - எர்னெஸ்ட் டிம்னெட்

## 6ம் ஆண்டு நினைவில்



தோற்றம் 15-12-1973 | வீரச்சாவு 26-08-1997

### கப்டன் கோகிலா

இராஜேந்திரம் மைதிலி
சுன்னாகம் தெற்கு யாழ்ப்பாணம்.
(வரைபடப்பிரிவு மாலதி படையணி)

என்றும் நீங்காத நினைவுடன்,
அன்புத்தம்பி.


(3481)

லண்டனுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள தமிழீழ வலைப்பந்தாட்ட அணி அங்கு தாம் கலந்து கொண்ட போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிகளைக் குவிக்கின்றது. வேல்ஸ் நகரைச் சேர்ந்த நியூரவுன் அணியையும் இங்கிலாந்து சுறுப்பினத்து வெம்பிளி என்ற பிரபல அணிகளையும் தமிழீழ வலைப்பந்தாட்ட அணி வென்றுள்ளது.






## ஐரோப்பாவில் நம்மவர்கள்




கொள்ளையெழில் நல்லூரில் குடியமர்ந்த குருபரனே! புள்ளி மயில் மீது வந்து புவனமதைக்காருமையா!

# பாலகிருஷ்ணா ஆபரண மாளிகை



# BALAKRISHNA JEWEL HOUSE

இல:616, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி:8375)

நல்லூர் நாயகன் தேரேறி வரும் நாளில் எல்லோர் மனங்களும் இன்பம் அடைக!



## நியூ நகுலா ஜுவல்லறி

இல:74,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். T.P-021-222 5511

## நியூ லலிதாஸ் ஜுவல்லறி

இல:171,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். T.P-021-222 3433

## நகுலா நகைமாடம்

இல:74,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். T.P-021-222 5511

(சி:8376)

யாழ் நகரில் மின்னிடும் தங்க நகைகள் விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்.

# EXPOAIR

*your friend in the skies*

## எக்ஸ்போ எயார்

யாழ்-கொழும்பு பயணத்தின் போது றோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்- 021-2223891, 021-2226297, 074 512666, 01-360291, 0712-348888, 0712-349999, 01-360290,

e-mail- jaffna@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.